# உதயன்

சுடர் 30 | கதிர் 336 | வள்ளுவர் ஆண்டு 2046 | ஐப்பசி 11, புதன்கிழமை 28.10.2015


30°c - 25°c
மழைக்கான சாத்தியம் உண்டு

## மீனவரின் சடலம் கரையொதுங்கியது

கரணவாய், ஒக்.28
மீன்பிடிக்கச் சென்று கடலில் காணாமற்போன இளைஞனின் சடலம் செம்பியன்பற்றுக் கடற்கரையில் நேற்றுக் கரை ஒதுங்கியது.
உடுத்துறையைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராசா ஜீவகுகன் (வயது 23) பக். 24

# பொதுமன்னிப்பே வேண்டும் அரசியல் கைதிகளுக்கு

## ஜனாதிபதி, பிரதமருடன் பேசவுள்ளேன் என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்



கொழும்பு, ஒக்ரோபர் 28
சிறைச்சாலைகளில் நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை அரசு பொதுமன்னிப்பில் விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் பேச்சு நடத்தவுள்ளேன் என்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்று உதயனிடம் தெரிவித்தார்.
தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கமுடியாது என்றும், நீண்டகாலம் தடுப்பிலுள்ள கைதிகளுக்கு நவம்பர் மாதம் முதல் வாரத்துக்கு முன்னர் சட்டபூர்வமான பிணை வழங்குவது என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின்போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அதன் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசு பொதுமன்னிப்பில் தங்களை பக். 24

# உக்கிரமடைகின்றது மீனவர்கள் விவகாரம்

## 35 இந்திய மீனவர் நேற்று ஏழு படகுகளுடன் கைது



வடமராட்சி, ஒக். 28
இந்திய-இலங்கை மீனவர்கள் கைது விவகாரம் மேலும் உக்கிரமடைகின்றது. இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை மீறி மீன் பிடித்ததாகத் தெரிவித்து நேற்று அதிகாலையில் யாழ்ப்பாணம், மன்னார் கடற்பரப்புகளில் வைத்து 7படகுகளுடன் 35 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இலங்கைச் சிறைகளில் உள்ள 86 இந்திய மீனவர்களும் இன்று விடுதலை செய்யப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ள பக். 24

## நீரில் மூழ்கி உயிரிழப்போர் எண்ணிக்கை யாழில் உயர்வு

யாழ்ப்பாணம், ஒக். 28
இந்த வருட ஆரம்பத்தில் இருந்து இதுவரை நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37 ஆகக் காணப்படுவதாகவும், இவர்களில் 6 பேர் சிறுவர்கள் என்றும் யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்டவைத்திய அதிகாரி உ.மயூரன் தெரிவித்துள்ளார்.
பெற்றோரின் பிள்ளைகள் மீதான கவனவீனம், வீட்டுக்கிணறுகளில் காணப்படுகின்ற பக். 24

## 4 1/2 லட்சம் படையினரையும் பயன்படுத்தினால் 6 மாதத்தில் போதைப்பொருளை ஒழிக்கலாம்

கொழும்பு, ஒக். 28
நாட்டிலுள்ள நான்கரை லட்சம் படையினரையும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் ஆறு மாத காலத்துக்குப் பயன்படுத்தினாலே, நாட்டிலிருந்து போதைப்பொருளை முழுமையாகத் துடைத்தெறிய முடியும்.
இவ்வாறு பயங்கர மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் நிலங்க சமரசிங்க தெரிவித்துள்ளார்.
நாட்டில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து பக். 24

## இலங்கைக் கடற்பரப்பில் விழவுள்ள மர்மப்பொருள்

### நாசா விஞ்ஞானிகள் எச்சரிக்கை



நியூயோர்க், ஒக்.28
வானத்தில் இருந்து பூமியை நோக்கி வேகமாக வந்து கொண்டிருக்கும் மர்மப் பொருள் ஒன்று அடுத்த மாதம் 13ஆம் திகதி இலங்கைக் கடற்பரப்பில் விழக் கூடும் என்று நாசா விண்வெளி நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.
வானில் சுற்றிக்கொண்டிருக்கும் அடையாளம் தெரியாத மர்மப் பொருள் ஒன்றே பக். 24

## யாழில் நேற்று கடும் மழை

யாழ்ப்பாணம், ஒக், 28
யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்றுக் கடும் மழை பெய்துள்ளது. வடமராட்சிப் பகுதியில் நேற்றுப் பொழிந்த கன மழை காரணமாக மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.
காலை 9 மணிக்குப் பொழிய ஆரம்பித்த மழை தொடர்ந்து இரவு வரை நீடித்துள்ளது. இதனால் பல இடங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். பக். 24

# உலகத் தமிழர் பேரவைத் தலைவரை இலங்கைக்கு அழைக்கிறார் மைத்திரி



கொழும்பு, ஒக் .28
உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் அடிகளாரை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் அழைப்பு விடுத்துள்ளனர். இவர்களது அழைப்புத் தொடர்பில் இடதுசாரிக் கட்சிகளின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண உலகத் தமிழர் பேரவையின் தலைவருக்கு மின்னஞ்சல் ஊடாக இந்த விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளார்.
குறித்த மின்னஞ்சல் அழைப்புக்குப் பதிலளித்த அருட்தந்தை இம்மானுவேல், அழைப்புக் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், தென்னிலங்கையில் உள்ள மிதவாதிகளுடன் இணைந்து கடமையாற்ற ஆர்வமாக உள்ளதாகவும், குறைந்தது அரசியல்வாதிகளின் பொய்களிலிருந்தாவது மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கோடு இலங்கை நோக்கி வருவதற்கு எண்ணியுள்ளேன் பக். 24

## மணல் கடத்திய கன்ரர் வாகனம் மரத்தில் மோதியதால் மாட்டியது

### கரவெட்டியில் இருந்து கோண்டாவில் வரை விடாமல் துரத்தினர் நெல்லியடிப் பொலிஸார்



வடமராட்சி, ஒக். 28
மணல் கடத்திச் சென்ற கன்ரர் வாகனத்தைத் துன்னாலை, கரவெட்டியில் இருந்து பருத்தித்துறை வீதி வழியாக கோண்டாவில் வரை விரட்டிச் சென்று பக். 24






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தொடரும் கன மழை காரணமாக வெள்ளத்தில் மூழ்குகிறது கிழக்கு

மட்டக்களப்பு, ஒக்.28
கிழக்கில் பெய்துவரும் கன மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கன மழையை அடுத்து ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் போக்குவரத்து பெரிதும் சீர்கெட்டுள்ளது.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் கடந்த மூன்றுதினங்களாக பெய்துவரும் அடைமழையின் காரணமாக கல்முனை, நாவிதன்வெளியை இணைக்கும் கிட்டங்கி வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. அதனால் அந்தப் பகுதி



யிலும்போக்குவரத்துத்தடைப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு பல தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி வருகின்றன. வீதிகளின் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் உள்ள துரைவந்தியமேட்டுக் கிராமத்துக்கான இருவழிப்பாதையும் நீரில் மூழ்கி வருகின்றது.

தற்போதைய நிலைமை குறித்து நாவிதன்வெளிப்பிரதேசசெயலாளர் சு.கரனிடம் வினவியபோது கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழையின் காரணமாக கிட்டங்கி வீதி நீரில் மூழ்கிவருகிறது. போக்குவரத்துத் தடைப்படும் நிலை உருவாகலாம் என்பதற்காக இயந்திரப் படகை ஒழுங்கு செய்து தயார் நிலையில் வைத்துள்ளோம். போக்குவரத்து தடைப்படும் பட்சத்தில் படகுசேவை உடன் ஆரம்பிக்கப்படும். போக்குவரத்துத் தொடர்பாக மக்கள் பயப்படத்தேவையில்லை.- என்று கூறினார்.

கிழக்கில்வாகரை, வாழைச்சேனை, கிரான், மட்டக்களப்பு, வவுணதீவு, காத்தான்குடி, ஆரையம்பதி, பட்டிப்பளை, களுவாஞ்சிக்குடி உட்பட பலபிரதேசசெயலாளர்பிரிவுகளில் கடும் மழை பெய்து வருகின்றது.

அம்பாறைமாவட்டத்தைப்பொறுத்தவரையில் கரையோரப்பிரதேசங்கள் பெரும்பாலும் நீரில் மூழ்கி



யுள்ளன. மக்கள் தங்களது இருப்பிடங்களில் இருந்து வேறு இடங்களுக்குச் சென்று தங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது வேளாண்மை செய்யும் காலம் என்பதால் வேளாண்மை செய்ய ஆரம்பித்தவர்களின் வயல் நிலங்கள்நீரில்மூழ்கிக்காணப்படுகின்றது. ஏற்கனவே விதைக்கப்பட்ட விதைகளும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

படுவான்கரைப் பிரதேசத்தில் பெய்துவரும் அடை மழையின் காரணமாகபட்டிப்பளைப்பிரதேசத்தில் உள்ள தாந்தாமலை பிரதான வீதி வெள்ளத்தில் முற்றாக மூழ்கி உள்ளது. இதனால் பனிச்சையடி, முன்மாரி வாழைக்காலை, தாந்தாமலை, நாற்பது வட்டை போன்ற கிராமங்களுக்கான போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளது. குறித்த மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. காடுகளை அண்டிய பிரதேசமாகக் குறித்த பிரதேசம் அமைந்துள்ளதால் காடுகளில் இருந்து வருகின்ற நீரின் அளவும் அதிகமாகவுள்ளது.



அதேவேளை வவுணதீவு புளியடிமடு பாலம் வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் நேரில் சென்ற கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் துரைராஜசிங்கம், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கா.சித்திரவேல், மண்முனை மேற்கு பிரதேசசபை செயலாளர் செல்வி புத்திசிகாமணி, பிரதேசசபை தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் வவுணதீவு பிரதேச தமிழரசுக் கட்சிச் செயலாளர் நாகலிங்கம் ஆகியோர் அங்குள்ள நிலைமைகள் குறித்து ஆராய்ந்தனர்.

சம்பந்தப்பட்டஅதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பாலம் அமைப்பதற்கான நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டு ள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ற-10)



ஹற்றன் பிரதான வீதியில் கண்டி நோக்கிப் பயணித்த வான் ஒன்று பாதையைவிட்டு விலகி 20 அடிப் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் தெய்வாதீனமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை. தற்போது நாடு முழுவதும் மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்றது. சீரற்ற காலநிலையால் பாதை வழுக்கியதை அடுத்து வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாது விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்து வருகின்றனர். தற்போது நிலவும் காலநிலையை அவதானித்துக் கொண்டு செயற்படுமாறு சாரதிகளுக்குப் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். அதிக வேகத்தில் வாகனங்களைச் செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ற)

# பனை அபிவிருத்திச் சபைக்கு புதிய பணிப்பாளர் சபை

யாழ்ப்பாணம், ஒக். 28
பனை அபிவிருத்திச் சபைக்கு புதிய பணிப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தச் சபையின் தலைவராக மாரிமுத்து கணபதிப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

பனை அபிவிருத்திச் சபை மீள் குடியேற்ற அமைச்சின் கீழ் இயங்குவதால் அமைச்சு ஏற்கனவே எஸ்.கோகுலதாசன் தலைமையிலான பணிப்பாளர் சபையைக் கலைத்துவிட்டு புதிய பணிப்பாளர் சபையை நியமித்துள்ளது. சபையின் புதிய தலைவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சபைக்கு சென்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அத்துடன் சபையின் புதிய பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் விவரம் இன்று தெரிய வரும் என்று சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ற-17)









141ஆவது உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்துக்கான நிகழ்வுகள் நேற்று வவுனியா கலாசார மண்டபத்தில் அஞ்சல் மா அதிபதி டி.எல்.பி. றோகன அபேவர்த்தன தலைமையில் நடைபெற்றன. அதில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரா, பிரதி அஞ்சல் மா அதிபதி நிருவாகம், பிரதம கணக்காளர் கே.பி. வசந்ததிலக வடமாகாண பிரதி அதிபராக இருந்த வி. குமாரகுரு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் பிரதம அஞ்சல் அத்தியட்சகர்கள், வடமாகாணத்தில் பணியாற்றும் அஞ்சலக ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பணியாளர்களின் பிள்ளைகளையும் கௌரவிக்கும் நிகழ்வுகள், கடந்த காலத்தில் அஞ்சலகத்திற்கு வருமானம் பெற்றுக் கொடுத்த ஊழியர்களுக்கான விருதுகள், சிறந்த அஞ்சல் அலுவலகங்கள் என தெரிவு செய்யப்பட்டு சிறந்த செயற்பாடுகளை மேற்கொண்ட ஊழியர்களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விபத்தில் சாவை ஏற்படுத்திய ராணுவ சிப்பாய்க்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக். 28

இராணுவத்துக்குச் சொந்தமான டிப்பர் வாகனத்தால் மோதி விபத்தை ஏற்படுத்தி பொதுமகன் ஒருவரின் சாவுக்குக் காரணமாக இருந்த இராணுவச் சிப்பாய்க்கு யாழ். நீதிவான் நீதிமன்றால் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் சாவடைந்தவரின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு செலுத்துமாறும் கட்டளையிடப்பட்டது.

2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி கோண்டாவில் பிரதேசத்தில் ஏற்பட்ட விபத்தில் ஏழாலை வடக்கு, ஏழாலை என்னும் முகவரியைச் சேர்ந்த நல்லையா தவகுலசிங்கம் என்ற குடும்பஸ்தர் சாவடைந்தார். இந்த விபத்தை ஏற்படுத்திய இராணுவச் சாரதி கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றால் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இவருக்கெதிரான குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டபோது இராணுவச் சிப்பாய் சுற்றவாளி எனத் தெரிவித்ததை அடுத்து வழக்கு விளக்கத்துக்கு எடுக்கப்பட்டது.

எனினும் கடந்த வெள்ளிக்கிழமை இந்த வழக்கு விளக்கத்துக்கு எடுக்கப்பட்டபோது இராணுவ வீரர் குற்றத்தை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்ததையடுத்து நீதிவான் பெ.சிவகுமாரால் இராணுவ வீரருக்கு குறித்த அபராதமும் இழப்பீடும் விதிக்கப்பட்டது.

இழப்பீட்டுத் தொகையை செலுத்துவதற்காக இராணுவ வீரரை பணத்துடன் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி வருமாறும் சாவடைந்தவரின் உறவினரை மன்றில் முற்படுத்துமாறு கோப்பாய் பொலிஸாருக்கும் நீதிவான் உத்தரவிட்டார். (ற-103)

# 17 ஆயிரம் வீடுகள் கிளிநொச்சியில் தேவை

## மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு

யாழ்ப்பாணம், ஒக்.28

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் 41ஆயிரத்து 735 குடும்பங்கள் மீள்குடியேறிய போதும் 24ஆயிரத்து 391 குடும்பங்களுக்கான வீடுகளே அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன. இன்னமும் 17 ஆயிரத்து 344 வீடுகள் கட்டி கொடுக்க வேண்டிய தேவை உள்ளது என்று கிளிநொச்சி மாவட்டச்செயலக புள்ளிவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற மாவட்டப்புள்ளி விவரம் தொடர்பான கலந்துரையாடலிலே இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 22 ஆயிரத்து 931 குடும்பங்களும், கண்டாவளைப் பிரதேச செய லர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 8ஆயிரத்து 5 குடும்பங்களும், பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 7ஆயிரத்து 159 குடும்பங்களும் பச்சிலை பள்ளிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 3ஆயிரத்து 630 குடும்பங்களுமாக கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்தம் 41 ஆயிரத்து 735 குடும்பங்கள் 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குப் புதிதாக கட்டி கொடுக்கப்பட்ட வீடுகள், திருத்தம் செய்யப்பட்ட வீடுகள் என மொர்த்தம் 24ஆயிரத்து 391 வீடுகள் மாத்திரமே அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 9ஆயிரத்து 80 வீடுகள் புதிதாகவும், 534 வீடுகள் திருத்தம் செய்யப்பட வேண்டியும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 3ஆயிரத்து 511வீடுகள் புதிதாகவும், 405 வீடுகள் திருத்தம் செய்யப்பட வேண்டியுமுள்ளன என்றும், பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 2 ஆயிரத்து 91 வீடுகள் புதிதாக அமைத்துக் கொடுக்க வேண்டியும், 946 வீடுகள் திருத்தம் செய்யவேண்டியும் உள்ளன என்றும், பச்சிலை பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆயிரத்து 151 வீடுகள் புதிதாகக் கட்டிக் கொடுக்கப்பட வேண்டியும், 286 வீடுகள் திருத்தம் செய்யப்பட வேண்டியும் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-21,ரி3)

## உள்ளூராட்சி சபை நிர்வாகத்தில் முன்னாள் உறுப்பினர் தலையீடு

### அனுமதிக்க வேண்டாம் என் அமைச்சு சுற்றறிக்கை

அச்சுவேலி, ஒக்.28

உள்ளூராட்சிச் சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் பதவி இழந்த பின்னரும் உள்ளூராட்சிச் சபைகளின் நிர்வாகத்தில் தலையீடு செய்யும் வகையில் நடந்து கொள்கின்றனர். அதை முற்றாக நிறுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு தலையீடு செய்வதை உள்ளூராட்சிச் சபைகளின் பொறுப்பதிகாரிகள் எந்த வகையிலும் அனுமதிக்கக்கூடாது என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக் காலம் முடிவடைந்ததை அடுத்துப் பதவிகளை இழந்த உள்ளூராட்சிச் சபைகளின் தவிசாளர்கள், தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் உள்ளூராட்சிச் சபைகளின் நிர்வாகத்தில் தலையிட்டுத் தமது விருப்பத்துக்கு அமைய நடக்க முற்படுவதாகவும், சபைகள் தமது நிர்வாகத்தின் கீழ் இயங்கிய காலப்பகுதியில் விட்ட தவறுகள், குழறுபடிகளைத் தற்போது நிறைவேற்ற முற்படுவதாகவும் அமைச்சுக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்தே மத்திய உள்ளூராட்சி அமைச்சு கண்டிப்பான முறையில் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது.

இந்த வகையான தலையீடுகள் வடக்கு மாகாண உள்ளூராட்சிச் சபைகளிலும் நடைபெறுவதாகவும் சில இடங்களில் மீண்டும் தேர்தல் நடைபெறும்போது பழைய பதவிகளுக்கு நாங்களே வருவோம் என பதவி இழந்தவர்கள் கூறித் தமது விருப்பத்துக்கு ஏற்ப கருமங்களை நிறைவேற்ற முற்படுகின்றனர் என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பில் உள்ளூராட்சிச் சபைகள் இருந்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முறைகேடுகள் மற்றும் நிதி கையாளுகைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் அதிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்கு பதவி இழந்தவர்கள் முற்படுகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ற-11)

# இயற்கை இடர்கள் தொடர்பில் அலட்சிய போக்கு வேண்டாம்

### பொதுமக்களை எச்சரிக்கின்றது யாழ். இடர் முகாமைத்துவப் பிரிவு

யாழ்ப்பாணம், ஒக்.28

இயற்கை இடர்கள் தொடர்பிலான முன்னெச்சரிக்கைகளைப் பொதுமக்கள் அலட்சியம் செய்யும் போக்குக் காணப்படுகின்றது. இதனால் உயிரிழப்புக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றன. இயற்கை இடர்கள் தொடர்பில் முன்கூட்டியே வழங்கப்படுகின்ற தகவல்களைப் பொதுமக்கள் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும். – இவ்வாறு யாழ்.மாவட்டச் செயலக இடர் முகாமைத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அரச அதிபர் ந.வேதநாயகன் தலைமையில், வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை தொடர்பான முன் எச்சரிக்கைக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில், இடர்முகாமைத்துவ உறுப்பினர்கள் மற்றும் அதன் உப குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில், வெள்ள இடர் – இடி மின்னல் தாக்கங்கள் தொடர்பில், பொதுமக்களுக்கு எவ்வாறு விழிப்புணர்வூட்டுவது – முன் னெச்சரிக்கை செய்வது என்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு இது தொடர்பிலான முன்னெச்சரிக்கைத் தகவல்கள், இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தினாலும், வளிமண்டலவியல் திணைக்களத்தினாலும் வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படும் முன்னெச்சரிக்கைத் தகவல்களைப் பொதுமக்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு கவனத்தில் எடுத்துக்கொள்ளத் தவறுவதனால் உயிரிழப்புக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. எனவே இந்த விடயங்களை அழுத்தம் திருத்தமாகப் பொதுமக்களிடம் எடுத்துச்செல்ல வேண்டும் என்றும் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது.

இடர்வேளைகளில் சகல திணைக்களங்களும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் இதன்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அத்துடன் பொதுமக்களின் பாதுகாப்புக்குரிய சகல நடவடிக்கைகளையும் எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது என்று இடர் முகாமைத்துவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ற-ரி4,ரி6)

## குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறி விலைகள் உயர்வு

யாழ்ப்பாணம், ஒக்.28

குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறி விலை நேற்று சடுதியாக அதிகரித்தது. அதனால் மரக்கறிகளைக் கொள்வனவு செய்வதில் பொதுமக்கள் பெரும் இடர்களை எதிர்நோக்கினர். இந்துக்களின் விரதங்களில் ஒன்றான கேதார கௌரி விரதம் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில் மரக்கறிகளின் விலை அதிகரிப்பால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

குடாநாட்டின் பல பாகங்களிலும் தற்போது கடும் மழை பெய்து வருகின்றது. அதனால் குடாநாட்டு சந்தைகளிலும் நேற்று மரக்கறி வகைகளின் வரவு மிகக் குறைவாக இருந்தது. அவற்றின் விலைகளும் சற்று அதிகரித்துக் காணப்பட்டது. யாழ். குடாநாட்டுச் சந்தைகளில் பச்சைமிளகாய், தேசிக்காய் போன்றவற்றின் விலை நேற்றைய தினம் 400 ரூபாவைத் தொட்டிருந்தது. அதேவேளை சில மரக்கறி வகைகள் அறவே இல்லாமல் இருந்தன.

இந்துக்களின் விரதங்களில் ஒன்றான கேதார கௌரி விரதம் ஆரம்பித்துள்ள நிலையில் தாங்கள் விரும்பிய மரக்கறிகளைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதோடு, மரக்கறிகளின் விலை ஏற்றத்தால் குறைந்தளவிலேயே அவற்றைக் கொள்வனவு செய்வதிலும் ஈடுபடுகின்றனர்.

இது தொடர்பாக மரக்கறி வியாபாரிகளைத் தொடர்புகொண்டு கேட்டபோது தற்போது மழை அதிகரித்ததன் காரணமாக சந்தைக்கு மரக்கறிகள் குறைவாகவே கொண்டு வரப்படுகின்றன. தம்புள்ள மற்றும் கொழும்பில் இருந்து கொண்டு வரப்படும் மரக்கறிகளும் வருவது குறைவாகவே உள்ளன. அதனாலேயே இந்த விலையேற்றம். தற்போது பூப்பருவத்தில், பிஞ்சுப் பருவத்தில் இருக்கும் மரக்கறிகள் மழையால் பாதிப்புக்களை எதிர்கொள்ளும். எனவே அவற்றினாலும் இந்த விலை ஏற்றம் தங்கியிருக்கும். – என்றனர். (ற-21)

# இந்திய படகு உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டும்

### வடபகுதி மீனவர்கள் மீன்பிடி அமைச்சரிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 28

எல்லை தாண்டும் தமிழக மீனவர்களின் படகுகளை அரசுடைமையாக்குவதுடன், குறித்த படகுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கும் தாக்கல் செய்யப்பட வேண்டும். இவ்வாறு வடபகுதி மீனவர்கள், மீன்பிடி அமைச்சருடனான கலந்துரையாடலில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மீன்பிடி அமைச்சின் கேட்போர் கூடத்தில், மீன்பிடி அமைச்சர் தலைமையில் கடந்த வார இறுதியில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது. கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர்கள், மீனவர் அமைப்புக்கள் என்பன இதில் கலந்துகொண்டன.

இந்தச் சந்திப்பில் வடபகுதி மீன [illegible] ளர் இணையும் கலந்துகொண்டது. அதன்போது இலங்கையின் கடல் எல்லையை நிர்ணயம் செய்ய வேண்டும். அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்வதன் ஊடாக, இலங்கை மீனவர்கள் எல்லை தாண்டிச் சென்றாலும், இந்திய மீனவர்கள் எல்லைதாண்டி வந்தாலும் அது குற்றமாகக் கருதப்பட முடியும். அவ்வாறு குற்றவாளிகளாக இனங்காணப்படுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

தமிழகத்தில் 5 ஆயிரம் இழுவைப் படகுகள் வரையில் பாவனையில் உள்ளன. ஆனால் இதுவரை இலங்கைக் கடற்படையினரால் 75 இழுவைப் படகுகள் மாத்திரமே கைப்பற்றப்பட்டுள்ளன. இது தமிழக மீனவர்களைப் பொறுத்த [illegible]கரையில் பெரியதொரு பாதிப்பு அல்ல. அத்துடன் பறிமுதல் செய்யப்படும் படகுகளை வைத்துப் பராமரிப்பதற்குச் சிரமமும் ஏற்படுகின்றது என்று இந்தச் சந்திப்பின் போது கடற்படை அதிகாரிகள் சுட் டிக்காட்டியுள்ளனர்.

இதன் போது மீனவ அமைப்புக்கள், குறித்த படகுகளை அரசுடைமையாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். படகுகளின் உரிமையாளர்களுக்கு எதிராகவாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களைத் தமிழகத்திலிருந்து இங்கு வழக்குக்கு அழைத்தால் தான் உணர்ந்துகொள்வார்கள். என்று கோரிக்கை விடுத்தன.

மேலும், இந்திய மீனவர்களினால் இதுவரை எதிர்கொண்ட பாதிப்புக்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் வடபகுதி மீனவ பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு இணங்கிய மீன்பிடி அமைச்சர், பாதிப்புக்கள் தொடர்பான விவரங்களைச் சமர்பிக்குமாறு கோரியுள்ளார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறார்களை மிகையான கல்விக்காக வருத்தாதீர்

### யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை நூற்றாண்டு நிகழ்வில் வடக்கு விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் அறிவுரை

யாழ்ப்பாணம், ஒக்.28

எமக்கான தேசியத் தலைமை இல்லாத காரணத்தால் சமூகப்பிறழ்வுகள் அதிகரித்துள்ளன. இந்த நிலைகள் மாற்றப்பட வேண்டும். தனித்தன்மை வாய்ந்தவர்களாக உங்கள் குழந்தைகள் வளரவேண்டும் என்றால் பெற்றோர்களே குழந்தைகளின் வாசிப்புத்திறனை மேம்படுத்தி கல்வி செயற்பாடுகளை அவர்கள் தாமாகவே முன்னெடுப்பதற்கு வழிசெய்ய வேண்டும் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

உங்கள் கௌரவத்துக்காக ஆரம்பக் கல்வியை கடுமையானதாக மாற்றி குழந்தைகளை உளவியல் நோயாளிகளாக உருவாக்கி விடாதீர்கள். எந்த நேரத்தில் எந்தப் பாடத்தைக் கற்க வேண்டும் என்று குழந்தைகளால் புரிந்து கொள்ள முடியும். - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் ஆரம்பமாகிய நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்வுகளின் இரண்டாம் நாள் நிகழ்வின் முதலாவது அமர்வு நேற்று இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நிகழ்வில் யாழ். இந்து ஆரம்பம்ப பாடசாலையின் நூற்றாண்டு விழா சிறப்பிதழான 'இந்து மழலை நூல் வெளியீடும் நேற்றைய நிகழ்வில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய வடக்கு அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது-

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நாய்களை கொல்லக் கூடாது என்று கூறியதைக் கேட்டு கடுமையாக கோபமடைந்தேன். ஏனெனில் எமது மக்களைக் கொன்றவர் நாய்களைக் கொல்லக்கூடாது என்று கூறியதால் கோபமடைந்தேன். ஆனால் இன்று வீட்டில் என்னுடைய பிள்ளைகள் செல்லப்பிராணியுடன் விளையாடுவதைக்கண்டு மகிழ்சியடைகின்றேன். எனவே குழந்தைகளுடைய மனதை வளப்படுத்துவதற்கு செல்லப்பிராணிகளை பரிசாக வழங்குங்கள்.

நான் அரசியல்துறை சார்ந்தவன் என்றாலும் மழலைகள் சூழ்ந்துள்ள இந்த அரங்கில் ஓர் ஆசிரியராகவும் பெற்றோராகவும் உரையாற்ற விரும்புகின்றேன். கல்வி அமைச்சர் குருகுலராஜா கலந்து கொள்ள முடியாத நிலையிலேயே எனக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. இன்று (நேற்று) முதலமைச்சருடன் எழுவை தீவில் கலந்து கொள்ள இருந்த நிகழ்வை விடுத்து இங்கே வந்துள்ளேன்.

இந்து ஆரம்ப பாடசாலை பொருளாதார பின்புல ரீதியாக வசதியான பெற்றோர்களைக் கொண்டது. எனவே பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு இந்தப் பாடசாலையில் அனுமதி கிடைத்திருப்பதைக் கொடையாகவே கருதவேண்டும். மாணவர்களுடைய பெறுபேற்றில் அவர்களை விட பெற்றோருக்கே அதிக பங்கு காணப்படுகின்றது. கல்வி நிலையங்களில் மாணவர்களைச் சேர்த்து விட்டு வாயிலில் காத்திருப்பது முதல் அவர்கள் தேர்வில் வெற்றி பெற்று பரிசில் பெறுவது முதல் பத்திரிகைகளில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமைப்படுபவர்களாகவே காணப்படுகின்றீர்கள். இந்தப் பெருமைகளுக்காக மாணவர்களை மிகையாக கல்விச் சாலைகளில் வருத்துகின்றீர்கள். அதிக மதிப்பெண்களைப் பெறவேண்டும் என்பதற்காக மாணவர்களை சிறுவயது முதல் கடுமையாக கட்டாயப்படுத்தும் போது அவர்கள் வளர்ந்தபின் அதிக மதிப்பெண்களைப் பெறவேண்டும் பெற்றோரைத் திருப்திப் படுத்த வேண்டும் என்ற மனநிலையில் பாதிக்கப்பட்டு பரீட்சை நிலையங்களுக்கே செல்வதற்கு பயந்து உளவியல ரீதியான தாக்கத்திற்கு உட்படுகின்றனர். இது போன்றநிலையைஎனதுபிள்ளையும் அடைந்துள்ளது. நானும் ஒரு ஆசிரியன், தந்தை என்ற வகையில் குழந்தைகள் சுயமாக கல்விகற்க வேண்டிய சூழலை ஏற்படுத்துங்கள் என்ற கோரிக்கையை முன்வைக்கிறேன்.

எமது பிள்ளைகள் ஏட்டுச்சுரக்காய்களாக இருந்தால் கடுமையான இந்த உலகத்தில் வாழமாட்டார்கள் எனவே சிறந்த வாசிப்புப் பழக்கத் தையும் உலக விடயங்களையும் அவர்கள் அறிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் சொல்லிக் கொடுங்கள். சமூகம் என்பது ஒரு கட்டுப்பாட்டின் கீழ் அல்லது கூச்சசுபாவம் உடையதாக இருத்தல் வேண்டும் அந்த நிலை அற்றுப் போய் தற்போது சமூ கப்பிறழ்வுகள் அதிகரித்துள்ளன.

நான் பாடசாலையில் கற்ற காலத்தில் வகுப்புரீதியாக அமைத்த தோட்டத்தில் அவரைக்காய் பிடுங்கிச் சாப்பிட்டதால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டேன். ஆனால் என் சார்ந்தவர்கள் இதனைப் பெரிது படுத்தவில்லை. இன்று பாடசலைகளில் தண்டிக்கப்படும் மாணவர்கள் மனித உரிமை நிலையம் சென்று ஆசிரியர்களை குற்றவாளிகளாக மாற்றும் நிலையில் உள்ளனர். இந்த நிலமைகள் மாறவேண்டும். இவற்றுக்கான நடவடிக்கைகள் பெற்றோரிடம் இருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும்.- என்றார்.

இந்த நிகழ்வில் கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம், சின்மயாமிசன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத் சைதன்யா, ஓய்வுநிலைப் பேராசிரியர்கள், பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ற-ரி5)

# யாழ்.குருநகர் மீனவர்களால் வாழ்வாதாரம் அழிகின்றது

### நடவடிக்கை எடுக்கக் கோருகின்றனர் முல்லை. வலைப்பாடு மீனவர்கள்

முல்லைத்தீவு, ஒக்.28

வலைப்பாடு கடற்பரப்பில் அத்து மீறி றோலர் மீன்பிடியில் ஈடுபடும் யாழ்ப்பாணம் குருநகர் மீனவர்களின் அடாவடித்தனத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கிளிநொச்சி வலைப்பாடு மீனவர்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் மீன்பிடி அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

கிராமங்களின் அடிப்படைத்தேவைகள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று நேற்று முன்தினம் பூநகரி வலைப்பாடு பகுதிக்குச் சென்றிருந்தது. அதன் போது வலைப்பாடு மீனவர்களின் பிரச்சினைகள் குறித்துக் கேட்கப்பட்ட போதே மீனவர்கள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.

விடத்தல் தீவில் இருந்து பள்ளிக்குடா வரையிலான கடற்பரப்பில் சிறு தொழில் மீன்பிடியில் தங்களுக்கு ஜீவனோபாயமே இந்தத் தொழில் தான் என்று சுட்டிக்காட்டிய வலைப்பாடு மீனவர்கள், யாழ்ப்பாணம் குருநகர் மீனவர்கள் றோலர் மூலம் அடாவடியாக மீன்பிடியில் ஈடுபடுவதால் தமது நாளாந்த வருமானம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது என்று தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவித்துள்ளதாவது-

றோலர் மீன் பிடியால் ஒரு வார்த்தில் திங்கள், புதன், சனி ஆகிய நாள்களில் எங்களுடைய வலைகளைக் கடலில் இருந்து அகற்ற வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகின்றோம். இது தொடர்பில் நாம் பலரிடம் முறையிட்ட போதும் பயன் ஏதும் கிடைக்கவில்லை. அவர்களின் அட்டகாசம் தொடர்ந்த நிலையில் குருநகர் மீனவர்களைப் பிடித்துப் பின்னர் நிபந்தனையின் அடிப்படையில் விடுவித்தோம். ஆயினும் மீண்டும் மீண்டும் அவர்கள் எமது வலைகளை அறுத்து எமது வாழ்வாதாரத்தைச் சீர் குலைக்கின்றனர். கரையில் இருந்து ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்தில் அவர்கள் றோலர் மூலம் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

வலைப்பாட்டு பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் 280 மீனவர்கள் நாளாந்தம் இவர்களால் பாதிக்கப்படுகின்றார்கள். இந்திய மீனவர்கள் வருவதில்லை. எமது மீனவர்களே எமது வாழ்க்கையைச் சீர்குலைக்கின்றனர். எனவே இதைக் கட்டுப்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றனர்.

மீனவர்களுடைய கோரிக்கையை அடுத்து அவர்களுக்கு பதிலளித்த வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா. டெனீஸ்வரன் எமது கடல் வளத்தை அழிய விடக் கூடாது. எமது அடுத்த சந்ததிக்கு அதைப் பாரப்படுத்த வேண்டிய பொறுப்பு எம் எல்லோருக்கும் இருக்கின்றது. தடை செய்யப்பட்ட தொழிலை நிறுத்துவதற்கு நாங்களே பின்னிற்கின்றோம். சட்டமுரணான செயற்பாடுகளை செய்வதற்கு நாங்கள் எவரையும் அனுமதிக்க முடியாது. அது இந்திய மீனவர்களாகவும் இருக் கலாம், தடைசெய்யப்பட்ட தொழிலை செய்யும் எங்களுடைய மீனவர்களாக இருக்கலாம். இவற்றுக்கு ஒரு முடிவு எடுப்பதற்கு நான் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கின்றேன். அதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மீனவர் சங்கங்களின் தலைவர்கள், மத்திய அமைச்சின் உதவி மீன்பிடி பணிப்பாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர். அந்த கூட்டத்தில் இந்தப் பிரச்சினைகளுக்கான முடிவுகள் எட்டப்படும் - என்றார்.

(ற-21)











# தென்மராட்சி கல்வி வலய முழுநிலா நாள் கலைவிழா

### நேற்று சிறப்புற நடைபெற்றது

சாவகச்சேரி, ஒக்.28

தென்மராட்சி கல்வி வலயத்தின் முழுநிலா நாள் கலைவிழா கொட்டும் மழையின் மத்தியில் நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது. தென்மராட்சி கலைமன்ற மண் டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள், மாணவர்கள் என நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி ஡றிபேக் கல்லூரி வாசலிலிருந்து எட்டுப் பாடசாலைகளின் ஊர்திகளும் ஏழு பாடசாலைகளின் கலை நிகழ்வுகளும் முன்னே செல்ல அதன் பின்னால் இசையுடன் விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர்களாக பணிபுரிந்த வ.செல்வராசா. திருமதி றெஜினா இருதயநாதன், திருமதி அ.வேதநாயகம், கு.பிரேமகாந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவர்களுடன் தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தினம், ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவி கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

வலயப் பாடசாலை மாணவர்கள் அசிரியர்களின் இயல், இசை, நாடகம் என்பன பார்வையாளர்கள் அனைவரையும் கவரக்கூடிய வகையில் அமைக்கப்பட்டிருந்தன. கைதடி நவீல்ட் பாடசாலை மாணவிகளின் இசையும் அசைவும் நிகழ்வு அனைவரின் பாராட்டையும் பெற்றது.

அறிஞர் கௌரவிப்பு நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஓய்வுநிலை பிரதி அதிபரும் நூலாசிரியருமான ம.கங்காதரம் முதன்மை விருந்தினரால் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் கடந்த ஆசிரியர் தின நிகழ்வில் ஆசிரியர் புகழ்மாலை இறுவட்டு வெளியிட்ட கலைஞர்கள் அனைவரும் முதன்மை விருந்தினரால் கௌரவிக்கப்பட்டனர்.

(ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றத்தை ஆராய்ந்தால் நம்பிக்கையின்மை அதிகரிக்கும்

## தினேஷ் குணவர்த்தன எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.28

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நியமித்து போர்க்குற்றங்கள் குறித்து ஆராய்ந்தால் நாட்டில் இனங்களுக்கு இடையில் நம்பிக்கையின்மை மேலும் அதிகரிக்கும் என்பதுடன், தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படும் சாத்தியமும் உள்ளது என்று – மகிந்த ஆதரவு அணியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசு கூறுகின்ற உள்ளக விசாரணைப் பொறிமுறைச் செயற்பாட்டில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்க வேண்டுமாயின், அதற்கு அரசமைப்பை மாற்றியமைக்கவேண்டும். அவ்வாறு செய்வதற்கு சர்வஜன வாக்கெடுப்பையும் நடத்தவேண்டும். இல்லாவிடின் வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டுவர முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளக விசாரணைப் பொறிமுறை மற்றும் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

எமது அணியே உண்மையான எதிர்க்கட்சியாகச் செயற்படுகின்றது. எதிர்க்கட்சியின் உண்மையான வகிபாகத்தை நாங்களே மேற்கொண்டு வருகின்றோம். நாட்டுக்கு நலன் சேர்க்காத வகையில் அரசு மேற்கொண்டுவரும் செயற்பாடுகளை நாங்கள் எதிர்ப்பதுடன், அவை தொடர்பில் மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தல்களையும் முன்னெடுத்துவருகின்றோம். மக்கள் மத்தியில் தெளிவுபடுத்தல்களை முன்னெடுப்பதே மிகப்பிரதான விடயமாகும். அதனையே நாங்கள் தற்போது முன்னெடுத்து வருகின்றோம்.

இந்நிலையில் அரசு உள்ளக விசாரணை பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டுவரவேண்டுமானால், அதற்கு அரசமைப்பை மாற்றியமைக்கவேண்டும். அவ்வாறு அரசமைப்பை மாற்றியமைக்கவேண்டுமாயின் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவேண்டும். அவ்வாறு செய்யாமல் வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டுவர முடியாது.

எமது நாட்டின் சட்டக் கட்டமைப்புக்கு ஏற்ப எவரும் எவருக்கு எதிராகவும் நீதிமன்றத்தை நாடலாம். நீதியை எதிர்பார்த்து நீதிமன்றம் போகலாம்.

ஆனால், அரசு தற்போது கூறுவதைப்போன்று உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நியமித்து, போர்க்குற்றங்கள் குறித்து ஆராய்ந்தால் இனங்களுக்கு இடையில் நம்பிக்கையின்மை மேலும் அதிகரிக்கும் என்பதுடன், தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படும் சாத்தியம் உள்ளது. பொதுவான அடிப்படையில் ஆணைக்குழுவில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும்போது அவை மக்கள் மத்தியில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்திவிடும் என்பதை மறந்துவிடக்கூடாது –என்றார். (ந)

## சீனாவுக்கு செல்கின்றது இளம் எம்.பிக்கள் குழு

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக்கட்சிகளையும் உள்ளடக்கிய சுமார் 17 இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தூதுக் குழுவொன்று சீனா செல்லவுள்ளது.

சீன அரச முறை மற்றும் அரசியல் ஆகியவற்றை அறியும் நோக்கிலேயே இந்த சுற்றுப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் குழுத் தலைவராக அனுராத ஜயரத்னவும், எச்.ஆர்.துஸ்மந்த, கவிந்த ஜயவர்த்தன, ஹர்ன ராஜகருண, ஹெசான் விதானகே, இம்ரான் மஹ்ரூப், கஞ்சன விஜயசேகர, டி.பி.சன்னக, இந்திக அனுருத்த, டாக்டர் நளின் ஜயதிஸ்ஸ, சார்ள்ஸ் நிர்மலனாதன், எஸ்.எம்.மரைக்கார், நாலக்க கொலனகே, அங்கஜன் இராமநாதன், அசோக பிரியந்தன, சமிந்த விஜயசேகர ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர். (ந–10)






# குற்றங்கள் புரிவோரை பாதுகாக்க மாட்டோம்

## அமைச்சர் பாலித ரங்கே பண்டார கூறுகின்றார்



கொழும்பு, ஒக்.28

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு புதிதாக நியமிக்கப்பட்டு ஓரிரு தினங்களுக்குள் 12 கோடி ரூபா இலஞ்சம் பெற்ற சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதே போல எதிர்காலங்களில் சகல ஊழல் மோசடிக்காரர்களும் அகப்பட்டுக் கொள்வார்கள். –இவ்வாறு திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஆனமடுவ நகரில் இடம்பெற்ற பெண்களுக்கான சுயதொழில் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

எவ்வளவுதான் முறைப்பாடுகளைச் செய்தாலும், இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு எந்த நடவடிக்கையும் மேற்கொள்வதில்லை என அரசின் முக்கியஸ்தர்களே ஊடகங்களில் குற்றம் சுமத்தியிருக்கின்றார்கள். வரலாற்றில் மிகப்பெரிய இலஞ்சப்பணத்தைப் பெற்ற சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்யப்பட்ட சம்பவமானது – இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவினர் செயலில் இறங்கியிருக்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றது. இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் எதிர்காலங்களில் சிக்கிக் கொள்வார்க்ள்.

நாம் தொழில் ஒன்றைச் செய்வது எவரிடமும் கையேந்தாமல், தலை நிமிர்ந்து வாழ்வதற்கேயாகும். எனினும் இன்று சிலர் தமது தொழிலின் கௌரவத்தையும், தமது கௌரவத்தையும், குடும்ப உறுப்பினர்களின் கௌரவத்தையும் இல்லாமலாக்கிக் கொள்கின்றார்கள். இலஞ்சம் பெறுவதற்காக முயன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் வரலாற்றில் மிகப் பெரிய இலஞ்சமாக 12 கோடி ரூபாவைப் பெற்ற சுங்கத் திணைக்கள அதிகாரிகள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்னமும் இருவர் இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளனர் என்றும் அவர்களும் கைது செய்யப்பட உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு முறையாகச் செயற்படுவதில்லை என எமது தரப்பினரே இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அலுவலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டங்களைக் கூட நடத்தினார்கள். ஆனால், இலஞ்சம், ஊழல் ஆணைக்குழு முறைப்படி செயற்படுகின்றது என்பது தற்போது புரிகிறது. புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு ஓரிரு தினங்களே கடந்துள்ள நிலையில் இந்த மிகப் பெரிய இலஞ்ச வேட்டை நடத்தப்பட்டிருக்கின்றது.

வாழ்வதற்குத் தேவையான அளவு உழைத்து தேவையற்ற செலவுகளை நாம் குறைத்துக் கொள்வோமேயானால் இவ்வாறு இல்ஞ்சம் பெற்று வாழ்க்கையை பாழ்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. இது எம் எல்லோருக்கும் ஒரு நல்ல பாடமாகும். அத்தோடு எமது நாடு நல்ல திசையில் பயணிக்கின்றது என்பதற்கும் இது ஓர் உதாரணமாகும். குற்றம் புரியும் எவரையும் நாம் பாதுகாக்கப் போவதில்லை. குற்றவாளிகள் அனைவரும் விரைவில் அகப்பட்டுக் கொள்வார்கள் – என்றார். (ந)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். நண்பர்களுக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். சேமிக்கும் அளவில் வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரலாம். குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனை நல்வழியைக் காட்டும். தொழில், வியாபார நடைமுறை சீராக அதிக கவனம் வேண்டும். பணவரவு அதிகம் என்றாலும் செலவுகளும் கொடிகட்டிப் பறக்கும்.

**மிதுனம்:** பணிகளில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள். அறிமுகமான ஒருவர் தேவையான உதவியை வழங்குவார். தொழில், வியாபாரம் செழித்து வளர கூடுதல் மூலதனம் செய்வீர்கள்.

**கடகம்:** மனதில் வெகுநாள் இருந்த சஞ்சலம் தீரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி நிலை உருவாகும். ஆதாய பணவரவு கிடைக்கும். உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும்.

**சிங்கம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் சீரான முன்னேற்றம் பெறும். சேமித்த பணத்தை முக்கிய செலவுக்கு எடுக்க வேண்டி வரும். ஆடம்பரப் பொருள் வாங்க யோகமுண்டு.

**கன்னி:** சிலர் இடையூறு செய்ய முயற்சிப்பர். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணவரவு அதிகமென்றாலும், செலவும் கட்டுக்கடங்காது. தெய்வ வழிபாடு செய்வதால், மனதில் அமைதி ஏற்படும்.

**துலாம்:** தகுதி, திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். செயல்களில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். சுற்றுலா சென்றுவரத் திட்டமிடுவீர்கள்.

**விருச்சிகம்:** உழைப்பின் மீதான ஆர்வம் வளரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி திருப்திகரமாகும். மேலதிக வருமானம் கிடைக்கும். குடும்பத்தினர் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள்.

**தனுசு:** உங்களைப் பிறர் புகழ்ந்து பேச வேண்டும் என்ற எண்ணம் வரும். குடும்ப உறுப்பினர்களின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை இருக்கும்.

**மகரம்:** சிலரது பேச்சு, உங்கள் மனதைச் சங்கடப்படுத்தலாம். அவர்கள் செய்த நன்மையை நினைத்து, பெருந்தன்மையுடன் விட்டுக்கொடுங்கள். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை உருவாகும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** உலக நடப்புகளை அறிவதில் ஆர்வம் வளரும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணப் பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் உண்டு. கூடுதல் சொத்து வாங்கத் திட்டமிடுவீர்கள்.

**மீனம்:** நிறைவேற்ற வேண்டிய பணி ஞாபக மறதியால் தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாரான அளவில் இருக்கும். குறைந்த அளவில் பணம் கிடைக்கும். உறவினர் வகையில் பணம் செலவு செய்ய நேரிடும்.

# விஜய் தொலைக்காட்சிக்கும் லட்சுமி ராமகிருஷ்ணனுக்கும் மோதல்

## 'என்னம்மா இப்படிப் பண்றீங்களேம்மா' விவகாரம்



ஆரோகணம், அம்மணி உள்ளிட்ட படங்களை இயக்கிய இயக்குநரும், நடிகையுமான லட்சுமி ராமகிருஷ்ணன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். சொல்வதெல்லாம் உண்மை நிகழ்ச்சியில் 'என்னம்மா இப்படிப் பண்றீங்களேம்மா' என்ற சொல்லை உபயோகப்படுத்தியதன் எதிரொலியாக பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், படங்கள், பாடல்கள் ஆகியவற்றில் இந்தச் சொல்லை பயன்படுத்தி வருகின்றனர். இதனால் மனமுடைந்த லட்சுமி ராமகிருஷ்ணன் தனியார் தொலைக்காட்சிக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அந்தக் கடிதம் தொடர்பாக விளக்க அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில், 'நான் உபயோகப் படுத்திய வசனம் பல்வேறு திரைப்படங்களிலும், வேறு வேறு நிகழ்ச்சிகளிலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இது மட்டுமல்லாமல் மிக உச்சமாக 'ரஜினிமுருகன்' திரைப்படத்தில், இதே வசனத்தை பல்லவியாக வைத்து பாடலும் உருவாக்கப்பட்டுள்ளது.

இது போன்ற காரணங்களால் நானும் எனது குடும்பத்தினரும் பொது இடங்களிலும் சமூக வலைத் தளங்களிலும் பல்வேறு பின் விளைவுகளையும், விரும்பத்தகாத சூழலையும் சந்திக்க நேர்ந்தது. இப்படிப்பட்ட தொடர் பிரச்சினைகளால் இந்த வசனம் எந்தச் சூழலில் சொல்லப்பட்டது? எதற்காகச் சொல்லப்பட்டது? என்பதை மிக வலியோடு ஒரு வீடியோ பதிவின் மூலம் சமூக வலைத் தளத்தில் வெளியிட்டேன். அதன் பிறகு சிறிது சிறிதாக இந்தப் பிரச்சினைகள் குறையத் தொடங்கின. இப்படிப்பட்ட சூழலில் இந்தப் பிரச்சினையை மீண்டும் தூண்டும் வகையில் 'என்னம்மா இப்படிப் பண்றீங்களேம்மா-பகுதி2' என்ற ஒரு விளம்பரப்படுத்தலை விஜய் தொலைக்காட்சி வெளியிட்டமை நான் விரும்பாத வகையிலும் மீண்டும் அத்துமீறுவதாகவும் இருக்கிறது. மீண்டும் இந்தப் பிரச்சினையை ஆரம்பத்தில் இருந்து என்னால் சந்திக்கவோ, விளக்கவோ என்னுடைய பரபரப்பான வேலைகளும், உடல்நிலையும் இடம் கொடுக்கவில்லை. இது தொடர்பாக மின்னஞ்சல் மூலம் எனது எதிர்ப்பைப் பதிவு செய்து இந்த நிகழ்ச்சியை ஒளிபரப்ப வேண்டாம் என்று தெரிவித்து இருந்தேன். ஆனால் அதற்கு எந்தப் பதிலும் வரவில்லை. இதன் காரணமாக நான் ஆணையாளரை அணுகி முறைப் பாடு வழங்கினேன்.

இது குற்றவியல் வழக்குச் சார்ந்தது அல்ல என்பதால் அவர்கள் என்னை நீதிமன்றம் மூலம் சட்ட பூர்வமாக இதை அணுகுமாறு கூறினார்கள். இதனைத் தொடர்ந்து எனது வழக்கறிஞர் மூலமாக அறிக்கை அனுப்பி உள்ளேன். அதற்கும்பதில்வரவில்லைஎன்றால் அந்தத் தொலைக்காட்சி மீது மானநஷ்ட வழக்குத் தொடர வேண்டிய சூழல் ஏற்படும். ஒரு தனிநபராக இருந்துகொண்டு தொலைக்காட்சி நிறுவனத்துடன், அதிலும் செல்வாக்கு மிகுந்த ஒரு தொலைக்காட்சி நிறுவனத்துடன் போராடுவது கடினம் தான். ஆனால் அதைப் பற்றியோ அல்லது இறுதி முடிவுகளைப் பற்றி நான் கவலைப்படவில்லை.

என்னுடைய சுய கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்ள நான் போராடுவேன்' என்று அந்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார் லட்சுமி ராமகிருஷ்ணன்.










பேஸ் புக்கில் பிழுத்துவை...



# கிளி எப்படி பேசுகிறது? ஆய்வில் கண்டுபிடிப்பு



கிளிகளின் மூளையின் வித்தியாசமான கட்டமைப்புத் தான் அவைகளை மனிதன் பேசுவதை உள்வாங்கி அதேபோல் பேச வைக்கிறது என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

ஏனைய பறவைகளுக்கு இல்லாத விநோதமான தன்மை கிளிகளுக்கு உள்ளது. கிளிகள் மனிதர்களைப் போலவே ஒலி எழுப்ப வல்லவை. பயிற்சி அளித்தால் சில வார்த்தைகளைக் கூட பிழையில்லாமல் உச்சரிக்கும். காகம், நைட்டிங்கேல் போன்றவை பாடும் பறவைகளென அழைக்கப்பட்டாலும், அந்தப் பறவைகளால் வார்த்தைகளை உச்சரிக்க முடியாது. அமெரிக்காவின் டியூக் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கிளிகளின் பேசும் திறன் பற்றி ஆய்வு மேற் கொண்டனர். கிளிகள் எவ்வாறு குரலை உள்வாங்கிக் கொள்கின்றன. உள்வாங்கிய குரலையும் வார்த்தைகளையும் எவ்வாறு பின்பற்றி, அதே போன்று ஒலி எழுப்புகின்றன என ஆய்வு செய்தனர். ஆய்வின் முடிவில் கிளிகளின் மூளை உடற்கூறு பிற பாடும் பறவைகளின் மூளை உடற்கூற்றில் இருந்து வேறுப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. குரல் கற்றல் திறன் என்பது குரலை உள்வாங்கிக் கொள்ளும் திறன் ஆகும். கிளியின் [illegible] கிளிகள் குரல் [illegible] முக்கிய பங்கு வகிப்பதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டோ சாரதிகள் வயதெல்லையை 25 ஆக உயர்த்துவதற்கு ஆலோசனை

## மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் முன்வைப்பு

கொழும்பு,ஒக்.28
ஓட்டோ சாரதிகளுக்கான அனுமதிப் பத் திரங்களை வழங்குவதில் வய தெல்லையை 25 ஆக உயர்த்தும் ஆலோசனையை அபாயகர மான மருந்துகள் கட்டுப்பாட்டு சபையின் தலைவரான வைத் தியர் சமீர திலங்க சமரசிங்க முன் வைத்துள்ளார். மூவாயிரத்து ஐநூறு ஓட்டோக்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய் வொன்றில், நூற்றுக்கு 10 வீதம் வரையிலான ஓட்டோச் சாரதிகள் போதைப்பொருள்களை எடுத்துச் செல்வதில் ஈடுபடுவது வெளிப்பட் டிருந்ததாக வைத்தியர் சமீர திலங்க சமரசிங்க தெரிவித்துள் ளார். தமது பாடசாலைக் கல் வியை முடித்துக் கொண்டு, வேலை வாய்ப்பற்ற நிலைக்கு உள்ளாகும் 18 வயதுடைய பெருந்தொகை யான இளைஞர்கள் ஓட்டோக் களைக் கொள்வனவு செய்து, சாரதிகளாகிவிடும்போது அவர் கள் வீதிச் சட்டங்கள் தொடர் பாகவும் கூடச் சரியான தெளிவு இல்லாதவர்களாக உள்ளனர். இவர்கள் பலதரப்பட்ட சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் மனப் போக்குக் காரணிகள் பற்றி கவ னத்தில் கொண்டு இந்த ஆலோ சனை முன்வைக்கப்பட்டிருப் பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பாடசாலை வாழ்க்கைக்குப் பின்னர் இளைய சந்ததியை ஏதேனுமொரு பயிற்றப்பட்ட தொழிலொன்றிலோ அல்லது மாற்றுத் தொழில் ஒன் றிலோ ஈடுபடுத்தும் செயற்றிட்ட மொன்றின் அவசியத்தைப் பற்றி யும் அவர் குறிப்பிட்டுள்ளார். இத னிடையே, இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஓட்டோக்களின் எண்ணிக்கை 10 லட்சங்களாக இருப்பதோடு அவற்றுள் 7 லட்சம் வரையில் வாடகை வண்டிகளாகப் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளதா கவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-22)

# ஜனவரி மாதம் அடையாள அட்டை இலத்திரனியல் மயப்படுத்தப்படும்

## நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு




தேசிய அடையாள அட்டையாக மாற்றப்பட்டு விநியோகிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் ஜனவரி மாதத் தில் இருந்து நாட்டின் தேசிய அடையாள அட்டைகளை இலத்திர னியல் மயப்படுத்தப்பட்டு வழங் குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக நிதிய மைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். உலகில் வளர்ச் சியடைந்த நாடுகளில் பயன் படுத்தப்படும் நவீன தொழி நுட்பத்தைப் பயன்படுத்தி, இலங் கையர்களுக்கான இலத்திரனி யல் தேசிய அடையாள அட்டை விநியோகிக்கப்படவுள்ளன. அதற்கமைய, தற்போது பாவ னையில் உள்ள தேசிய அடை யாள அட்டை, இலத்திரனியல் தனியாள் அடையாளத்தை விரை வாக அடையாளப்படுத்திக் கொள்ள இந்த இலத்திரனியல் அடையாள அட்டை பெருமளவில் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# பௌர்ணமி தினத்தை முன்னிட்டு கைதிகளுக்குத் தியானப் பயிற்சி

மட்டக்களப்பு, ஒக்.28
பௌர்ணமி தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு சிறைச்சாலை யிலுள்ள சிறைக்கைதிகளுக்கான ஒரு நாள் தியானப் பயிற்சி முகாம் நேற்று நடைபெற்றது.
சிறைச்சாலை அத்தியட்சகர் பீ.எம்.அக்பர் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் மட்டக் களப்பு மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி சிவபாதம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.
உலக வாழும் கலைகள் நிறு வன இலங்கைக் கான வதிவிடப் பிரதிநிதியான தென்னியந்தி யாவைச் சேர்ந்த கணேஸ் குருஜீ தியானப்பயிற் சியை நடத்தி வைத்தார். சிறைச்சாலை பிரதம ஜெயிலர் ஆர்.பிரபாகரன், வாழும்கலைகள் நிறுவன மட்டக் களப்பு மாவட்டப் பணிப்பாளர் சட்டத்தரணி கே.சிவநாதன் உட்பட பலர் நிகழ் வில் கலந்து கொண்டனர்.



தியானப் பயிற்சியில் ஆர்வத் துடன் பங்கு கொண்டு தியானச் செயற்பாடுகளை மேற்கொண்ட சிறைக்கைதிகள் னர். (ஐ-10)

## மத்தியஸ்தர் சபை இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.28
தெல்லிப்பழை நடேஸ்வராக் கல்லூரியில் இயங்கி வந்த தெல்லிப்பழை மத்தியஸ்தர்கள் சபை எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் தெல் லிப்பழை மகாஜ னக் கல்லூரியில் இயங்க உள்ள தாக மத்தியஸ்தர் சபைத் தவிசாளர் தெரிவித்துள் ளார். (ஐ-ரி-6)

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பலட்சுமி வீரவாகுப்பிள்ளை



அனலைதீவு 3ஆம் வட்டா ரத்தைப் பிறப்பிடமாகவும், புளி யங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பலட்சுமி வீரவாகுப்பிள்ளை 27.10.2015 செவ்வாய்க்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சபாபதிப்பிள்ளை (Chairman) சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்க ளான அளவை ஐயம்பிள்ளை- செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், வீரவாகுப் பிள்ளை (பிரபல வர்த்தகர்- கம்பஹா) அன்பு மனைவியும், விஜயலட் சுமி, மாணிக்கராசா, மாசிலா மணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நித்தியானந்தன் (சுவிஸ்), ஆனந்தி (லண்டன்), குகன் (லண்டன்), விவேகானந்தன் (கனடா), சிவானந்தன் (கனடா), கவிதா (புளியங்கூடல்), அமுதினி (சுவிஸ்), விஜிதா (கனடா), ரோசினி (புளியங்கூடல்), சித்திரா (புளியங்கூடல்) ஜனனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், மது (சுவிஸ்), பரமேஸ்வரன் (லண் டன்), கங்கா (லண்டன்), கீதா (கனடா), சுகந்தி (கனடா), விஜயகுமாரன் (புளியங்கூடல்), சிவா (கனடா), சரவணபவன் (சுவிஸ்), றதீஸ் (கனடா) ஆகி யோரின் அன்பு மாமியாரும். நிசான், அஜிரா, சரண்யா, சாயினி, கபிலன், அபி சலா, ஆகாஸ், ஆதர்சியா, கீர்த்தனா, அர்ச்சனா, விகாசன், கயானன், விதுசன், அபிரம்யா, மிதுர்சிகா, ஹரிஷன், ஆரணி, அனுஷா, அஜிவன், நிலாவன், சாரங்கன், சமீரா, சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2015) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு புளியங்கூடலிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியங்கூடல், ஊர்காவற்றுறை.
021 221 3584
(65603)(11.15.17)
தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### வெள்ளையர் தெய்வேந்திரம்



பிறப்பு:15.10.1948
இறப்பு: 26.10.2015


யாழ். கோண்டாவில் மேற்கு பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெள் ளையர் தெய்வேந்திரம் 26.10.2015 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெள்ளையர் சின்னகுட்டி தம்பதிகளின் அன்பு மகனும், கனகரத் தினம் - பூமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் வசந்தாவின் அன்புக் கணவரும் சுதேஸ்வரன், பிறேமகாந்தன், சுதர்ஜன், திபாகினி,சயிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பூரணம், சரஸ்வதி,காலஞ்சென்றவர்களான செல்லத் துரை, ராசம்மா, சின்னம்மா, கனகம்மா, சின்னத்துரை, பவளம், மகேஸ்வரி , பூபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இந்திரன், அரவிந்தன், வித்தியா, லோகா, அருன்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் சுரேயா, சபிரா, அபிலாஸ்,அஸ்வினி, ஆரணி, ஆராதனா, சாதனா, அபிசனா, அர்வின்,சர்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.10.2015) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

பாரதி வீதி ,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
(65697) (15.17)
தகவல்: குடும்பத்தினர்.



### கப்டன் என்.சோமசுந்தரம் (J.P)

(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபரும், விளை யாட்டுத் துறைப் பொறுப்பாசிரியரும், விடுதி அதிபரும், மாணவர் தேசிய படையணி மற்றும் பாண்ட் அணி ஆகியவற்றின் பொறுப்பாசிரியரும், ஆங்கில ஆசானும், கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவரும் மற்றும் யாழ்ப்பாணம் றோட்டறிக்கழகம், யாழ்ப் பாண மாவட்ட கிரிக்கெட் சங்கம், யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட மத்திய ஸ்தர்சங்கம், சைவ பரிபாலன சபை, ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும் யாழ்.மாவட்டத்தில் பல்வேறு விளையாட்டுத்துறை அமைப்புகளையும் கட்டி வளர்த்த விளையாட்டுத்துறை நிர்வாகியும்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சோமசுந்தரம் 26.10.2015 திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் நாகலிங்கம் - சிவபாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதி களின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகாம்பிகையின் (முன்னாள் பிரதி அதிபர், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அன்புக் கணவரும், சுரேஷ் (அமெரிக்கா), நிறைஞ்சனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரிய கலா, ரூபராஜ் ஆகியோரின் மாமனும், யாழன், கனா, சாஜுகா, சகானா ஆகியோரின் அன்புப் பேர னும், தனலட்சுமி, இந்திரமலர்,சந்திரமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற திருச்செல்வவிநாயகமூர்த்தி, சிவயோகாம்பிகை ஆகியோரின் அன்பு மைத் துனரும், சாந்தா (நிர்வாக உத்தியோகத்தர் பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை), ராதா, சுகிர்தா (ஆசிரியை, யா/நல்லூர் மங்கையர்க் கரசி வித்தியாலயம்), லதா (சுவிஸ்), சரண்யா, சாரங்கி,பாலச்சந்திரன், சுந்தரேஸ்வரி, கருணாகரன் ஆகி யோரின் அன்பு மாமனாரும், கணேஸ்வரன் (மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), ஸ்கந்தகுமார்(சிங்கப்பூர்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2015) புதன்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று,அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்துக்குத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

பிற்குறிப்பு: முன்னர் அறிவிக்கப்பட்ட தகவலில் அன்னாரின் பூதவுடல் 2 மணிக்கு எடுத்துச் செல்லப்படும் என அறிவிக்கப்பட்டது.
அது பிற்பகல் ஒரு மணிக்கு என மாற்றப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தார்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சமூகத்தினர், யாழ்.விளையாட்டுத்துறை ஆர்வலர்கள் அனைவரை யும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

7, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.021 222 1142
(F/75680)(11.13.17)
தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிக்கூட்டுக்கோபுரக் கடிகாரம் விரைவில் நேரத்தைக் காட்டும்

யாழ்ப்பாணம், ஒக்.28

யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்தில் உள்ள கடிகாரம் விரைவில் திருத்தியமைக்கப்படும் என்று யாழ். மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார். மணிக்கூட்டுக் கோபுரத்தில் பழுதடைந்து செயலிழந்த நிலையில் உள்ள இந்தக் கடிகாரத்தை விரைவாகத் திருத்தியமைக்க உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொழும்பில் உள்ள இந்தக் கடிகார நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் விரைவில் கடிகாரத்தைத் திருத்தியமைக்க உள்ளது. கடந்த சில மாதங்களாகச் செயலிழந்த நிலையில் இந்தக் கடிகாரம் காணப்படுகின்றது. மணிக்கூட்டுக் கோபுரத்தின் இந்தக் கடிகாரம் பழுதடைந்ததால் உரிய நேரத்தைப் பார்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். நகரின் மத்தியில் உள்ள இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தின் கடிகாரத்தை விரைவாகத் திருத்தியமைப்பதற்கு மாநகராட்சி மன்றம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். (ஐ-17)

## மேர்வின் சில்வாவுக்கு எதிராக நிதி மோசடி முறைப்பாடு

கொழும்பு, ஒக்.28

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தனக்கு எதிராகக் கொழும்பு நிதி மோசடி விசாரணை பிரிவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை நிராகரிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். கடந்த ஆட்சியின் போது களனிப் பிரதேச சபைக்கு உரித்தான காணி யொன்றை மேர்வின் சில்வாவும், அவரது ஆதரவாளரும் இணைந்து போலி உறுதிப்பத்திரம் தயாரித்து, விற்பனை செய்துள்ளதாக பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவில் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. களனிப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சுனில் லக்ஷ்மன் விஜேசிறியினாலே இந்த முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டைத் தான் நிராகரிப்பதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அனைத்து நியாயமான விசாரணைகளுக்குத் தான் தயார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)


### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
### மானிப்பாய் கிராம உப அலுவலகம்
### ஆனைக்கோட்டை
### ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

வட்டாரம்:07
ஆதன இலக்கம்: 128(புதியபதிவு)
யாழ் மானிப்பாய் வீதி
கிராம அலுவலர் பிரிவு: ஜே/132 ஆனைக்கோட்டை

வட்டாரம் 07 யாழ் மானிப்பாய் வீதி.ஆதன இலக்கம் 128 (புதியபதிவு) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று சுதுமலை இறை பிரதேசசெயலகம் சண்டிலிப்பாய்,பிரதேசசபை மானிப்பாய் (வலி தென்மேற்கு) கிராமசேவையாளர் பிரிவு ஜே/132, ஆனைக்கோட்டை " நளவன் சாட்டி" )என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி 3.1 கொண்ட இவ்வாதனமானது ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தம்பு துரைராசா கைம்பெண் இராஜேஸ்வரி ஆகிய இவர்களால் சீதன உறுதி மூலம் அதே இடத்தைச் சேர்ந்த சுவாம்பிள்ளை ஜோர்ஜ் பெண் சாரதாதேவி என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தரிஸ் திரு.மா.தியாகராஜா முகதாவில் நிறைவேறிய 5183 ஆம் இலக்க 2002.09.24 ஆம் திகதிய சீதன உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார்."நளவன் சாட்டி" நிலப்பரப்பு 01 குளி 3.1 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் சுவாம்பிள்ளை ஜோர்ஜ் பெண் சாரதாதேவி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்

### வேலை வாய்ப்பு

Best focus Studio விற்கு Video Editing and Photoshop தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை.
தொடர்பு:-Best focus (kajan)
077 793 7273, ஊரெழு.
(6868)(11,15,17)

### நோதேர்ன் கால்நடை சிகிச்சை நிலையம்
### Northern Animal Clinic & Surgery

மிருக வைத்திய சேவையும்
கால்நடை மருந்தகமும்
கே.கே.எஸ். வீதி,
உப்புமடம் சந்தி,
கோண்டாவில். (64439)(11.15)
077 333 7146,
021 221 5322

### உடன் தேவை

தனியார் நிறுவனங்களுக்கு 18 - 45 வயது ஆண்,பெண் தேவை. சம்பளம் 15000/= 28000/= (Sales Girls & boys எழுதுவினைஞர், Sales Rep, Receiption)மற்றும் பல வெற்றிடங்கள்.
தொடர்பு: வவுனியா -077 496 9340


## வரணிப் பிரதேசத்தில் பனை மரங்கள் தறிப்பு

வரணி, ஒக்.28

வரணிப் பிரதேசத்தில் பனை மரங்கள் பெரும் எண்ணிக்கையில் தறிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பகுதியில் இடைக்குறிச்சி, கரம்பைக் குறிச்சி ஆகிய இரு கிராமங்களிலும் தலா 100 க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு இந்திய அரசின் உதவியுடன் வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டமை காரணமாகக் குறித்த பிரதேசங்களில் பனை மரங்கள் பெரும் எண்ணிக்கையில் தறிக்கப்பட்டுள்ளன. அதே சமயம் பனை மரங்களுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இளம் பனை மரங்களும் தறிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. இந்தத் தட்டுப்பாடு காரணமாகத் தென்னை மரங்களும் தறிக்கப்பட்டு அவை வீட்டுத் திட்டத் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தென்னை மரங்கள் பனை மரங்களிலும் பார்க்க குறைந்த விலையில் வாங்கக்கூடியதாக உள்ளதெனப் பயனாளிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-122)

## தீவகப் பகுதிக் குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கி வைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.28

தீவகப் பகுதியில் வசிக்கும் வசதி குறைந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் ஏழைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்குமாக சுமார் 5 லட்சம் பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியிலிருந்து துவிச்சக்கர வண்டிகள் கோழிக் கூடுகள் மற்றும் கோழிக் குஞ்சுகளையும் வழங்கியுள்ளார். வேலணை, நயினாதீவு, புங்குடுதீவு, அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளில் வசிக்கும் 25 மாணவர்களுக்கு ரூபா 3 லட்சத்து 25 ஆயிரம் பெறுமதியான துவிச்சக்கர வண்டிகளும், தொழி லின்றி, வருமானமின்றி, வறுமை நிலையிலுள்ள 10 குடும்பங்களுக்கு 2 லட்சம் ரூபா பெறுமதியான கோழிக் கூடுகளும்; கோழிக்குஞ்சுகளும், தீனிகளும் வழங்கப்பட்டுள்ளன. கடந்த திங்கட்கிழமை வேலணை மத்திய கல்லூரியில் அதிபர் கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் குயின்ரன், அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட மாணவர்களும் கலந்து கொண்டனர். (ஐ-115)

## மழையால் கிரவல் வீதி சகதியில்; மக்களின் போக்குவரத்து பாதிப்பு

தற்போது பெய்துவரும் மாரிமழையால் பருத்தித்துறை - மருதங்கேணி வீதியில் குடாரப்பு சந்திப் பகுதி சேறும் சகதியுமாய் காணப்படுவதால் அந்தப் பகுதி ஊடான போக்குவரத்துக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மழையால் இந்தக் கிரவல் வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதால், வீதியால் போக்குவரத்துச் செய்ய முடியாது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வீதியூடான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன், பிரதேச செயலகத்தின் உதவியுடன் உடனடியாக வீதியை சீரமைத்துப் போக்குவரத்தை ஓரளவு நிவர்த்தி செய்வித்தார். தற்போது இந்தக் குடாரப்புச் சந்திப் பகுதியைச் சீரமைத்துத் தருமாறு பிரதேச செயலர், வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார். வீதி அபிவிருத்தி அதிகார சபை சம்பந்தப்பட்ட வீதியை விரைவாகச் சீர் செய்து சீரான போக்குவரத்துக்கு வழி செய்ய வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ-17)


### ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- இலங்கையில் FRENCH MINISTRY OF FOREIGN AFFAIRES & FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே.
- 136 நாடுகளில் 1092 கிளைகள். தலைமை நிறுவனம் 1883 PARIS இல் நிறுவப்பட்டது
- ஆசிரியர்கள்: பிரான்ஸ்நாட்டு நிபுநர்களால் பயிற்றுவிக்கப்படும் ஆசிரியர்கள், யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள்,பிரான்ஸ்நாட்டவர்...இலங்கையில் AF ஆசிரியர்களே சர்வதேச பரீட்சையை (DELF,DALF) நடத்துகிறார்கள்
- இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF,DALF)ஐ வழங்குகிறது. எமது சான்றிதழ்களை எந்தவொரு நாட்டிலும் சமர்ப்பிக்கலாம்.
- யாழ்,வன்னி,மன்னார்,திருகோணமலை,மட்டக்களப்பு,கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AFஇல் படித்தே FRANCE, CANADA...(திருமணம் மூலம்/தொழில்/படிப்பிற்கு)செல்கிறார்கள்.

ஆரம்பம் விரைவில். உடன் பதிவை உறுதிப்படுத்துக
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதக் கடவை → AF(வெள்ளை மாடிக்கட்டடம்)



JOIN THE FASTEST GROWING BANK.



An opportunity to embark on a career in Banking.

**Walk – in Interviews**

**Northern / Eastern Province**

**On Saturday, 31st October 2015 from 9 a.m. to 12 noon**

**BUSINESS DEVELOPMENT OFFICERS**

The job entails promoting the Bank's Liability product portfolio which includes Time Deposits, Savings and Current Accounts.

The selected individuals will be placed within the Union Bank branch network and will be responsible to develop sales leads, cover a demarcated area and achieve the set targets for new customer acquisitions.

An attractive performance based incentive scheme will be available in addition to the basic salary.

**Requirements**

- Passion for sales.
- Flair for outdoor work.
- Be self motivated with a drive to succeed.
- Be GCE O/L or GCE A/L qualified.

Union Bank is one of Sri Lanka's leading Banks supported by the strength of TPG, the US based global private investment firm with US$74.3 billion in capital under management and an extensive global network with significant presence in Asia and Europe. With a solid foundation etched with financial stability and international know-how, Union Bank is amongst the top 5 private commercial banks in market capitalisation in Sri Lanka, offering a full range of products and services to personal and commercial financial sectors.

Interviews will be held at

**Northern Province**
Zonal Office, Union Bank Colombo PLC, 01st floor, 398, Hospital Road, Jaffna.

**Eastern Province**
Union Bank of Colombo PLC, No. 03, Station Road, Batticaloa.

UNION BANK

Fitch BB+(lka), RAM BBB/P3 Union Bank of Colombo PLC is a licensed Commercial Bank supervised by the Central Bank of Sri Lanka.

Union Bank of Colombo PLC | Head Office: 64, Galle Road, Colombo 03. | www.unionb.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரிப்புக்கு மாணவரின் காதல் தொடர்புகளே காரணம்

## சமாதானம் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்புக்கள் அமைச்சர் திலக் மாரப்பன தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.28

இன்றைய காலகட்டத்தில் இடம் பெறும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் 75 வீதமானவைகளுக்கும் காரணம், பாடசாலை மாணவர்களிடையே ஏற்படும் காதல் தொடர்புகளாகும். இவ்வாறு சமாதானம் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்புக்கள் அமைச்சர் திலக்மாரப்பன கொழும்பின் சிங்கள வார இதழொன்றுக்குத் தெரிவித்துள்ளார். இத்தகைய சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களில் குற்றவாளிகளாகக் காணப்படும் பாடசாலை மாண வர்களுக்கு, தண்டனைச் சட்டக் கோவைக்கு அமைய ஏழு ஆண்டு கள் சிறைதண்டனை வழங்க முடியும். இத்தகைய மாணவர்கள் பெரும்பாலும் 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட வயதைக் கொண்டிருப்பதால் அவர்களது எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு அந்தப் பாரதூரமான தண்டனைக்குப் பதிலாக நீதி மன்றத்தால் பெரும்பாலும் தளர் வான தண்டனைகளே வழங்கப்படுகின்றன.

அதன் காரணமாக பாடசாலை மாணவ மாணவியர் காதல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும்போது, துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெறாமல் காத்துக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டியிருப்பதாகவும், விசேடமாக தண்டனைச் சட்டக் கோவையில் இது சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ள பாரதூரமான சட்டங்களைப் பற்றி அனைவரும் கடும் அவதானத்துடன் இருப்பது முக்கியமானது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஜ-22)

# இந்து ஆரம்பப் பாடசாலையின் நூற்றாண்டு நிறைவு விழா





யாழ்ப்பாணம்,ஒக்.28

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்வுகள் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. 1915 இல் ஆரம்பிக்கப்பட்டு இந்த ஆண்டு நூற்றாண்டைக் கொண்டாடும் இந்தப் பாடசாலையின் நூற்றாண்டு விழா நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா,கௌரவ விருந்தினராக ஆறு.திருமுருகன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இதன்போது பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ஜ-101)

# கச்சாய் பொது நூலகத்தால் மாணவர்களுக்கு போட்டிகள்

சாவகச்சேரி.ஒக்.28

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்படவுள்ள போட்டிகள் இன்று புதன் கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளன. முன்பள்ளி தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கு சொல்வதெழுதல், கட்டுரை, சிறுகதை, வாசிப்பு (ஆங்கிலம்) ஆகிய போட்டிகளை நூலகத்தினர் நடத்தவுள்ளனர். இன்று முன்பள்ளிச் சிறுவர் களுக்கு சொல்வ தெழுதல் போட்டியும், தரம் 4-5 மாணவர் களுக்கு சிறுவர் தினம், பனைவளம் பேணி பயன் பெற்று வாழ்வோம், செய்தித் தாள், சோமசுந்தரப் புலவர் ஆகிய தலைப்புக்களில் 10 வசனங்கள் கொண்ட கட்டுரைப் போட்டியும், தரம் 6- 7 மாணவர்களுக்கு முதியோரை மதிப்போம், இசைக்கலையும் நாடகக் கலையும், வானொலியால் பெற்ற நன்மைகள், வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான், நான் பார்த்த புத்தகக் கண்காட்சி ஆகிய தலைப்புக் களில் 20 வசனங்கள் கொண்ட கட்டுரைப் போட்டியும், தரம் 10-11 மாணவர்களுக்கு ஈழத்தில் புதுக்கவிதை, வெகுசனத் தொடர்பு சாதனங்களின் நன்மை தீமைகள், பசுமை யைப் பாதுகாப்போம், ஈழத்தில் மொழி பெயர்ப்பு இலக்கியம் ஆகிய தலைப்புகளில் 250 சொற்களுக்குக் குறையாத கட்டுரைப் போட்டியும் இடம்பெறும். நாளை வியாழக் கிழமை தரம் 12 13 மாணவர்களுக்கு வாசிப்புப் பழக்கத்தை வளர்த்தல், பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் அதற்கான தீர்வுகளும், தமிழர் வாழ்வின் தார்மீக நோக்கம், அன்பின் வழியது உயர் நிலை எனும் தலைப்புக்களில் 300 சொற்களுக்குக் குறையாத சிறுகதைப் போட்டியும், தரம் 7-8 மாணவர்களுக்கு ஆங்கில மொழி வாசிப்புப் போட்டியும் இடம்பெறும். நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தரம் 3 தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்களுக்கு சுவரொட்டிப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. தரம் 3-4-5 மாணவர்களுக்கு எனது அழகியல் புத்தகம் என்னும் தலைப்பிலும், தரம் 6-7-8 மாணவர்களுக்கு எமது அழகிய நூலகம் என்னும் தலைப்பிலும், தரம் 9-10 மாணவர்களுக்கு வாசிப்பினூடாக நவீன கல்வித்துவம் எனும் தலைப்பிலும் சுவரொட்டிப் போட்டிகள் நடத்தப்படவுள்ளதென நூலகர் அறிவித்துள்ளார். (ஜ-9)

# பணத்துக்காகக் கொலை முயற்சி ஹற்றன் யுவதியொருவர் கைது

கொழும்பு, ஒக்.28

தனது தாயின் சகோதரியின் கணவரை கூரிய ஆயுதத்தினால் தாக்கி அவரிடமிருந்த ஒரு இலட்சத்து 48 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையிட முயற்சித்த குற்றச்சாட்டில் யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை ஹற்றன் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:- தாக்குதலுக்குள்ளானவரின் சகோதரி, சவூதி அரேபியாவில் வீட்டுப் பணிப்பெண்ணாகத் தொழில் புரிகிறார். அவர் தமது சகோதரி அனுப்பிய பணத்தை சேமிப்பிலிருந்து எடுத்துக் கொண்டு ஹற்றனுக்குச் சென்றுகொண்டிருந்த போதே குறித்த நபரால் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு அவரிடம் இருந்த பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது. உடலை முழுமையாக மூடும் வகையிலான அபாயா அணிந்து வந்த நபரே பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றதாக வெலிஓயா மேல் பிரிவைச் சேர்ந்த காயமடைந்தவரின் மனைவி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து பொலிஸார் குறித்த நபரை கைதுசெய்ததோடு கொள்ளையிட்ட பணத்தையும் அவரிடமிருந்து மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர் 31 வயதுடைய யுவதி ஒருவர் என்பதுடன், காயமடைந்த நபரின் மனைவியின் சகோதரியின் மகள் எனவும் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அத்துடன் சந்தேக நபரிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்து கொண்டிருந்த வேளையில் குறித்த யுவதி பொலிஸ் நிலையத்தில் அமைதியின்மையைத் தோற்றுவித்ததோடு, பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளார். இதில் பொலிஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கைதான யுவதி 6 மாதகாலமாக வீட்டுப் பணிப்பெண்ணாக சவூதி அரேபியாவில் தொழில் செய்துள்ளதோடு, சுகவீனம் காரணமாக கடந்த வருடம் நாடு திரும்பியுள்ளார். மேலும் அவர் மதுபோதைக்கு அடிமையானவர் என்றும், சற்று மனநிலை பாதிக்கப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதானவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சம்பவத்தில் காயமடைந்த நபர் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஜ-10)

# பரிசளிப்பு நிகழ்வும் நிறுவுநர் தினமும்

சுழிபுரம்.ஒக்.28

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வும் நிறுவுநர் நினைவு தினமும் நாளை வியாழன் பிற்பகல் 2 மணிக்கு புதிதாகத் திறக்கப்பட்ட சுப்பையா உடையார் தெய்வானைப்பிள்ளை நினைவு திறந்த வெளிஅரங்கில் கல்லூரி அதிபர் திருமதி ச.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராக விக்ரோறியன் வைத்திய கலாநிதி க.சண்முகநாதன், கௌரவ விருந்தினராக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார் ஆகியோரும் கலந்துகொள்ள உள்ளனர். நினைவுப் பேருரையை கொழும்பு தேசிய சமூக அபிவிருத்தி கற்கை நிறுவன விரிவுரையாளர் விக்ரோறியன் வ.ஜெயரூபன் ஆற்றுவார்.

(ஜ-28)




பாராட்டி வாழ்த்துகின்றோம்

உடுவில் மகளிர் கல்லூரி மாணவி

செல்வி நியூமன் ரஜித் ஆன்சி

அவர்கள் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பயிற்றுவித்த வகுப்பாசிரியர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களையும் பாடசாலை அதிபரையும் வாழ்த்துவதோடு அவர் மென்மேலும் கல்வியில் பல சாதனைகள் படைத்து சிறப்புற்று வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

அன்புடன் வாழ்த்துபவர்:-

இ.ரெம்சி மாமா - நீர்வேலி

(64168)(11,16,17)

பரிசில் நாளில் பாராட்டுகின்றோம்

யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம், அச்சுவேலி



எமது பாடசாலையில் கிட்டத்தட்ட 15 வருடங்களின் பின்னர் 2015 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவி செல்வி ஜெயறட்ணம் லிதுசா அவர்களையும்

அவரது வகுப்பாசிரியர் திருமதி கோ.கருணாகரன் மற்றும் அவருக்கு உறுதுணையாக நின்ற ஆசிரியர்களான சி.கங்காதரன், திருமதி ம.அருளேந்திரன் ஆகியோரையும் இன்றைய பரிசில் நாளில் வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:

ஆசிரியர் நலன்புரி கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



**கப்டன் நா.சோமசுந்தரம்**

(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முன்னைநாள் பிரதி அதிபர், மற்றும் முன்னைநாள் தலைவர் - பழைய மாணவர் சங்கம்)

மண்ணில் 26.12.1933 விண்ணில் 26.10.2015

அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்து குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சி.19644) (13.15) **பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.**

# கண்ணீர் அஞ்சலி




எமது சக ஊழியர்களான திருமதி ஜீவமலர் நிர்மலானந்தன் (முகாமையாளர்) அவர்களின் தாயாரும் திருமதி துஷாஜீவி கிரிஷாந்தன் அவர்களின் அம்மம்மாவுமாகிய

**அமரர் தங்கரத்தினம் சபாரத்தினம்**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட முகாமையாளரும் ஊழியர்களும்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம். (65590)(12,15)

# யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் கண்ணீர்க் காணிக்கைகள்



**கப்டன் என்.சோமசுந்தரம்**

(யாழ்.இந்துக் கல்லூரி முன்னாள் பிரதி அதிபர், யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஸ்தாபகர்)

நேற்று முன்தினம் திங்கட்கிழமை (26.10.2015) அன்று காலமான கப்டன் நாகலிங்கம் சோமசுந்தரம் (முன்னாள் தலைவர், யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம்) அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம். அவரின் இழப்புத் துயரில் நாமும் பங்கெடுக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி.19643)(11.15.17) **யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம்**

# கண்ணீர் காணிக்கைகள்



**கப்டன் நாகலிங்கம் சோமசுந்தரம்**

(கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை முன்னாள் பணிப்பாளரும் ஆலோசகரும்)

26.10.2015 அன்று காலமான கப்டன் நாகலிங்கம் சோமசுந்தரம் (கோல்டன் ஈகிள் பாதுக்காப்பு சேவை முன்னாள் பணிப்பாளரும் ஆலோசகரும்) அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை பணிப்பாளர் மற்றும் ஊழியர்கள்**

# விண்ணக வாழ்வில் 31ஆவது நாள்

**அமரர் தவநாதன் ஜெயசீலி**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
(யோவான் 11:25)



28.09.2015 அன்று இறைபதம் சேர்ந்த எமது குடும்ப உறுப்பினரின் மரணச்செய்தி அறிந்து எம்முடன் துயர் பகிர்ந்து அன்பும் ஆதரவும் நல்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலர்வு 02.12.1951 உதிர்வு 28.09.2015

இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

## மன்னாரில் நடைபெற்ற விழிப்புணர்வுக் கருத்தரங்கு

மன்னார் நகர பிரதேச செயலக வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தினால் வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்தி மன்றம் மற்றும் மதுவரித் திணைக்கள அனுசரணையுடன் பேசாலை கிராமத்தில் மதுபோதை ஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று கடந்த 24 ஆம் திகதி நடத்தப்பட்டது. குறித்த கருத்தரங்கு பேசாலை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜவால்ட் லோகு தலைமையில் நடைபெற்றது. இதில் பேசாலை பங்குத் தந்தை அருட்பணி செபமாலை அடிகளார், முருகன் கோவில் ஆலய குருக்கள் தர்மகுமார் சர்மா, மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர் ஏ.றொபின்சன், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.அன்றூாஸ், சமூக அபிவிருத்தி உதவியாளர் எம்.எம்.ஐகித் உட்பட அதிகமான பெண்களும் ஆண்களும் கலந்து கொண்டனர். (ஐ-21)

# இதய அஞ்சலி



**கப்டன் N சோமசுந்தரம்**

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் தலைவராகவும், நிர்வாக சபை உறுப்பினராகவும் இருந்து சபையின் செயற்பாடுகளில் முன்னின்றுஉழைத்த N. சோமசுந்தரம் அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா உயிர் அமைதி பெற பிரார்த்திக்கின்றோம்.

சைவபரிபாலன சபை,
(65599)(11,15) யாழ்ப்பாணம்.

# இந்துவின் மைந்தனுக்கு இதயஅஞ்சலி



**கப்டன் N. சோமசுந்தரம்**

(முன்னாள் பிரதி அதிபர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

எடுப்பான அழகும், மிடுக்கான ஆளுமையும்
இயல்பாகக் கொண்ட எங்கள் பேரொளியே!
இறுதிவரை இந்துக்கல்லூரியுடன்
இணைந்திருக்கும் இனிய பேறு
இனி எவர்க்கு வாய்க்கும்?
காலப் பெருஞ்சுடரே!
கனதியான உங்கள் நினைவுகள்
எப்போதும் ... இங்கேயே...!

(65601)(10,15,17)

1991 உயர்தர பழைய மாணவர்கள்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் தங்கநாயகம் நாகரத்தினம்**

அன்னை மடியில் 28.11.1925

ஆண்டவன் அடியில் 20.10.2013

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாய் ஆகிவிட்ட தாயே!
எம்மை விட்டு நீங்கள் பிரிந்து
இரண்டு ஆண்டுதான் சென்றாலும்
எம்மனதில் நீங்கள் என்றுமே வாழ்கின்றீர்கள்
என்றுமே இறைவனிடம் சாந்திபெற இறைஞ்சுகிறோம்.

குடும்பத்தினர்:
நா.தங்கராசா (N.T.R)
அருள்முருகன் ஹாட்வெயர்
முருகன் கிறேசர்
N.T.Rரான்ஸ்போர்ட்

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு. (64003) 077 731 4820, 077 731 0059

## சென் . ஆன்ஸ் வீதி வெள்ளத்தில் பொதுமக்களுக்கு அசௌகரியம்

பாண்டியன்தாழ்வு சென்.ஆன்ஸ் வீதியில் பல இடங்கள் தாழ்வாகவும், குழிகளாகவும் காணப்படுவதால் மழைபெய்யும் வேளைகளில் வெள்ளம் தேங்கி நின்று போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். குறித்த வீதி நீண்டகாலமாகச் செப்பனிடப்படாமையால் தாழ்வடைந்த பகுதிகளில் மழைவெள்ளம் தேங்கி நிற்கிறது. பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணிகள் தேங்கிநிற்கும் வெள்ளத்தைக் கடந்து செல்ல வேண்டிய அசௌகரிய நிலை காணப்படுகிறது. இது தொடர்பாக மாநகர சபையினருக்கு பலமுறை முறையிட்டும் பயனேதும் கிடைக்க வில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ-135)

## தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஒக். 28

தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு துர்க்கா தேவி தேவஸ்தானத்துக்கு அருகிலுள்ள தெல்லிப்பழை லயன்ஸ் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளருமாகிய ச.சிவானந்தராசா தலைமையில் நடை பெறும் இந்தக் கூட்டத்தில் தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு கடந்த ஒருவருட காலத்தில் அதனால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட உள்ளன. தொடர்ந்து தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டு தெல்லிப்பழைத் தமிழ்ச்சங்கத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்படும்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் கலையார்வம் கொண்டவர்கள், தமிழ் மீது பற்றுக்கொண்டவர்கள், எமது தாய் மொழியைப் பாரெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற பேரவாக் கொண்டவர்கள், தமிழை மூச்சாகக் கருதுபவர்கள் அனைவரும் எமது தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தில் ஆயுட்கால உறுப்பினராகவோ, சாதாரண உறுப்பினராகவோ இணைந்து எமது தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சிக்கும் தாய் மொழியாம் தமிழ்மொழியின் எழுச்சிக்கும் பேருதவி புரியலாம். உங்கள் மேலான சிந்தனைகள், நல்ல ஆலோசனைகளை வழங்கி தமிழ்ச் சங்கத்தை பெறுமதி மிக்க ஓர் உயரிய சங்கமாக்கிட வேண்டும் என்றும் தெல்லிப்பழைத் தமிழ்ச் சங்கத்தின் இணைச்செயலாளர் லயன் சி.ஹரிகரன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ-4,1

## பூதர்மடம் ஆலயம் புதிதாக நிர்மாணிப்பு

நூற்றாண்டு பழைமை வாய்ந்த கோப்பாய் பூதர்மடம் வைரவர் ஆலயம் புதிதாக நிர்மாணம் செய்யப் பட்டுள்ளது. பூதர்மடம் வீதியின்நுழைவாயிலில் அமைந்துள்ள இந்த ஆலயம் கடந்த பல வருடங்களாக நிர்மாணப் பணிகள் எதுவுமின்றி பின்னடைவு கண்ட நிலையில் இருந்து வந்துள்ளது.

பிரதேச மக்களின் அயராத முயற்சியாலும் ஒத்துழைப்புக் காரணமாகவும் ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப் பட்டு கடந்த வெள்ளி கிழமை தொடக்கம் பூசை வழிபாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அத்துடன் அவசியமான தேவைகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஆலய தேவைக்கென புதிதாக குழாய்க் கிணறு ஒன்றும் அமைக்கப்பட் டுள்ளது.

அதேசமயம் ஆலயத்துக்கு அருகில் புராதன சின்னமாக விளங்கிய பூதர்மடத் தையும் மீள நிர்மாணிக்கவும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட் டுள்ளது.

பழைமை வாய்ந்த பூதர் மடம், கடந்த கால இராணுவ நடவடிக்கையால் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய சக்தியில் இயங்கும் இராட்சத விமானம்





பல்வேறு நாடுகள் இராட்சத விமானங்களைஉருவாக்கும்முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் நிலையில், சீனா சத்தம் சந்தடியின்றி தனது சூரிய சக் தியில் இயங்கும் இராட்சத விமானம் ஒன்றை கடந்த வாரம் பறப்பில் ஈடுபடுத்திப் பரீட்சித்துள்ளது.
சூரிய சக்தியில் இயங்கக்கூடியதாக இருக்கும் இந்த விமானத்தில் மின் சக்தியைச் சேமிக்கக் கூடிய நவீன ரக மின்கலமும் காணப்படுகின்றது. இந்த மின்கலம், ஒருமுறை சார்ஜ் செய்து ஆறு மாதங்கள்வரை பயன்படுத்தக்கூடியதாகக் காணப்படுகின்றது.
சீன மொழியில் Yuanmeng (கனவு) எனும்பெயரிடப்பட்டுள்ள இந்தவிமானத்தின் நீளம் 75 மீற்றர்களாகவும், உயரம் 22 மீற்றர்களாகவும் காணப்படுவதுடன், கொள்ளளவானது 18,000 கனமீற்றர்களாகவும் இருக்கின்றது. இந்த விமானம் 4.5 தொடக்கம் 6.3 மெட்ரிக் தொன் வரையான பொருள்களைக் காவிச் செல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
கடந்த வாரம் 48 மணிநேரம் பறப்பில் ஈடுபடுத்தப்பட்டு வெற்றிகரமாக பரீட்சிக்கப்பட்டுள்ளதுடன், இதன்போது தரைமட்டத்திலிருந்து 20 கிலோமீற்றர்கள் உயரம் வரை விமானம் பறந்துள்ளது.



## வேர்சுவல் றியலிற்றி (Virtual Reality) ஹெட்செட்டை அறிமுகம் செய்யும் எச்.ரீ.சீ

நிஜமானவை போன்ற மாயைத் தோற்றங்களை உருவாக்கும் சாதனங்கள் தற்போது தொழில்நுட்ப உலகில் அபரிமிதமான வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கின்றன.
அதிகளவில் கணினியால் ஹேம் உலகை ஆக்கிரமித்து வரும் இந்தச் சாதனம் ஒன்றை எச்.ரீ.சீ (HTC) நிறுவனம் எதிர் வரும் டிசம்பர் மாதம் அறிமுகம் செய்யவுள்ளது. இந்தச் சாதனம் தொடர்பான தகவலை கடந்த மார்ச் மாதம் பார்சிலோனாவில் இடம்பெற்ற மொபைல் வேர்ல்ட் கொங்கிரஸ் (Mobile World) Congress நிகழ்வில் வெளியிட்டிருந்த நிலையிலேயே தற்போது அறிமுகம் செய்யப் படவுள்ளது.
இந்த வேர்சுவல் றியலிற்றி ஹெட்செட்டை முதன் முதலாக அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மனியில் அறிமுகம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.




## தொடுபேசியிலும் வீடியோ எடிட்டிங் செய்யலாம்

வீடியோக்களை எடிட் செய்வதற்கு புதிய செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தொடுபேசியில் உள்ள கமரா மூலம் எடுத்த வீடியோ தொகுப்புகளை, பதிவேற்றுவதைவிட கொஞ்சம் நன்றாக வீடியோ எடிட் செய்து வெளியிடலாம். வீடியோ ஷோ, (Videoshow) என்ற செயலி இதற்கு உதவுகிறது. வீடியோ படங்களை எடிட் செய்வது- அவற்றில் பின்னணி இசை சேர்ப்பது, பில்டர்களைப் பயன்படுத்துவது போன்றவற்றை இந்தச் செயலி மூலம் செய்து கொள்ளலாம். அவற்றில் பொருத்தமான ஸ்ரிக்கர்களையும் சேர்த்து பின்னர் யூடியூப், பேஸ்புக் மற்றும் வாட்ஸ் அப் முலம் பகிர்ந்து கொள்ளலாம்.
காட்சிகளில் Zoom செய்யும் வசதியும் இருக்கிறது. குறும்படமோ, விளம்பரப் படமோ எடுத்துப்பார்க்கும் ஆசை இருந்தால் இந்தச் செயலி மூலம் முயன்று பாருங்கள்.




### கூட்டம்

வேலை தேடும் இளைஞர்களுக்கான கூட்டமொன்று வேலணை பிரதேசசெயலகமாநாட்டு மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. லண்டன் கொலிஜ் ஒவ் பிஸினஸ் ரெக்னோலொஜி நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள இந்தக் கூட்டத்தில் வேலை தேடும் இளைஞர்கள் கலந்து கொள்ள முடியும்.இதன் மூலம் க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர் தரம் படித்தவர்கள் ஆஸ்திரேலிய நிறுவனத்தின் நிதி உதவியுடன் 3 மாத காலப் பயிற்சியும்,தொடர்ந்துவேலை வாய்ப்பையும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் பிரதேசசெயலாளர்தெரிவித்துள்ளார். (ஐ–10)

### சிறுவர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக்.28
நல்லூர் பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர் தின விழா, நல்லூர் பிரதேசசெயலகமாநாட்டு மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வார்பிள்ளை சிறி தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ–ரி6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய்லாந்தில் நடந்த எருது ஓட்டப் போட்டி

சோன்பூரி, ஒக்.28

தாய்லாந்தில் ஆண்டுதோறும் நடத்தப்படும் எருது ஓட்டப்போட்டிகள் நேற்றுமுன்தினமும் நடைபெற்றன. இம்முறை இடம் பெறும் இப்போட்டிகள் 144 ஆவது முறையாக இடம் பெறும் போட்டி என்று தெரிவிக்கப்படுகின்றது.

மிகவும் கஷ்டப்பட்டு வயல்களில் வேலை செய்யும் எருதுகளுக்கு நன்றி செலுத்தும் வகையிலே ஒவ்வொரு வருடமும் இந்த ஓட்டப்போட்டி தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது என்று அந்நாட்டு மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இந்தப் போட்டிகள் ஒரு திருவிழா போன்று கொண்டாடப்படுகின்றமை முக்கிய விடயமாகும்.

சோன்பூரியில் இடம்பெற்ற நிகழ்வைப் பார்ப்பதற்காக பெருந்திரளான மக்கள் உற்சாகத்துடன் வந்திருந்தனர். இந்த போட்டிக்காக எருதுகளுக்கு சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டு அவை போட்டிக்காகத் தயார்ப் படுத்தப்படுகின்றன. போட்டிகளில் வெற்றி பெறும் எருதின் உரிமையாளருக்கு பெருந்தொகையான பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

இந்தத் திருவிழாவில், மற்றுமொரு அங்கமாக எருதுகளின் அணிவகுப்பும் இடம்பெற்றது. இதன்போது, எருதுகள் அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன் பெண்கள் அழகாக உடை அணிந்து எருதுகளின் மேல் ஏறிச் சவாரி செய்தார்கள். (ற)



*பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் பதற்ற நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. மேற்குக் கரையில் இஸ்ரேல் பாதுகாப்புப் படையினரால் பலஸ்தீனப் பெண் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். கைகளில் கத்தியுடன் படையினரை நோக்கிச் சத்தமிட்டபடியே ஓடி வந்ததால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். அல்-அக்ஸா புனிதத்தலம் தொடர்பாக நீடித்துவரும் மோதல்களில் இதுவரை 53 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மோதல்களைத் தவிர்க்கும் பொருட்டு இருதரப்புகளும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.*



# இந்தோனேசியக் காட்டுத் தீயால் தெற்காசிய நாடுகளுக்குப் பாதிப்பு

சிபு, ஒக்.28

இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவுப்பகுதியில் பரவி வரும் காட்டுத் தீ காரணமாக ஏற்பட்டுள்ள புகைமூட்டத்தால் தென்கிழக்காசிய நாடுகள் பாதிப்படைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் வனப்பகுதியில் காட்டுத்தீ பரவி வருகிறது. கடந்த 10 நாள்களாக பரவிவரும் இந்தத்தீயால் அங்கு கடுமையான புகைமூட்டம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அப்பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. காட்டுத்தீயில் சிக்குண்டு இதுவரை 10 பேர்வரையில் உயிரிழந்துள்ளனர்.

பரவிவரும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் மலேசியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உதவி வழங்கி வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புகைமூட்டம் காரணமாக பாதிப்படைந்துள்ள தென்கிழக்கு ஆசிய நாடுகளான சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகள் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கியுள்ளன.

தற்போது பிலிப்பைன்ஸ் நாடும் புகை மூட்டத்தால் பாதிக் கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸில் புகை மூட்டத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்களை முகமூடி அணியுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

மூச்சுத்திணறலால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சையளிக்க மருத்துவமனைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிபு நகரப் பகுதியில் புகைமூட்டம் அதிகரித்துள்ளது என்றும் மத்திய மற்றும் தென் பகுதித் தீவுகளுக்கு நடத்தப்படும் விமானசேவைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# ஓரினச் சேர்க்கைக்கு நூறு பிரம்படி

## இந்தோனேசியாவில் புதிய சட்டம்

இந்தோனேசியாவின் அசே மாகாணத்தில் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கு தண்டனையாக பொது இடத்தில் வைத்து நூறு பிரம்படி வழங்கும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இது போன்ற செயலில் ஈடுபடுவோருக்கு நூறு மாத காலச் சிறைதண்டனையை அனுபவிப்பதோ, அபராதமாக அரசுக்கு ஒரு கிலோ தங்கம் வழங்க வேண்டிய நிலையோ ஏற்படலாம் என்றும் சட்டம் கூறுகின்றது.

2006ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் பிரிவினைவாதிகள் போரை நிறுத்துவதற்காக அரசுடன் செய்து கொண்ட அமைதி ஒப்பந்தத்தில், இந்தோனேசியாவிலேயே முதல்முறையாக இஸ்லாமிய சட்டமான ரியாவை நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. அதிலிருந்து முறையற்ற பாலியல் தொடர்பு வைத்திருப்போருக்கு பிரம்படித் தண்டனை வழங்கப்பட்டு வருகின்றது. சூதாட்டம், மது அருந்துவது போன்றவற்றுக்கும் வெள்ளிக்கிழமை தொழுகைக்கு வராதவர்கள் மற்றும் இறுக்கமான உடைகளை அணியும் பெண்களுக்கும் பொது இடத்தில் வைத்துப் பிரம்படித் தண்டனை வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தநாட்டின் மத்திய அரசின் தலையீட்டால், முறையற்ற தொடர்பு வைத்துக்கொள்பவர்களை சாகும்வரை கல்லால் அடிக்கும் தண்டனை வழங்கப்படுவது சமீபத்தில் நிறுத்தப்பட்டது. இந்த நாட்டின் மத்திய அரசின் சட்டத்தைப் பொறுத்தவரை ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுவது தண்டனை வழங்கப்பட வேண்டியதொரு குற்றமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# எகிப்தில் பெய்கிறது கன மழை சிறுவர் உட்பட ஆறு பேர் சாவு



எகிப்தின் அலெக்ஸாண்ட்றியா பிராந்தியத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சிக்குண்டு இரண்டு சிறுவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளத்தில் சிக்கியிருந்த காரொன்றின் மீது மின்சாரக் கம்பி அறுந்து விழுந்தமையால் அந்தக் காரிலிருந்த இரு சிறுவர்களும் நபரொருவரும் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் ஐவர் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியே உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் தொடர்ந்தும் பெய்து வரும் அடை மழை காரணமாக அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க் கரையில் அமைந்துள்ள ஹெப்ரானில்
கத்தியை எடுத்துக்கொண்டு பாதுகாப்புப்
காரிகள் தெரிவித்துள்ளனர்.
ரியர்களும், இஸ்ரேலியர்கள் 9 பேரும்
ள மேற்கொள்ள வேண்டும் என அமெ
(ற)

# அதிர்ந்தது நிலம்

## 300க்கும் அதிகமானவர்கள் சாவு; ஆப்கன், பாகிஸ்தானில் சோகம்





காபூல், ஒக்.28

ஆப்கன் மற்றும் பாகிஸ்தானின் பின்தங்கிய பிரதேசங்களைக் கடுமையாகத் தாக்கிய 7.5 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத் தப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் இதுவரை 300க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். 2 ஆயிரத் துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். உயிரிழந்த வர்களுள் ஆப்கன் பாடசாலையைச் சேர்ந்த 12 மாணவர்களும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. நிலநடுக்கத் தையடுத்து மாணவர்கள் வெளியேற முற்பட்டபோது நெரிசலில் சிக்கி உயிரிழந்தனர் என்று தக்கர் மாகாணத்தின் இடர்முகாமைத் துவ அதிகாரி குறிப்பிட்டார்.

நிலநடுக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் பின்தள்ளப்பட்ட மலைப் பிரதேசங்களுக்கு மீட்புப் படையினர் அனுப்பி வைக்கப் பட்டு மீட்புப் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சமீபத்திய தசாப்த காலங்களில் ஏற்பட்ட மிகவும் சக்திவாய்ந்த நில நடுக்கமாக இந்த நிலநடுக்கம் உணரப்படுகிறது என்று ஆப்கனின் பிரதம நிறைவேற்று அதிகாரி அப்துல்லா தெரிவித்தார்.

அதேவேளை, வடக்கு பாகிஸ்தானிலேயே அதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. அதன்படி இதுவரை அங்கு 214 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை வழங்கு வதற்கான நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து முன்னெடுத்து வரு கிறது. அத்துடன் ஆப்கனிலுள்ள இந்திய, ஈரான் மற்றும் அமெரிக்கப் படைகளும் மீட்பு நடவடிக்கைகளில் உதவி வருகின்றன. (ற)

## இஸ்ரேலுக்கு ஐ.எஸ். எச்சரிக்கை

நியூயோர்க், ஒக்.28

இஸ்ரேலைக் கைப்பற்றப்போவதாகவும் யூதர்களைக் கொல்லப் போவதாகவும் ஐ.எஸ். அமைப்பு முழுமையாக ஹிப்ரூ மொழியிலான எச்சரிக்கைக் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஐ.எஸ். குழு ஹிப்ரூ மொழியில் இஸ்ரேலை எச்சரித்து காணொளி அனுப்புவது இதுவே முதல்முறையாகும். பலஸ்தீனம் மற்றும் ஜெரூசலேமில் ஒரு யூதர் கூட விட்டு வைக்கப்பட மாட்டார்கள் என்று 16 நிமிடங்கள் கொண்ட அந்த காணொலியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் நடக்கப்போவதுடன் ஒப்பிடும்போது, இப்போது நடப்பதெல்லாம் சிறு பிள்ளைகளின் விளையாட்டாகும். உண்மையான போர் இன்னும் ஆரம்பமாகவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.எஸ்ஸின் பரப்புரை ஊடகத்தின் மூலம் சிரியாவிலிருந்து வெளியிடப்பட்டிருக்கும் இந்த காணொலி, சரளமான ஹிப்ரூ மொழியில் அமைந்துள்ளது. உலகெங்கும் இருந்து ஆயிரக்கணக்கானோர் ஒன்றாக வந்து உங்களைப் படுகொலை செய்து குப்பைத்தொட்டியில் வீசினால் எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்துக்கொள்ளுங்கள் என்று வீடியோவில் ஐ.எஸ். உறுப்பினர் எச்சரித்துள்ளார்.

1916 ஆம் ஆண்டின் சைக்ஸ்-பிகொட் உடன்படிக்கை உருவாக்கிய நாடுகளின் எல்லைகள் உடைக்கப்படும் எனவும் அந்தக்காணொலியில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற)

## இத்தாலிய பணியாளர் கொலை: பங்களாதேஷில் 4 பேர் கைது



இஸ்லாமாபாத், ஒக்.28

பங்களாதேஷில் இத்தாலிய உதவிப் பணியாளரொருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐம்பது வயதான குறித்த நிவாரணப் பணியாளர் கடந்த செப்ரெம்பர் மாதம் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் வைத்துக் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டி ருந்தார். இதற்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு உரிமை கோரியிருந்தது.

இந்த நிலையிலேயே தற்போது நால்வர் கைது செய்யப்பட் டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ளவர்களில் மூவர் குறித்த கொலையுடன் நேரடியாகத் தொடர்புடையவர்கள் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுதக் குழுவுக்குமிடையில் நேரடியான தொடர்பு காணப்படுகின்றதா என்பது குறித்து பொலிஸார் கருத்தெதனையும் வெளியிடவில்லை. (ற)

## ஆப்கன் இராணுவம் தாக்குதல்: 23 தலிபான்கள் உயிரிழப்பு

காபூல், ஒக்.28

வடக்குகுண்டூஸ்மாகாணத்தில் ஆப்கன் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 23 தலிபான்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், 11பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குண்டூஸ் மாகாணத்தில் தலிபான்களுக்கு எதிராக [illegible] இராணுவதினர் [illegible] தஹம் எனும் நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதுதொடர்பில் ஆப்கன் இராணுவச் செய்தித் தொடர்பாளர் குலாம் ஹஸ்ரத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அக்டாஷ் பகுதியில் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. [illegible] ஏற்படவில்லை - என்றார். (ற)

## சவூதி அரேபியாவில் மசூதி மீது தாக்குதல்

### 12 பேர் சாவு: பலர் காயம்



நர்ஜான், ஒக்.28

சவூதி அரேபியாவின் தெற்குப் பகுதியிலுள்ள மசூதி ஒன்றின் மீது தீவிரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவின் நர்ஜான் பகுதியிலேயே இந்தத் தாக்குதல்சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று அந்த நாட்டு ஊடகங்களை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிறுபான்மையினத்தவர்க [illegible] இந்தத் [illegible] மேற்கொள்ளப்பட்டு [illegible] என்று தெரிவிக்கப்பட்டுள் [illegible] இதுவரை 50 இற்கும் [illegible] மானவர்கள் காயம [illegible] துள்ளனர். அதேவேளை [illegible] குண்டுத்தாக்குதல் [illegible] அமைப்பினர் பொறுப்பு [illegible] னர்.

அண்மைக்காலமாக [illegible] போன்ற குண்டுத்தாக்குதல்கள் சவூதி அரேபியாவில் [illegible] அதிகரித்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர்
இ.சிவசங்கர்

# பெண்கள் சார்ந்த நடத்தைகளில் மாற்றத்தைத் திணிக்கக்கூடாது

வாழ்வு என்பது போராட்டம் ஆகும். போராட்டக் களத்தில் போராடுவது மட்டும்தான் எமது கடமையோ உரிமையோ இல்லை. பலம், பலவீனம் அறிந்து தேவைப்படும் இடங்களில் தற்காப்பு நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்வதே வெற்றிகரமான வாழ்வுக்கு இட்டுச்செல்லும்.

மேலும் எமது தேவைகள், விருப்பங்கள் ஆகியவற்றை நிறைவேற்றிக் கொள்ளலில் நாம் மனிதர்கள், இயற்கை என்பவற்றுடன் முரண்பட, மோதலில் ஈடுபடச் செய்கின்றோம். முரண்படாத, மோதலில்லாத அணுகுமுறைக்கூடாக வாழ்வை நகர்த்திச் செல்ல முடியாதா என்ற கேள்வியும், அதற்கான யுக்தியைக் கண்டு கொள்ளமுடியாதா என்ற தேடலும் எம்மிடம் தோன்ற வேண்டும். அதனூடாகவே மோதலற்ற திருப்திகரமான வாழ்வை வாழமுடியும்.

மோதலற்ற வாழ்வு எனும்போது, அடிமைப்பட்ட சரணாகதிவாழ்வு என எண்ணுதல் தவறு. மோதலைத் தவிர்த்து, அதேநேரம் எமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு அணுகுமுறையைக் கண்டு கொண்டு வாழ்வதே வாழ்க்கையைப் பயனுடையதாகப் பயன்படுத்துவதற்கு இட்டுச்செல்லும். மோதும், போராட்ட அணுகு முறையால், நாம் இடை நடுவில் அழிந்து போகலாம் அல்லது போராடுவதிலேயே எமது காலம், சக்தி, கவனம் என்பவற்றை இழந்து வாழ்வில் அடைய வேண்டியதை அடையமுடியாமல் போகலாம்.

வாழ்வின் கூறுகளுடன் இசைந்த நிலையில் வாழ்தல் ஓர் ஒழுங்கை, லயத்தை ஏற்படுத்தும். முட்டுப்பட்டு மோதுவதால் குழப்பங்களும் கொந்தளிப்புகளும் ஏற்பட்டு வாழ்வு ஓர் அபசுரம் என்றாகிவிடும்.

மோதல் தவிர்ப்பு அணுகுமுறையே நாம் வரித்துக் கொண்ட வாழ்வின் இலக்கை அடைய உதவும். இலக்கில் உறுதியாக இருக்கும்போது, தேவைப்படும்போது மட்டும் மோதலையும் ஏனைய நிலையில் தவிர்த்தல் விலகுதல் போன்ற மாற்று வழிகளுக்கூடாக நகர்ந்து செல்லுதலே முன்னேற்றத்தை உறுதி செய்யும்.

பொதுவில் எம்மில் மாற்றத்தை ஏற்படுத்துவதோ அல்லது புதிய வழிமுறைகள் அணுகுமுறைகள் என்பவற்றைக் கண்டு கொள்வதோ கடினமான சக்திச் செலவுமிக்க செயற்பாடாக அமையும், எனவே இலகுவான வழிமுறையான, எமக்கு ஏற்கனவே பரிச்சயமான முறைகளையும், நாம் எம்மில் மாற்றத்தை ஏற்படுத்தாது மற்றவர்களில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் முறைகளையும் நாம் நடைமுறைப்படுத்த முயல்கின்றோம். இவை புத்திசாலித்தனமற்ற முரட்டு அணுகுமுறையாகக் காணப்பட்டு மோதலையும் சிலவேளைகளில் எமக்குப் பாதிப்பையும் அழிவையும் ஏற்படுத்துவதுடன் முடிவடைவதைக் காணலாம்.

இயற்கையையும், மனித சமூகத்தையும் எமக்குத் தேவையான வகையில் முழுமையாக மாற்றியமைத்துவிட முடியாது. மாற்ற முடியாததை இனம்கண்டு அவற்றுக்கமைய எமது வாழ்முறையை மாற்றி அமைத்து வாழ்வதே புத்திசாலித்தனமாகும்.

ஒரு சமூகத்தின் அத்தனை பேரையும் நூறு வீத நல்லவர்கள் ஆக மாற்றியமைத்தல் யதார்த்தத்துக்கு பொருந்துமா, நடைமுறைச் சாத்தியமா? ஒரு சமூகம் எனும் பொழுது பல்வேறுபட்ட, அனைத்துவகை அம்சங்களையுமுடையவர்கள் இருப்பர். விகிதாசாரத்தில் நல்லவர்கள் கெட்டவர்கள் என்பவர்களின் எண்ணிக்கை வேறுபட்டாலும் "நல்லவர்களும் கெட்டவர்களும்" கலந்ததாகவே ஒரு சமூகம் இருக்கும். உலகில் எங்காவது நூறு வீத நல்லவர்கள் உடைய சமூகத்தை உதாரணத்துக்கு சுட்டிக்காட்டி விடக் கூடிய நிலை இல்லை. நாத்திகரோ ஆத்திகரோ, சோசலிசவாதியோ முதலாளித்துவவாதியோ அனைத்துத் தரப்பினரிலும் நல்லவர்களும் கெட்டவர்களும் கலந்தே இருக்கின்றனர். இது யதார்த்தம் ஆகும்.

"கெட்டவர்கள்" என்பவர் ஒரு சமூகத்தில் இருப்பது சாத்தியம், யதார்த்தம் என்றால் அவர்களால் ஏற்படக்கூடிய கெடுதலான நடவடிக்கைகளை நூறுவீதம் கட்டுப்படுத்துவது சாத்தியமா என்ற கேள்வி எமக்குத் தேவையாகின்றது. சமூகவிரோத செயல்களை எந்த வகையில் கட்டுப்படுத்துகின்றோம். உயர் தண்டனைகளை வழங்குவதன் மூலம் என்ற பதில்தான் எம்மிடம் உண்டு. உயர் தண்டனைகளை வழங்குவதனூடாக வேண்டுமென்றால் குற்றச் செயல்கள் நிகழ்வதைக் குறைக்கலாம் என்று கூறலாம். ஆனால் நூறு வீதம் குற்றச் செயல்கள் நடைபெறாது என்று உத்தரவாதம் வழங்க அரசோ, காவல்துறையோ அல்லது வேறு ஏதாவது நிறுவனமோ முன்வரமுடியுமா. இது யதார்த்தமா?

முன்னர் இத்தகைய குற்றச் செயல்கள் நடக்கவில்லை என்று கூறுவது சரியா அல்லது தண்டனை மோசமானதாக இருந்தால் குற்றச் செயல்கள் குறைந்திருந்தன என்றுகூறுவது சரியா. பின்னயதே சரி முன்னர் அங்கும் நலிந்தவர்கள் தண்டனை பெற செல்வாக்குள்ளோர் தப்பிவிடும் சாத்தியம் இருந்தது. அதனாலேயே மரவள்ளிக் கள்ளனும் கோழித்திருடனும் மின்கம்பத்தில் மரணமடைய, கொள்ளையடிக்கும் பெரிய மனிதர்கள் சுகமாக வாழ்வது சாத்தியமாகியது. காவற்றுறை நீதிமன்ற உருவாக்கங்களுடன் அதற்குரிய சிறப்பும் ஓட்டையும் அன்றும் இருந்தன. இது நிர்வாகக் கட்டமைப்பின் நன்மையும் தீமையும் ஆகும்.

இவற்றிலிருந்து நாம் கற்றுணர வேண்டிய விடயம், எந்தக் காலத்திலும் குற்றச்செயல்களை நூறு வீதமாக கட்டுப்படுத்தி குற்றங்கள் அற்ற பிரதேசம் என்று எதனையும் பிரகடனப் படுத்தி விட முடியாது என்பதையே.

மேலும் ஒரு அணுகுமுறை உதாரணத்தைப் பார்ப்போம். பொதுவீதியில் வாகனப் போக்குவரத்து விதிகளை மட்டும் அவதானித்து, கடைப்பிடித்து வாகனம் செலுத்தினால் நாம் பாதுகாப்பாக வீடு வந்து சேர்ந்துவிட முடியுமா? போக்குவரத்து விதிகளைத் தாண்டி பாதை ஞானம் என்பதும் இருக்க வேண்டும். நாம் விதிக்கமைய செயற்பட்டபோதும் ஏனையவர்கள் விதி மீறல்களில் செயற்பட்டால் நாமும் விபத்துக்குள்ளாவோம். வீதியின் போக்குவரத்துக்கு ஆபத்தான இடங்களில், வேளைகளில் தேவைப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தாலே பொறுப்பற்ற சாரதியின் ஆபத்திலிருந்து விபத்தில் மாட்டுப்படாமல் நாம் தப்பித்துக்கொள்ள முடியும். என்னதான் வீதித் தண்டனைகள் உச்ச நிலையில் இருந்தாலும் ஏனையவர்களின் கவனவீன பொறுப்பற்ற நடவடிக்கைகளுக்கும் சேர்த்து எச்சரிக்கையுடன் வீதியில் பயணிக்க வேண்டியதே புத்திசாலித்தனமானது. மேலும் டிப்பர், கன்டர் வாகனங்கள் போய்வரும் பாதைகளில் வீதி விதிக்கமைய வாகனம் ஓட்டுவதற்கும் மேலாக எச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் வாகனம் செலுத்துவது எமது எல்லோரினதும் அனுபவம். அதுவே புத்திசாலித்தனம் ஆகும்.

இதிலிருந்து எமது சூழ்சிலைக்கு வருவோம். எமது சூழலில் நாம் மோட்டார் சைக்கிள் போன்றும் ஏனைய சிலர் கன்டர், டிப்பர் போன்றும் இருந்தால் எமது தினசரி நடைமுறைகள் எப்படி அமையவேண்டும். நாம் சட்டப்படி கண்மூடித் தனமாக வாகனம் செலுத்து வோம் என்று கூறி கன்டரில் அடிபட்ட பின்னர் நீதி கேட்கப் போகின்றோமா? அல் லது கன்டரில் அடிபடாது எம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையிலான வாழ்வு? முறையை அமைத்துக் கொள்ளப் போகின்றோமா? எது பொருத்தமானது? புத்திசாலித்தனமானது? நடைமுறைப் பயனுடையது?

குற்றச் செயல்களுக்காக சமூக எதிர்ப்புக்கள் காட்டப்படுவதும், நீதிவழங்கலை உறுதிப்படுத்தும் போராட்டங்களும் தேவையானவை, வரவேற்கப்பட வேண்டியவை. குற்றச் செயல்களுக்கான தண்டனைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று கூறுவதிலும் தவறில்லை. இவையெல்லாம் சமூகத்தில் குற்றச்செயல்கள் நிகழ்வதைக் குறைக்கும். ஆனால் இவை எல்லாவற்றாலும் குற்றச் செயல்களிலிருந்து நூறு சதவிகித உத்தரவாதம் கிடைக்கமாட் டாது. இதையும் தாண்டி நிகழக் கூடிய சாத்தியம் உள்ள குற்றச் செயல்கள் எம்மைப் பாதிக்காது இருக்கத் தனிநபர் சமூக நட வடிக்கைகள் அவசியமானதாகும். போர்ச் சூழல் காரணங்களால் மறந்து போன, நவீனம், நாகரிகம், பெண் ணுரிமை என்பவற்றால் மறக் கப்பட்ட தனிநபர் சமூக ஒழுங்கு நடவடிக்கைகளை பேசுபொருளாக மேடையேற்றக் காலம் வந்துள்ளது. பாதிக்கப்பட சந்தர்ப்பமுள்ளவர்கள் மீது அந்தத் தனிநபர்களோ, சமூகமோ ஏற்படுத்த வேண்டிய எச்சரிக்கைப் பாதுகாப்பு ஒழுங்குகளைப் பற்றி மீள் சந்திப்புக்கு உள்ளாக்குவது காலத்தின் கட்டாயமல்லவா?

ஓர் இளம் பெண் தனித்த பிரதேசத்தினூடே தனித்து செல்லவிடப்படுவது எமது சமூக ஒழுங்கா, ஒழுக்கமா இல்லையே? கடந்த போர்ச் சூழலும், நவீனத்துவ நாகரிக கோசங்களின் விளைவாகவே இத்தகைய மாறிவிட்ட நடைமுறைகள் ஒரு பாதிக்கப்படக் கூடியவரின் மீது அத்தனி நபரும், சமூகமும் கொண்டுள்ள பொறுப் பற்ற அக் கறையற்ற தன்மையின் விளைவே எதிர்பார்க்கப்பட வேண்டிய குற்றச் செயல்களில் மாட்டுப் படுவது. சுற்றுச் சூழ்நிலைகளுக்கு அமைந்த பொருத்தமான நடத்தையே பாதிக்கப்பட்ட சாத்தியமுள்ள வர்களைப் பாதுகாக்கும். இதை எமது சமூ கமும், தனிப்பட்ட குடும்பங்களும் சிந்தித்துச் செயலில் கொண்டு வரவேண்டும்.

இத்தகைய அணுகுமுறைக் கருத்துக்களுக்கு பெண்ணியவாதிகள் கடும் கண்டனங்களை எழுப்பு வார்கள். அவர்களின் கண்டனங்களின் நோக்கம், பெண்ணிய கருதுகோளையும், பெண்ணிய அரசியலையும் பாதுகாப்பதேயன்றி பெண்களைப் பாதுகாப்பதல்ல. இத்தகைய ஒரு சமூகத்தில் எத்தகைய நடத்தைகள் பெண்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள உதவும் என்பதே எமது சமூகப் பெண்களின் நலன்கள் சார்ந்த சிந்தனையாகும். பாதிப்புக்குள்ளாகும் சாத்தியப்பாடான இடங்களில் சுய, சமூக பாதுகாப்பு ஒழுங்குகள் நடைமுறைப் படுத்தப்படக்கூடாது என் பது பெண்ணிய நலன் சார்ந்த அறிவுரை யேயன்றிச் சமூகப் பெண்களுக்கானதல்ல என்பதை கவனத்தில் எடுக்க வேண்டும்.

எமது பிரதேசத்தில் நிகழ்ந்த பல்வேறு பெண்ணிய கருத்தரங்குகளில் பஸ் பிரயாணத்தில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகாத பெண்கள் எவருமே இல்லை என்பது வெளிப்பட்ட விடயம். இதுவே இன்றைய யாழ்ப்பாணத்து நிலை என்பது தானே யதார்த்தம்? மற்றையோருக்கு தெரியவராத நிலையில் சந்தர்ப்பம் கிடைத்தால் அத்துமீறக்கூடியவர்களை நாம் கொண்டுள்ளோம் என்பதுதானே எமது யதார்த்தம். இத்தகைய பின்னணியில் பெண்ணியத்தின் அடிப்படையில் பெண்கள் தனித்துச் செல்ல ஊக்குவித்தல் பொறுப்புள்ள புத்திசாலித்தனமான நடவடிக்கையா?

மகாத்மா காந்தி கூறினார் இளம் பெண் நகைகளுடன் இரவில் தனித்துப் பாது காப்பாகச் செல்லக்கூடிய நிலை வந்தாலே தான் இந்தியா உண்மையில் சுதந்திரமடைந் தது எனக் கொள்ள முடியும் என்று. அத்தகைய சூழ்நிலை யதார்த்தம் உருவாகாத நிலையில் பெண் ணிய கருத்துரு என்பதாக பெண்கள் சார்ந்த நடத்தைகளில் மாற்றத்தைத் திணிப்பது பெண்கள் சார்ந்த பொறுப்பற்ற செயலாகும். பெண்ணிய நடத்தை மாற்றங்களினால் பெண்கள் பாதிப்புள்ளாகும் சாத்தியப்பாட்டை அதிகரிக்கின்றோம். பண்பு வளர்ச்சிக்கூடாக ஏற்படும் பாதுகாப்பு சூழ்நிலையிலேயே சில நடத்தைக் கோலங்கள் சாத்தியமாகும்.

எமது சமூகத்தின் பண்பு வளர்ச்சிக்கு அமைவான பெண்கள் சார்ந்த நடத்தைகளை மீள் கட்டமைப்பதில் கவனம் செலுத்துவோம். பண்பு வளர்ச்சிக்குத் தேவையான செயற்பாடுகளிலும் கவனம் செலுத்து வோம். எமது சிந்தனைப் போக்கை நடை முறை யதார்த்தத்துக்கு அமைவானதாக அமைத்துக் கொள்வோம். மனிதர்கள்தான் முக்கியமேயன்றி கருது கோள்கள் அல்ல.



மகாத்மா காந்தி கூறினார் இளம் பெண் நகைகளுடன் இரவில் தனித்துப் பாது காப்பாகச் செல் லக்கூடிய நிலை வந்தாலே தான் இந்தியா உண்மையில் இந்தியா சுதந்திரமடைந்தது எனக் கொள்ள முடியும் என்று அத்தகைய சூழ்நிலை யதார்த்தம் உருவாகாத நிலையில், பெண்ணியக் கருத்துரு என்பதாக பெண்கள் சார்ந்த நடத்தைகளில் மாற்றத்தைத் திணிப்பது பெண்கள் சார்ந்த பொறுப்பற்ற செயலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்டத்தில் பாலியல் லஞ்சம் கோரிய விவகாரம்

தங்களது 2015.10.21 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி சம்பவம் தொடர்பான செய்தியில் "பாலியல் இலஞ்சம் கோரியதற்கு நம்பத்தகுந்த ஆதாரம் இல்லையென செஞ்சிலுவைச் சங்கத்தின் விசாரணை மூலம் தெரிய வந்ததாக அந்தச் சங்கத்தின் அறிக்கை கூறுகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நம்பத்தகுந்த ஆதாரங்கள் என அவர்கள் எவற்றைக் கருதுகிறார்களோ என்று தெரியவில்லை. செஞ்சிலுவைச் சங்க அதிகாரி இரகசியமாகத்தானே பாலியல் இலஞ்சம் கோரியிருப்பார். பின்வரும் ஆதாரங்களில் ஏதாவது ஒன்றை அவர்கள் நம்பத்தகுந்த ஆதாரம் என்று கருதுகிறார்களோ தெரியவில்லை. அதை அவர் கள் அறியத்தர வேண்டும். செஞ்சிலுவைச் சங்க அதிகாரி அந்தப் பெண்ணிடம் எழுத்து மூலம் பாலியல் லஞ்சம் கோரியிருக்க வேண்டும் என்பதை நம்பத் தகுந்த ஆதாரமாகக் கருதுகிறார்களா? அல்லது பலபேர் முன்னிலையில் அந்த அதிகாரி அந்தப் பெண்ணிடம் பாலியல் இலஞ்சம் கோரவேண்டும் என்பதை நம்பத்தகுந்த ஆதாரமாகக் கருதுகிறார்களா? அல்லது தானியங்கி புகைப்படக் கருவி மூலம் எடுக்கப்பட்டபடங்களையும் அவர்களது சம்பாஷணைகளையும் நம்பத்தகுந்த ஆதாரமாகக் கருதுகிறார்களா? அல்லது செஞ்சிலுவைச் சங்க அதிகாரியின் கோரிக் கைக்கு அந்தப்பெண் இணங்கிய பின்னர். மரபணுச் சோதனை மூலம் நிலை நாட்டுவதை நம்பத்தகுந்த ஆதாரமாகக் கருதுகின்றார்களா. என்பதை அவர்கள் வெளிப்படுத்த வேண்டும். ஒரு பெண் எழுத்து மூலம் இந்த விடயத்தைச் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அறிவித்திருக்கின்றார் என்றால், அவரது மனம் எவ்வளவு தூரம் தாக்கத்துக்கு ஆளாகி இருக்கும் என்பதைக் கற்பனை செய்ய முடிகிறது.

ஒரு பெண் பாலியல் விடயமான சம்பவத்தை வெளியில் கூறமாட்டார். அந்தப் பெண் பொய் சொல்லுகின்றார் என விசாரணைக்குழு கருதுகிறதா..? விசாரணைக்குழு எப்படியான விசாரணை செய்தது என்பதை வெளிப்படையாகக் கூற வேண்டும். அந்தச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரியின் சகோதரிகளையோ அல்லது அவரது பெண்பிள்ளைகளையோ எவராவது பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினால் அவர் மௌனம் காப்பாரோ...?

*நடராசா கார்த்திகேசு*

# மிகச் சிறந்த கௌரவம்

இந்துமா சமுத்திரத்தின் முத்து என வரலாற்று ஆசிரியர்களால் வர்ணிக்கப்படும், இலங்கைத் தீவானது எத்தகைய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை, சூரியன் அஸ்தமிக்காத நாடாக ஒரு காலத்தில் திகழ்ந்த ஐக்கிய இராச்சியம் அறிந்த காரணத்தால் அவர்கள் இந்த நாட்டை ஆண்ட பொழுது, அறிமுகம் செய்த விளையாட்டுத்தான் கிரிக்கெட். திறமை மிக்க ஆஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடி அர்ச்சுன ரணதுங்க தலைமையில் இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வென்றபொழுது தாய்நாட்டின் பெருமை உலகறியச் செய்யப்பட்டது. அண்மைய காலங்களில் இலங்கை அணியின் தலைவராக விளங்கிய குமார் சங்கக்கார ஒரு சிறந்த தலைவர் என்ற புகழைத் தன தாக்கிக் கொண்டார். தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்கு கிரிக்கெட் வீரர்கள் ஆற்றியுள்ள அளப்பரிய சேவையை நாம் மறப்பதற்கில்லை. இலங்கை இந்திய அணிகள் இறுதியாக விளையாடிய டெஸ்ட் தொடரில் குமார் தனது ஓய்வை அறிவித்து பிரியாவிடை அளிக்கப்பட்ட வேளை உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் மல்கி நின்றதுடன், தான் படித்த பாடசாலையையும் மாணவப் பருவத்தில் பயிற்சி அளித்த பயிற்றுவிப்பாளர் சுனில் பெர்னாண்டோவையும் நினைவு கூர்ந்தார். பாடசாலையில் தான் கற்றதும் பெற்றதும் அதிகம் என்று பாடசாலைக்கும் புகழாரம் சூட்டினார். சிறந்த கல்விமான்களையும் விளையாட்டு வீர வீராங்கனைகளையும் நற்பண்புமிக்க பிரசைகளையும் உருவாக்குவதில் பாடசாலைகளின் பங்கு மகத்தானது. பிரியாவிடை விழாவில் கலந்து சிறப்பித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, குமார் சங்கக்காரவை ஐக்கிய இராச்சியத்துக்கான இலங்கைத் தூதுவராக நியமிப்பதாக அறிவித்தார். இந்த அறிவிப்புப் பற்றி கருத்துத் தெரிவித்த குமார்


## வாசகர் திருமுகம்



சங்கக்கார தான் கிரிக்கெட் வாழ்க்கையில் ஆற்றலும், அனுபவமும் உள்ளவரெனவும் நாட்டின் உயர் ஸ்தானிகராக, அரசியல் நிபுணத்துவ வாழ்க்கைக்குத் தான் ஏற்றவரா? என்பதைச் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டி இருப்பதால் ஜனாதிபதியுடன் பேசி முடிவு எடுக்கவேண்டி இருப்பதாகவும் கூறினார். இந்த அறிவிப்பு தாய் நாட்டுக்கு கிரிக்கெட் விளையாட்டினால் ஆற்றிய சேவைக்கு மிகச்சிறந்த பரிசாகவும், தாய் நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் விளையாட்டு வீர வீராங்கனைகளைக் கௌரவப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

*வின்சென்ட் டலிமா,*
*ஊர்காவற்றுறை.*

## கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# பழைய குருடி கதவைத் திறவடி

தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் நிராகரிக்கப்பட்டிருப்பது, தமது விடுதலைக்காக நீண்ட காலம் போராடிவரும் கைதிகளுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுக்கும் பெரும் ஏமாற்றமளித்துள்ளது.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் அரசியல் கைதிகள் நடத்திய அனைத்துப் போராட்டங்களும் தோல்வி கண்டன. இப்படியான நிலையில் ஜனவரி 8 ஆட்சி மாற்றம் தமக்கு விடியலைத் தரும் என்ற நம்பிக்கையுடன் எட்டு மாதங்கள் காத்திருந்தனர் தமிழ் அரசியல் கைதிகள். மைத்திரி - ரணில் அரசு இவர்களது விடுதலைக்கு நடவடிக்கை எடுக்கத் தவறியதையடுத்து, இம்முறை எப்படியாவது ஒரு முடிவு காண்பது, வெற்றி நிச்சயம் என்ற திடசங்கற்பத்துடன் திட்டமிடப்பட்டதுதான் இம்மாதம் 12ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம். கைதிகள் முழு நம்பிக்கை வைத்து இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர். நல்லாட்சியில் ஒரு சுமுகமான தீர்வு ஏற்படும் என்று நம்பினர். தாம் விரைவில் விடுதலையாகி தமது குடும்பத்தவர்களுடன் மீண்டும் இணைய முடியும் என்ற ஆவலுடன் இருந்தனர். ஆனால் தமிழ் அரசியல் கைதிகள் என்று எவருமே இல்லை, அவர்கள் விடுதலைப் புலிகள், அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப் போவதில்லை என்ற புதிய ஆட்சியாளர்களின் முடிவால் கைதிகளின் நம்பிக்கை தகர்ந்து போயுள்ளது. கூட்டமைப்புக்கும் இது சிக்கலான நிலைமை.

பொதுமன்னிப்பு இவர்களுக்கு வழங்கப்படமாட்டாதென்றால் தற்பொழுது இவர்கள் விடயத்தில் எஞ்சியுள்ள ஒரே தெரிவு இவர்கள் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்துவதுதான். அதுவும் எவ்வளவு காலம் இழுபடுமோ தெரியாது.

தமிழ்க் கைதிகளின் விடுதலை தொடர்பான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த முடியுமே தவிர, அதற்கு கால எல்லை வழங்கமுடியாது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த மாநாட்டில் அறிவித்துள்ளார். அதனால் நவம்பர் 7 கால எல்லையும் தீர்வின்றியே கடந்துபோகப் போகிறது.

நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னர் அவர்களின் விடுதலை தொடர்பாக நடவடிக்கை ஆரம்பிப்பதாக கூட்டமைப்புத் தலைவரிடம் ஜனாதிபதி உறுதியளிக்க, அதில் நம்பிக்கை வைத்தே தமிழ் அரசியல் கைதிகள் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்டனர். தற்பொழுது அமைச்சர் ராஜித சேனாரத்னவும், அமைச்சர் விஜேதாஸ ராஜபக்சவும் கைதிகளின் விடுதலைக்கு கால எல்லை வழங்கமுடியாதென்கின்றனர். அப்படியானால் ஜனாதி பதி ஏன் ஒரு வாக்குறுதியைக் கொடுக்க வேண்டும்?

கைதிகள் விடுதலை தொடர்பாக நவம்பர் 7ஆம் திகதிக்கு முன்னர் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துவிட்டு பொது மன்னிப்புத் தொடர்பாக அமைச்சர் டி.எம். சுவாமி நாதனால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை நிராகரிப்பது ஒப்புக்கும் நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும். அமைச்சர்களான விஜேதாஸ ராஜபக்ச, சம்பிக்க ரணவக்க ஆகியோரின் கடும் எதிர்ப்பையடுத்தே கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் நிராகரிக்கப்பட்டதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. புலிகளை விடுதலை செய்து நாட்டில் போர் நடந்த வரலாற்றையே மாற்றிவிட சிலர் முயற்சிக்கிறார்கள். புலிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்க வலியுறுத்துவோர் இராணுவத்தைத் தண்டிக்க முயற்சிக்கின்றனர் என்று அமைச்சர் சம்பிக்க ஒருபடி மேலே சென்று விமர்சித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து ஆராய்வதற்காகப் பிரதமர் ரணில் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில், தமிழ்க் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்குவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாறாக நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்குச் சட்ட ரீதியில் பிணை வழங்குவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படுவதற்கான சாத்தியங்கள் இல்லை என இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, பிணை வழங்குவது குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட்டதாகத் தேசியக் கலந்துரையாடல்களுக்கான அமைச்சர் மனோ கணேசன் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் சட்டத்துக்கு உட்பட்டு, இயன்ற அளவில் தமிழ் அரசியல் கைதிகளைப் பிணையில் விடுவிக்கத் துரித நடவடிக்கை எடுக்கப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

இந்த முடிவானது அரசியல் கைதிகளின் விடயத்தைத் தொடர்ந்து இழுபறிக்குள் தள்ளும் ஒரு செயலாகவே அமையப்போகின்றது. நல்லாட்சி அரசும் பழைய குருடி கதவைத் திறவடி என்பது போலவே செயற்படுகின்றது.

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கொழும்பு அரசுகளின் கவசங்களாக சட்டம், ஒழுங்கு இருக்கும் வரை...

தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்க இயலாது. வேண்டுமானால், நீண்ட காலம் தடுப்பிலுள்ள கைதிகளுக்கு, சட்டபூர்வமாகப் பிணை வழங்கப்படும். அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் மேற்கண்ட இரண்டு முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இரண்டு மணித்தியாலங்களாக 'தக்கிமுக்கி' எடுக்கப்பட்ட இந்த முடிவு, தமிழ் அரசியல் கைதிகளுக்கும் அவர்களின் உறவுகளுக்கும் பெரும் ஏமாற்றத்தையும் கடுப்பையும் ஏற்றியுள்ளன.

அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. அதனை அமைச்சரவை கடாசியிருந்ததும் கவலையுடன் குறிப்பிடத்தக்கதாகும்.

நீங்கள் கேட்பதை எல்லாம் நாம் தரமுடியாது என்ற திமிருடன் பெரும்பான்மை இனத்தவரின் அரசு தனது கயமையை அப்பட்டமாக வெளிப்படுத்தி இருக்கிறது. இது விடயத்தில் உனக்கும் "பெப்பே" உன் அப்பனுக்கும் "பெப்பே" என்று பெரும்பான்மையினர் தமது திமிரை வெளிப்படுத்தி உள்ளனர்.

நாட்டின் சிறைச்சாலைகளில், வாழ்க்கையை வெறுத்து சுமார் 30 ஆண்டுகளுக்கும் அதிகமாக அல்லாடிக் கொண்டிருக்கும் தமிழ்க் கைதிகள் மைத்திரி அரசால் ஏமாற்றப்பட்டு உள்ளார்கள்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டி அவர்கள் நடத்திய சாகும்வரை உண்ணாநோன்பைத் திசைதிருப்பிய அதிகாரத்தனத்தின் உள்நோக்கம், இப்போது வெளிப்பட்டு விட்டது!

அவர்களின் விடுதலைக்கு அடுத்த மாதத்தில், நவம்பர் முதல் வாரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்கிய உறுதிமொழி இப்போது காற்றில் பறக்கிறது. தமிழர்களை கேணயர்களாகக் கருதி மைத்திரிபால அந்த உறுதிமொழியை வழங்கினாரா?

சிறைகளில் முப்பதாண்டுக் கணக்காக வாடும் தமிழ் அரசியல் கைதிகள், அவர்களின் உறவுகள் தமது வாக்குகளைக் கொண்டு கதிரையில் ஏற்றிய ரணிலின் அரசால் ஏமாற்றப்பட்டு விட்டனர்.

சாத்வீக முறையிலான போராட்டமோ, ஆயுதப் போராட்டமோ எதுவானாலும் தமிழர்களுக்கு தப்புத் தண்ணீரும் கிடையாது என்பதற்கான உச்சமான உதாரணமாக, சிறிசேன-ரணில் கூட்டின் பிந்திய செயற்பாடு உயர்ந்து நிற்கிறது!

பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் எந்த வகையிலும் ஒட்டமாட்டாது என்பதை தெற்கின் அரசியல் தலைவர்கள் கடந்த 59 ஆண்டுகளாக தமது எண்ணிக்கைப் பலத்தைக் கொண்டு உயர்த்திக் காட்டியவாறே உள்ளார்கள்.

இதற்கு ஒரு முடிவு வரும் என்று கற்பனைதானும் செய்ய இயலாது. சட்டமும்-ஒழுங்கும் கொழும்பு அரசுகளின் கவசங்களாக இருக்கும்வரை, இந்த நிலை உயர்ந்து படர்ந்து சிறுபான்மையினரை ஒடுக்கி ஓரம் கட்டும் சிங்கள சர்வாதிகார ஆட்சியே மேலுயரும். இதைவிட வேறு எதனைக் கூறுவது?

# நீண்டுகொண்டே போகும் இனவாதிகளின் கரங்கள்

சேரலாதன்

ஐ நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பான தீர்மானத்துக்கு எதிராகப் பெரும்பான்மையின மக்களை அணி திரட்டுகின்ற செயற்பாடுகள் தெற்கில் வலுப்பெற்று வருகின்றன. இதன் பின்னணியில் மகிந்த அணியினர் செயற்பட்டு வருகின்றமை தெளிவாகத் தெரிகின்றது. "புதியதொரு சிங்கள தேசத்தை உருவாக்குவோம்" என்ற தொனிப்பொருளில் பரப்புரை நடவடிக்கைகளும் இடம் பெற்று வருகின்றன.


போர்க்குற்றங்கள் தமிழர்களுக்கு எதிராகவே நிகழ்த்தப்பட்டுள்ளதால் அவை தொடர்பான நீதியான விசாரணைகள் இடம்பெறுவதை இனவாதிகளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. மேலும், நீதியானதும், நேர்மையானதுமான விசாரணைகள் இடம் பெறுமாயின் முன்னாள் ஆட்சியாளர்களும், படையினரும் குற்றவாளிகளென இனம் காணப்படுவது உறுதி என்பதால் விசாரணைகள் இடம்பெறுவதைத் தடுப்பதே அவர்களின் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது.


ஆனால், இனவாதக் கருத்துக்கள் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் விதைக்கப்படுகின்றமைதான் நாட்டில் இன ஐக்கியத்தையும், அமைதியையும் குலைத்துவிடப் போகின்றது. இந்த நாட்டிலே இனங்களுக்கிடையில் விரோதத்தைத் தூண்டிவிட்டு அதில் குளிர்காய்வது தான் அரசியல்வாதிகளின் வாடிக்கையாக மாறிவிட்டது. பண்டார நாயக்க காலத்திலிருந்து மகிந்த காலம் வரை இனவாதமே அரசியலில் பெரும் மூலதனமாக இடம்பிடித்ததை எவருமே மறுத்துரைக்க முடியாது.

சிங்கள மொழியைக் கையில் தூக்கிப் பிடித்துக் கொண்டு பண்டார நாயக்க அன்று ஆட்டம் போட்டதால் பெரும் இனக்கலவரம் உருவாகி இனங்களுக்கிடையில் பிளவுகளும் தோன்றின. அன்றிலிருந்து இன்று வரை இந்த அவல நிலையிலிருந்து நாடு மீட்சி பெறவில்லை. பின்னர் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆகட்டும் அல்லது மகிந்த ராஜபக்ச ஆகட்டும் பெரும்பான்மையின மக்களை மையப்படுத்தியே தமது அரசியலை நடத்திச் சென்றனர். சிறுபான்மை மக்களைச் செல்லாக் காசாகவே இவர்கள் மதித்தனர். இந்த மக்கள் நாட்டுக்குத் தேவையில்லாத சுமையாக இவர்கள் கருதினர். அதிலும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த சிறுபான்மை மக்களின் வாக்குகளால் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இவர்கள் மீதான வெறுப்பு பன்மடங்கு அதிகமானது. இதுவே இனவாத நெருப்பாகக் கக்கப்படுகின்றது.

இதைவிட மகிந்த தரப்பினர் பிரதானமான நோக்கமொன்றையும் கொண்டுள்ளதை அறியக் கூடியதாகவுள்ளது. முன்னைய ஆட்சிக் காலத்தில் பெருமளவு ஊழல், மோசடிகளில் மகிந்த தரப்பினர் ஈடுபட்டமை உறுதியாகி அவை தொடர்பான விசாரணைகளும் இடம்பெற ஆரம்பித்து விட்டன. விசாரணைகளின் போக்கைப் பார்க்கும்போது குற்றங்கள் நிரூபிக்கப்படுகின்றமை உறுதியாகி விட்டதெனக் கூறலாம். இந்த நிலையில் இதிலிருந்து விடுபடுவதற்கு எதையாவது செய்தே தீரவேண்டும் என்ற நிர்ப்பந்தம் மகிந்த தரப்பினருக்கு ஏற்பட்டுள்ளது. சரியான தருணத்தில் போர்க்குற்ற விசாரணை தொடர்பான செய்திகள் வெளிவந்ததால் அதனையே தமது பிரதான ஆயுதமாக அவர்கள் கையில் எடுத்துக் கொண்டுள்ளனர்.

இதனால்தான் பெரும்பான்மையின மக்களைத் திசை திருப்பும் பொருட்டு இனவாதக் கருத்துகளை மகிந்த தரப்பினர் விதைத்து வருகின்றனர். புலிகளை ஒழித்துவிட்டு இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி விட்டதாக மார்தட்டிய மகிந்த தற்போது சமாதானத்தைக் குலைக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளமை அவரது பொய் முகத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.





இதேவேளை நீண்ட காலமாகச் சிறைகளில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டாம் என்ற குரல்களும் தெற்கில் ஒலிக்க ஆரம்பித்துள்ளன. அரசு இந்தச் சிறைக்கைதிகளின் விடுதலை தொடர்பாகச் சாதகமான முறையில் கவனம் செலுத்தி வருகின்ற நிலையில் அதனைத் தடுத்துக் குழப்பும் விதமாகச் சிலர் செயற்பட்டு வருகின்றனர். களைந்தெடுத்த இன வாதியான விமல் வீரவன்ச வழமைபோன்று தனது இனவாதக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றார். இந்தக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டால் போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறும்போது அரசுக்கு எதிராகச் சாட்சியமளித்து விடுவார்கள் என்ற புதியதொரு கண்டுபிடிப்பை விமல் வீரவன்ச தமது பங்குக்கு வெளியிட்டுள்ளார். இதன் மூலமாக ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. இனவாதத்தைப் பரப்புவதன் மூலமே அரசியலில் நிலைத்து நிற்க முடியும் என்பதுதான் அது. ஆகவே இந்த நாட்டில் தொடர்ந்தும் இனவாதக் கருத்துக்கள் பரப்பப்படப் போவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

இதேவேளை - தமிழர்களின் இனப் பிரச்சினை உட்பட ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமெனத் தற்போதைய அரசை எவராவது நம்பினால் அது வீண் கனவாகவே முடியும். ஏனென்றால் எந்த விடயத்தைப் பொறுத்த அளவிலும் தீர்க்கமானதொரு முடிவு எடுக்கக் கூடிய திராணியும், துணிவும் இன்றைய அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை. எதிலும் மெத்தனப் போக்கைக் கடைப் பிடித்து வருவதுதான் அரசின் வாடிக்கையாக மாறிவிட்டது. அதிலும் இன வாதிகளை எதிர்த்துச் செயற்படுகின்ற துணிவு கூட அரசிடம் காணப்படவில்லை. இதேவேளை - அரசில் உள்ள சிலரே இனவாதிகளாகவும் காணப் படுகின்றனர். இனவாதத்தை ஆதரிப் பவர்களாகவும் உள்ளனர். இந்த நிலையில் தமிழர்கள் இவர்களிடமி ருந்து நீதியை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டதாக போர் முடிந்தகையோடு அரசின் சார்பாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இன்று புலிகளால் நாடு ஆபத்தை எதிர்கொண்டிருப்பதாக ஒருசாரரார் தெரிவிக்கின்றனர். இதனால் வடக்கு கிழக்கிலிருந்து படையினரைத் திரும்ப அழைக்கக் கூடாது எனவும் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. அரசும் இதே கொள்கையைத்தான் கடைப் பிடிப்பதாகத் தெரிகின்றது. ஆகவே, தமிழர்கள் படையினர் மத்தியிலேயே வாழ வேண்டும் என்றதொரு நிலைதான் தொடரப் போகின்றது.

என்னதான் சமாதானம், நல்லிணக்கம் என வாய் கிழியக் கத்தினாலும், இனவாதிகளின் கரங்கள் தான் இந்த நாட்டில் உயர்ந்து நிற்கப் போகின்றன. இதை மாற்றுவதற்கு அந்த இனவாதிகள் நினைத்தாலும் கூட முடியாது என்பதுதான் உண்மை.

**சிங்கள மொழியைக் கையில் தூக்கிப் பிடித்துக் கொண்டு பண்டார நாயக்க அன்று ஆட்டம் போட்டதால் பெரும் இனக்கலவரம் உருவாகி இனங்களுக்கிடையில் பிளவுகளும் தோன்றின. அன்றிலிருந்து இன்று வரை இந்த அவல நிலையிலிருந்து நாடு மீட்சி பெறவில்லை. பின்னர் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆகட்டும் அல்லது மகிந்த ராஜபக்ச ஆகட்டும் பெரும்பான்மையின மக்களை மையப்படுத்தியே தமது அரசியலை நடத்திச் சென்றனர். சிறுபான்மை மக்களைச் செல்லாக் காசாகவே இவர்கள் மதித்தனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டேரைம்ஸ் விமர்சனத்திலிருந்து ரெங்கன்

# ஜெனிவாத் தீர்மானம் மீது நாடாளுமன்றத்தில் நடந்த இரண்டு நாள் விவாதம்

## நாட்டின் நலனுக்காக அனைவரும் கைகோர்க்கப் பிரதமர் அழைப்பு

மிக ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் சபை தீர்மானத்தின் மீதான நாடாளுமன்ற இரண்டு நாள் விவாதத்தின்போது பல உறுப்பினர்கள் தமது காத்திரமான கருத்துக்களை முன்வைத்திருந் தார்கள். என்றாலும் நாட்டின் மனித உரிமை மீறல் தொடர்பாக தயாரிக்கப் பட்டிருந்த இரண்டு உள்ளக விசா ரணை அறிக்கைகள் விவாதத்தின் நோக்கத்தை விரிவுபடுத்துவதாக அமைந்திருந்ததோடு அறிக்கைகள் மறைத்து வைக்கப்படுவதற்கு இடம் தராமல் போர்க்காலத்தில் இடம்பெற்ற மீறல்களை வெளிப்படுத்த வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துவதாக இருந்தன.


போரின்போது நிகழ்ந்த செயற்பாடு களின் உண்மையைக் கண்டறி வதற்கான வழிமுறைகள் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் நிலவிய போதி லும், மோதலினால் பலவகைகளிலும் தாக்கங்களுக்கு உள்ளானவர்க ளுக்கு ஒரு தீர்வு கிடைக்க வேண்டு மானால், உண்மையைக் கண்டறி வது மிகமிக முக்கியம் என்ற கருத்தை அநேக உறுப்பினர்கள் ஆதரித்திருந்தார்கள்.

அரசால் ஜெனிவாத் தீர்மானம் கையாளப்பட்ட விதம் குறித்து எதிர்த் தரப்பில் கூச்சலிடுபவர்களான ஐக் கிய மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் விமல் வீரவன்ச மற் றும் தினேஷ் குணவர்த்தன போன்ற வர்களும் இந்த விடயம் தொடர்பாக விவாதம் ஒன்றை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள். சபையில் ஒத்திவைப்புப் பிரேர ணையை ஐ.தே.க. உறுப்பினர் அஜித் மனம்பெரும முன்மொழிந்தார். ஐ.தே.க. காலி மாவட்ட உறுப்பினர் பந்துலலால் பண்டாரிகொட வழிமொ ழிந்தார்.

விவாதம் ஆரம்பித்தவுடனேயே காரசாரமாக சூடுபிடிக்க ஆரம்பித்தது. இரண்டு ஆரம்பப் பேச்சாளர்கள் எதிர்த் தரப்பினரை தேசியப் பற்றாளர்கள் என்றும், ஜெனிவாத் தீர்மானத்தின் மீது மக்களை திசை திருப்ப முனை கிறார்கள் என்றும் குற்றஞ்சாட்டினார் கள். ஆனால் முதல் நாள் விவாதத்தி ன்போது சபையில் அமளியை ஏற்படுத்துவதாய் இருந்தது அது வல்ல. ராஜபக்ச விசுவாசிகளாகக் கருதப்படும் உறுப்பினர்கள் சபை யில் பேசுவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்ட முறை குறித்துத்தான் அவர்கள் பொறுமையின்மையை வெளிப்படுத்தினார்கள். முதல்நாள் முற்பகுதி முழுக்கவும் அரச தரப்பின ருக்கு, ஐ.தே.க. மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பி. த.தே.கூட்டமைப்பு உறுப்பினர்க ளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்த நிலையில் பிற்பகலில் சந்தர்ப்பம் வழங்கப்பட்ட முறையில் அவர்கள் சீற்றமுற்றிருந்தார்கள்.

இந்த விடயத்தை விமல் வீரவன் சவும் தினேஷ் குணவர்த்தனவும் சபையில் கிளப்பினார்கள். அப்போது சபைக்கு தலைமை வகித்துக் கொண்டிருந்த ஐ.தே.கவின் முஜிபுர் ரகுமான் தமக்கு வழங்கப்பட்டுள்ள பட்டியலின்படிதான் தாம் உறுப் பினர்களை பேச அழைப்பதாக தெரிவித்தார். இந்தப் பதிலில் திருப்தி அடையாத முன்னாள் அரசுதரப்பு கொறடாவான தினேஷ் குணவர்த் தன எச்சரிக்கை எதுவுமின்றி சபை யின் பிரதான பகுதிக்கு விரைந்து சென்று செங்கோலை அகற்றினார். அந்தச் சமயம் அதிர்ச்சிக்குள்ளான வராக பிரதி படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ செங்கோல் சபையிலிருந்து அகற் றப்படுவதைத் தவிர்ப்பதற்கு விரைந்தார். சிறு அமளியின் பின்னர் அவர் செங் கோலை அதன் உரிய இடத்தில் சேர்ப்பதில் வெற்றி பெற்றார்.

அமளியின் போது சிறிது நேரம் ஒத்தி வைக்கப்பட்டிருந்த சபை மீண்டும் ஆரம்பமானபோது அமைதியடைந்தி ருந்த குணவர்த்தன நடந்த சம்பவத் துக்காக வருத்தம் தெரிவித்தார். ஒரு தவறான அபிப்பிராயத்தின் காரண மாகவே அது நடந்து விட்டதாக அவர் தெரிவித்தார். மன்னிப்புக் கேட்டமை ஒருபுறமிருக்க சிரேஷ்ட உறுப்பினர் களின் நடத்தையில் அது ஒரு களங்கமான பிரதிபலிப்பாகவே காணப்பட்டது.



### பிரதமர் விடுத்த அழைப்பு

இரண்டாம் நாள் விவாதத்தைப் பிர தமர் ரணில் விக்கிரமசிங்க ஆரம் பித்து வைத்தபோது உறுப்பினர் களை வழக்கமான கடந்தகால அரசியல் நடத்தையிலிருந்து விடுபடுமாறு கேட்டுக்கொண்டார். ம க்களின் பிரச் சினைகளை ஓர் ஒருமைப்பாட்டு முறையில் எதி ர்கொண்டு தீர்க்க முன்வருமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

தேசிய நல்லிணக்க செயற்பாடு களாவன எவர் மீதும் வஞ்சம் தீர்த் துக்கொள்ளும் நடவடிக்கையல்ல என்று அவர் கூறினார். மாறாக பல்வேறு சமூகங்களுக்கிடையிலும் காணப்படுகின்ற பிரிவு மனப்பான் மைகளை அகற்றுவதே நோக்கம் என்றார். நல்லிணக்கத்தைக் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்படும்



செயற்பாடுகளின்போது எல்லாவித கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எடுத்துக்கொள்ள நாங்கள் விரும்புகி றோம் என்றார். புனுகு பூனை (இர வில் செயற்படும் ஒருவகைப் பூனை) ஆட்சி முறையை நாம் விரும்பவில் லை என்று பிரதமர் கூறினார். புனுகு பூனை இருளில்தான் செயற்படும். அது வெளியில் வந்தால் வெளிச்சத்தில் அதனால் அரசியல் நடத்த முடியாது. எனவே அவ்வாறு இல்லாமல் நாம் கைகளை இணைத்துக்கொண்டு ஒரு ஜனநாயக சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம். அதன்மூலம் மக்களின் அபிலாசைகளை நிறை வேற்றுவோம்-என்றார்.

பிரதமரின் இவ்வித நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வரவேற்றார். நாடு முன்னோக்கி வேண்டுமானால் அனைவரும் கைகளையும் ஒன்றிணைத்துக்கொண்டு முன்செல்ல வேண்டும் என்று கூறிய சம்பந்தன், அதே சமயம் ஜெனிவாத் தீர்மானம் நேர்மையாகவும் முழு மையாகவும் செயற்திறனோடும் செயற் படுத்தப்படுவதை அரசு உறுதிப் படுத்த வேண்டும் என்றும் வலியுறு த்தினார். அந்தத் தீர்மானத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் போரின் போது நிகழ்ந்துள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தீர்வு காண்ப தற்கு நடுவுநிலை விசாரணை முறையைத.தே.கூட்டமைப்பு ஆதரிப் பதாகத் தெரிவித்த சம்பந்தன் மேலும் கூறுகையில், அது முற்று முழுதுமாக சர்வதேச விசாரணையாக இருக்கு மானால் ஒரு பகுதியினர் தங் கள் நலன்களுக்கு அல்லது தங்களது நெருங்கிய உறவினர்களுக்கு பாதக மாக அமைந்துவிடும் என்று அச்சம் கொள்வார்கள். அதேசமயம் அது முழுக் கவும் உள்ளக விசாரணை யானால் இன்னொரு பகுதி மக்கள் தங்கள் நலன்களைப் பாதிப்பதாக அமைந் துவிடும் என்று அஞ்சுவார் கள். இந்த நிலைமையில் நடுவுநிலை செயற்பாடே சிறப்பானதாக இருக்கும். சர்ச்சைக்கிடமில்லாததாக மட்டு மன்றி, தவிர்க்கமுடியாததாகவும் அமையும். இதில் முக்கியம் என்ன வென்றால் மக்கள் மத்தியில் மோதல் களை வளர்ப்பது எமது நோக்க மில்லை என்று கூறினார்.

### அனுர குமார திசாநாயக்கவின் உணர்ச்சிமிக்க உரை

ஜே.வி.பி. குழுத்தலைவர் அனுர குமார திசாநாயக்க உணர்ச்சி ததும் பும் உரையொன்றை நிகழ்த்திய போது உறவினர்களை இழந்துள்ள வர்கள், அவர்கள் எங்குள்ளார்கள் என்பதை அறிந்துகொள்ளும் உரிமை பற்றி குறிப்பிட்டார். இதில் ஒரு முடிவு ஏற்படுவதற்கு இது முக்கியமாகும் என்றார்.

1989-1990 கால பயங்கரத்தின் போது எனது அண்ணன் காணாமற் போனார். இன்று வரைக்கும் அவ ருக்கு என்ன நேர்ந்தது என்பது எங் களுக்குத் தெரியவரவில்லை. எனது தாயார் அவரைத் தேடி இடத்துக்கு இடம் திரிந்ததன் அங்கலாய்ப்பையும் விரக்தியையும் நான் நேரடியாகவே பார்த்து நேரடியாக அனுபவித்தேன். இன்றும்கூட பதாகைகளையும் சுவ ரொட்டிகளையும் சுமந்து கொண்டு தமது பிள்ளைகளின் விவரங்களை அறிய ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் தாய்மாரின் துன்பதுயரமும் அதே நிலையில்தான் காணப்படுகின்றன என்று கூறினார் ஜே.வி.பி தலைவர்.

### இறைமைக்கு ஆபத்து

மகாஜன எக்சாத் பெரமுன தலைவர் தினேஷ் குணவர்த்தன பேசுகையில்; ஜெனிவாத் தீர்மானம் நாட்டின் இறைமைக்கு ஆபத்தானது. அதனை இணை அனுசரணையாளராக இலங்கை அரசு அங்கீகரித்திருப்ப தானது ஐ.நா.மனித உரிமை ஆணை யாளரால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் உள்ளவைகள் உண் மையானவை என்று ஏற்றுக்கொள்வ தாக அமைந்துள்ளது என்றார். ஆணையாளரின் அறிக்கையிலுள்ள உண்மைக்கு மாறானவைகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்பதா கவே இது அமைந்துள்ளது என்றார். போரின்போது மக்களைப் பட்டினியில் போட்டது அரசு என்பதாக அறிக்கை கூறுகின்றது. இது முழுமையும் உண்மைக்கு மாறானது. ஏனென் றால் போர் உச்சநிலையை அடைந்தி ருந்த சமயத்திலும்கூட மக்களுக்கு உணவு அனுப்பப்படுவதை அரசு உறுதி செய்திருந்தது. அதேபோல் போரில் 40 ஆயிரம் சிவிலியன்கள் இறந்ததாக அறிக்கை பொய் கூறு கிறது. இந்த எண்ணிக்கையை பரண கம அறிக்கை முற்றாக மறுதலித்துள் ளது என்றார் குணவர்த்தன.

இந்த நிலையில் ஜெனிவாத் தீர்மா னத்தை ஆதரிக்கும் நிலைப்பாட் டுக்கு மேலும் சாதகமான ஓர் இணக் கப்பாட்டை ஏற்படுத்திய நிலையில் அரசு தரப்பினர் விவாதத்துக்கு முற் றுப்புள்ளி வைத்தனர்.

முன்னாள் ஜனாதிபதியும் இன்றைய குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச விவாதத்தின்போது பிரசன்னமாய் இல்லாமல் போனமை அவர் மீதான குற்றச் சாட்டுக்களை ஒன்றன்பின் ஒன்றாக ஐ.தே.கட்சியினர் அடுக்குவதற்கு வாய்ப்பாக இருந்தது. அவர் மீது அவர்கள் தெரிவித்த முக்கிய குற்றச் சாட்டுக்களில் இலங்கை அரசு மேற் கொண்ட பரணகம ஆணைக்குழு உட்பட விசாரணைக்கு ராஜபக்சவே முதன்முதலில் வெளிநாட்டு நீதிபதி களை அழைத்திருந்தவர் என்பதும் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 6 |
| 2 | 7 | | | 8 | 4 | | 5 | |
| 4 | | 3 | 5 | 7 | | | | |
| | 2 | | 1 | | | | | 5 |
| | | 1 | | | | 8 | | |
| 8 | | | | | 6 | | 3 | |
| | | | | 4 | 5 | 9 | | 8 |
| | 4 | | 2 | 6 | | | 1 | 7 |
| 9 | | | | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 1 | 3 | 8 | 5 | 2 | 7 | 9 |
| 9 | 5 | 2 | 1 | 7 | 6 | 4 | 3 | 8 |
| 7 | 3 | 8 | 2 | 9 | 4 | 5 | 6 | 1 |
| 1 | 2 | 6 | 4 | 5 | 7 | 9 | 8 | 3 |
| 8 | 7 | 5 | 9 | 2 | 3 | 1 | 4 | 6 |
| 3 | 9 | 4 | 8 | 6 | 1 | 7 | 2 | 5 |
| 4 | 1 | 7 | 6 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 8 | 3 | 7 | 1 | 2 | 6 | 9 | 4 |
| 2 | 6 | 9 | 5 | 4 | 8 | 3 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பு வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# வாழைப்பூவின் மருத்துவக் குணங்கள்

வாழை மரத்தின் அனைத்துப் பகுதிகளும் பயனுள்ளவையே. வாழைப்பழம்முதல், வாழைஇலை , வாழைத் தண்டு, வாழைப்பூ போன்ற அனைத்தும் பயனுள்ளவையே. இதில் வாழைப்பூ மிகச்சிறந்த மருத்துவ குணங்களைக் கொண்டுள்ளது. அவை வருமாறு :-

1. வாழைப்பூவை வாரம் இருமுறை சமைத்துச் சாப் பிட்டால், அது குருதியில் கலந்துள்ள தேவையற்ற கொழுப்புக்களைக் கரைத்து வெளியேற்றி விடும். இதனால் குருதியின் பசைத்தன்மை குறைந்து, குருதி ஓட்டம் சீராக இடம்பெறும்

2. வாழைப்பூவைச் சமைத்துச் சாப்பிட்டால், குருதியானது ஒட்சிசனையும், தேவையான இரும்புச் சத்தையும் உட்கிரகிப்பதுடன், குருதி அழுத்தம், குருதிச் சோகை போன்ற நோய்கள் ஏற்படாமல் காக்கும்.

3. குருதியில் கலந்துள்ள அதிகளவு சீனிச் சத்தைக் கரைத்து வெளியேற்ற, வாழைப் பூவின் துவர்ப்புத்தன்மை உதவுகிறது. இதனால் குருதியில்சீனிச் சத்தின் அளவு குறைகிறது.

4. இன்றைய உணவுமுறை மாறுபாட்டாலும், மன உளைச்சலாலும் வயிற்றில் செரியாமை உண்டாகி, அதனால் வாயு சீற்றம் கொண்டு வயிற்றில் புண்களை ஏற்படுத்துகிறது. இந்தப் புண்களை ஆற்றும் வல்லமை, வாழைப்பூவுக்கு உண்டு. செரிமானத் தன்மையை அது அதிகரிக்கும்.

5. மூலநோயின் பாதிப்பினால் மலத்துடன் குருதி வெளியேறுதலைத் தடுக்கும். உள்மூலம், வெளி மூலப் புண்களுக்கு சிறந்த மருந்தாக வாழைப்பூவைப் பயன்படுத்தலாம். மூலக்கடுப்பு, குருதி மூலம் போன்றவற்றைக் குணப்படுத்தும் தன்மை கொண்டது.

6. மலச்சிக்கலைப் போக்கும். சீதபேதியையும் கட்டுப் படுத்தும். வாய்ப் புண்ணைப் போக்கி வாய் நாற்றத்தையும் நீக்கும்.

## நாளை

**ஐப்பசி-12**
**வியாழக்கிழமை**
**29.10.2015**
**திதி:** துதியை பி.2.17வரை
**நட்சத்திரம் :** கார்த்திகை மு.இ.10.31வரை
**சுபநேரம்:** 7.33–9.03 வரை
**இராகு காலம்:** 1.33–3.03வரை

## சிறுநீரக கோளாறை போக்கும் சுரைக்காய்

சுரைக்காயில் விற்றமின் 'பி', 'சி' சத்துக்கள் உள்ளன. சுரைக்காயின் சதைப் பகுதியை ரசமாக்கி, அதனுடன் ஒரு தேக் கரண்டி எலுமிச்சம் பழச்சாற்றைச் சேர்த்துப் பருகிவர, சீறு நீரக் கோளாறில் இருந்து குணம் பெறலாம். சிறு நீர்க்கட்டு, நீர் எரிச்சல், ஆகிய நோய்களுக்கு, சுரைக்காய் சிறந்தது. அஜீரணக்கோளாறு உள்ளவர்கள் சுரைக் காயைச் சாப்பிடலாம். கோடை காலத்தில் சுரைக் காயைச் சாப் பிட்டு வர தாகம் ஏற் படாது. மேலும், நா வறட்சியைப் போக்கும். கை, கால் எரிச்சல் நீங்க சுரைக்காயின் சதைப் பகுதியை எரிச்சல் உள்ள இடத்தில் வைத்துக் கட்டினால் எரிச்சல் குறையும். உடலைக் குளிர்ச்சியாகவைத்துக்கொள்ள விரும்பினால், சுரைக் காயைப் பயன்படுத்தலாம். நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு அடிக்கடி தாகம்ஏற்பட்டுஉடல் நிறையும் குறையும். இதைத் தவிர்க்க சுரைக் காயின் சதைப் பகுதியை, சிறுசிறு துண்டுகளாக நறுக்கிச் சாம்பார் செய்து சாப்பிட்டு வந்தால், தாகம் அடங்கும். மேலும், நீரிழிவு உள்ளவர்கள் இந்தக் காயை அடிக்கடி பயன் படுத்தி வரக் குருதியில் சர்க்கரையின் அளவு கணிசமாகக் குறையும்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### உள்ளம் சொல்வதைக் கேள்

அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும் போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின் பற்றுங்கள். அறிவால் அடையமுடியாத உயர்ந்த இடத்துக்கு நல்ல மனநிலை ஒருவனை அழைத்துச் செல்லும்.

மற்றவர்களுக்காக நீங்கள் மேற்கொள்ளும் மிகக் குறைந்த அளவு உழைப்பும், எமக்குள்ளே இருக்கும் சக்தியைத் தட்டி எழுப்புகிறது.

ஒரு எஜமானைப்போல உங்கள் செயல்களைச் செய்யுங்கள். அடிமையைப் போல உங்கள் செயற்பாடுகள் அமையக்கூடாது. முழுமையான சுதந்திர உணர்வும், அன்பும் கொண்டு உங்கள் கடமைகளில் பணியாற்றுங்கள்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்



| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 600 | 800 | 400 | 500 |
| நண்டு | 300 | 400 | 200 | 400 | 350 | 400 |
| கணவாய் | 500 | 600 | 400 | 600 | 300 | – |
| பாரை | 100 | 500 | 350 | 500 | 300 | 350 |
| சுறா | 400 | 500 | 350 | 650 | 400 | 400 |
| சீலா | 250 | 400 | 300 | 400 | 200 | 250 |
| விளை | 400 | 400 | 260 | 350 | 300 | 300 |
| முரல் | 250 | 300 | 250 | 300 | 250 | – |
| கும்பிளா | 250 | 300 | 200 | 300 | 200 | 200 |
| கிழாக்கன் | 350 | 800 | – | 500 | – | – |
| ஓரா | 300 | 300 | 220 | 400 | – | – |
| திரளி | 200 | 200 | 150 | 250 | 100 | 150 |
| நகரை | 150 | 200 | 100 | 300 | 100 | 200 |
| சூடை | 150 | 100 | 50 | 120 | 80 | – |
| ஒட்டி | 200 | 150 | 180 | 300 | 200 | 150 |
| திருக்கை | 150 | 300 | 150 | 250 | 150 | 100 |
| பாலை | 300 | 200 | – | 450 | 200 | – |
| வாழை | 100 | 100 | 150 | 350 | 200 | 100 |
| கொய் | 100 | 150 | 40 | 100 | 80 | – |
| மதனம் | 150 | 200 | 130 | 250 | 150 | 100 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்



| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 40 | 60 | 60 | 60 | 60 | 30 |
| கத்தரி | 80 | 80 | 110 | 100 | 100 | 120 | 80 | 60 |
| கரட் | 60 | 80 | 60–140 | 80 | 200 | 200 | 100 | 120 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 50 | 60 | 50 | 20–30 |
| பயிற்றை | 100 | 80 | 120 | 100 | 120 | 160 | 100 | 100 |
| பாகல் | 180 | 160 | 280 | 160 | 180 | 100 | 110 | 160 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 70 | 60 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 130 | 140 | 140 | 130 | 160 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 120 | 140 | 120 | 200 | 100 | 120 |
| பூசணி | 40 | 140 | 60 | 50 | 40 | 80 | 50 | 50 |
| தக்காளி | 100 | 100 | 100 | 100 | 100 | 140 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 50 | 70 | 80 | 60 | 40 |
| கீரை | 30 | 50 | 40 | 10 | 40 | 40 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 250 | 300 | 300 | 260 | 320 | 600 | 250 | 280 |
| புடோல் | 50 | 60 | 60 | 60 | 80 | 80 | 60 | 60 |
| கோவா | 100 | 80 | 80 | 80 | 100 | 140 | 100 | 70 |
| வெண்டி | 120 | 80 | 80 | 100 | 100 | 80 | 50 | 40 |
| போஞ்சி | 140 | 140 | 180 | 140 | 160 | 200 | 160 | 120 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 | 80 | 100 | 120 | 80 | 60 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 40 | 60 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 110 | 130 | 120 | 100 | 100–120 |
| தேசிக்காய் | 300 | 350 | 300 | 320 | 360 | 400 | 200 | 350 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 20 | 15 | 08 |
| [illegible] | 120 | 140 | 120 | 140 | 200 | 200 | 120 | 150–180 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | 80 |
| முருங்கைக்காய் | 120 | 190 | 120 | 60 | 120–130 | 200 | 120 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடி சோதிடம்

*(ராசிகளுக்கு உரிய காரகங்கள் குறித்து நேற்றைய உதயனில் வெளியான பகுதியின் தொடர்ச்சி இன்றைய உதயனில் பிரசுரமாகின்றது.)*

**தனுசு:**
காட்டுப் பிரதேசம், ஆயுத உற்பத்திச்சாலை, வில் வித்தை, தொடை, வளமான பகுதி, இராணுவத் தளம், பூசை செய்யும் அறை, கஜானா, மர வியாபாரம், ஆன்மிகத் துறை, சட்டம் மற்றும் நீதித்துறை, அறநிலையத்துறை, நிதித்துறை, கல்வித்துறை, போர்ப் பயிற்சி, தர்மஸ்தாபனம் நடத்துதல்.

**மகரம்:**
வீட்டுப் பொருள் வைக்கும் பகுதி, அணைக்கட்டுப் பகுதி, கடற்கரை, சேறு நிரம்பிய பகுதி, காவலர் குடியிருப்பு, தொழிற்சாலை நிரம்பிய பகுதி, உணவு விடுதி, உர வியாபாரம், எண்ணெய் வியாபாரம், சுரங்கத் தொழில், திரவப் பொருள் விற்பனை, கழிவுப் பொருள்கள் விற்பனை, தோல், இரும்பு வியாபாரம், கட்டட வேலை, கடினமான வேலை, கீழ்மட்ட ஊழியம், முழங்கால்.

**கும்பம்:**
மறைவிடம், இரகசிய இடம், இருண்ட பிரதேசம், மதுபானக் கடைகள், இடுப்பின் பின்புறம், சூதாட்ட ஸ்தலங்கள், கசாப்புக் கடை, சோம்பேறிகள், புஞ்சை தானியம் விளையும் இடம், சோதிடம், ஆன்மிகம், ஆசிரியர், ஆலோசனை வழங்குபவர், விமானத்துறை, தீயணைப்புத் துறை, சிறைச்சாலை, வெடிகுண்டு தயாரித்தல், சுங்க இலாகா, உளவுத்துறை.

**மீனம்:**
கிணறு, நீர் நிறைந்த தொட்டி, கடற்கரை, நதிக்கரை, புண்ணிய ஸ்தலங்கள், கல்வித்துறை, மருத்துவம், நீதித் துறை, கடற்படை, ஆலயப் பணி, மத போதகர்கள், புனித யாத்திரை, பாதங்கள்.

**மேலே கொடுக்கப்பட்டுள்ள காரகங்களைத் தவிர, மேலும் பல காரகங்கள் இருக்கின்றன.**
இங்கு கொடுக்கப்பட்டுள்ளவை பாவ காரகங்கள் அல்ல. ராசிகாரகங்களே. ஒரு ராசியில் ஒரு கிரகம் நின்றால் அந்த ராசியின் காரகத்துவம் அந்தக் கிரகத்தைத் தாக்கும் என்பது விதி.

முக்கியமாக, நாடிமுறை சோதிடத்தில் கிரகங்களை ராசிக்கட்டத்தில் அமர்த்தும்போது மேடம் முதல் கன்னிவரை மேல் இருந்து கீழாகவும் துலாம் முதல் மீனம் வரை கீழ் இருந்து மேலாகவும் எழுதப்படவேண்டும். அப்போதுதான் ஒரு கிரகம் பகைக்கிரக மத்தியில் உள்ளதா, நட்புக் கிரக மத்தியில் உள்ளதா என அறிய முடியும். ஏன் என்றால் இந்த நாடிமுறையில் நவாம்சக் கட்டம் காண்பிப்பது இல்லை. நவாம்சக் கட்டம் இருந்தால், கிரகங்கள் உள்ள வாதாசாரத்தை வைத்து கிரக வரிசையை அறியலாம். இந்த நாடிமுறையில் ராசிக்கட்டம் மட்டும் இருந்தால் போதுமானது. ஒரு ராசிக்கட்டத்தில், சூரியன் மேலேயும் ராகு கீழேயும் உள்ளது. அதனால் சூரியன் மேட ராசியில் உள்ள 30 பாகையில் சுமார் 6 பாகையில் இருப்பதாக வைத்துக்கொண்டால், ராகுவானவர் 6 பாகைக்கு மேல் 30 பாகைக்குள் இருப்பதாகக் கொள்ளலாம். இதேபோன்று கன்னி வரை உள்ள கிரகங்களுக்கு முடிவு செய்யலாம். அடுத்து துலாபத்தில் சனி கீழேயும் கேது மேலேயும் உள்ளது. அதனால் சனி 9 பாகையில் இருப்பதாக எடுத்துக்கொண்டால் கேது மீதி உள்ள 21 பாகைக்குள் இருப்பதாகக் கொள்ள வேண்டும். அதேபோன்று மீனத்தில் செவ்வாய், சுக்கிரன், புதன் என வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கிரகம் இருக்கும் முறையைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்தால்தான் பலன் கூற சௌகரியமாக இருக்கும். இல்லாவிட்டால் பலன் தவறிப் போகும். இந்தக் கட்டத்தில் சூரியன் உச்ச பாகையில் நிற்கிறார் எனப் பலன் கூறுவோம். ஆனால் பகைக்கிரகமான ராகுவுடன் சேர்ந்து இருக்கிறார். அதே சமயம், துலாபத்தில் உள்ள சனி, சூரியனின் பகைக் கிரகத்தில் நின்று சூரியனைப் பார்க்கிறார். ஆகவே, சூரியனை தந்தைக்கு காரகக் கிரகமாக எடுத்துக் கொண்டால், குருவான சாதகன் பிறந்த பிறகு, இவனுடைய தந்தையான சூரியன் பகைக் கிரகங்களால் பாதிக்கப்பட்டுள்ளதால் பல கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாவார். அதேபோல், சூரியனை மகனாகக் கொண்டு பார்த்தால், (கால புருஷதத்துவத்தில், சிங்கம் 5ஆம் வீடு புத்திரஸ்தானம் அதிதியாக சூரியனை மகனாகக் கொண்டு பார்க்கப்பட்டது) நாடியில், சூரியனுக்குத் தகப்பன் காரகன் என்றும் மகன் காரகன் என்றும் உள்ளதால் இவருடைய மகனும் சிரமத்துக்கு ஆளாவார் எனக் கூறலாம். கட்டத்தில் சுக்கிரனும் உச்சம் பெற்றுள்ளார். ஆனால், சுக்கிரன், செவ்வாய், புதன் ஆகிய இரு பகைக்கிரகங்களின் மத்தியில் இருப்பதால் (புதன், சுக்கிரன் நண்பர் செவ்வாய், சுக்கிரன் நண்பர்) சுக்கிரன் தனது பலத்தை இழக்கிறார். ஆகவே, செவ்வாயின் காரகங்கள், புதனின் காரகங்களால், சுக்கிரனின் காரகங்கள் கெடும். ஒரு நீச்ச கிரகம் பரிவர்த்தனை பெறுவதால் தான் சொந்த வீட்டுக்குச் சேரும்போது நீச்ச பங் கம் ஏற்படுகிறது. ஒரு சாதகத்தில் செவ்வாய் நீச்ச முற்று, கடகத்தில் இருந்து சந்திரன் நீச்சமுற்று விருச்சிகத்தில் இருந்தால் நீச பரிவர்த்தனை பெறுகிறது.

பரிவர்த்தனை காரணமாக அவர்கள் தமது வீட்டுக்குச் சென்றுவிடுவதால் ஆட்சிப் பலத் தைப் பெற்று நீச்ச பங்கம் பெறுகின்றனர். இதற்கு பலன் கூறுவதானால், சாதகன், சமுதாயத் தில் ஒரு அந்தஸ்தான நிலையையும் மதிப்பையும் பெறுவான். அவ்வாறு உயருவதற்கு கள்ள வழியில் நடப்பவர்களின் உதவி கிட்டும். (குரு மதிப்பு, அந்தஸ்து, சந்திரன் கள்ள வழி செல்லுதல்)

அடுத்து, அஸ்தமனம் பெறும் கிரகம் பரிவர்த்தனை பெறுவதன் காரணமாக அஸ்தமன தோஷம் நீங்கி விடும். சாதகத்தில் சூரியனும், குருவும் உபாசனை தூரத்தில் உள்ள காரணத்தால் குரு அஸ்தமனம் அடைகிறார். அப்போது குரு தனது காரகத்தைச் சரிவர செய்ய இயலாது. ஆனால் குரு, செவ்வாயுடன் பரிவர்த்தனை பெறுகின்ற காரணத்தால் அஸ்தமன தோஷம் நீங்கப் பெறுகிறது. (தொடரும்)

# பெண்களின் இயல்பு பாதுகாக்கப்படல் வேண்டும்

பெண்கள் எந்த விவகாரத்தில் ஈடுபடுவதாக இருந்தாலும் அவர்களுக்கே உரிய இயல்பு பாதுகாக்கப்படல் வேண்டும். பெண்மைக்கு எந்த அச்சுறுத்தலும் ஏற்படக்கூடாது என்பது மட்டுமல்ல, அவர்களுக்கே உரிய இயல்பு, அவர்களின் சுபாவம், அவர்களின் தன்மைக்கு எந்தவிதக் குந்தகமும் ஏற்படாது என் பதற்கான உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். அவர்களுக்கே உரிய தனியான இயல்பு, அவர்களின் சுபாவம், அவர்களின் தன்மை என்பன பாதுகாக்கப்பட வேண்டும். வீடு என்பது பெண்களின் இராஜ்ஜியம் என்பதாகும். அந்த இராஜ்ஜியத்தின் தலைவியாக இருப்பவள் பெண். ஆணின் துணைவியாக, குழந்தைகளின் தாயாக, வீடு என்ற சாம்ராஜ்ஜியத்தின் சொந்தக்காரியாக, நிர்வாகியாக இருப்பது பெண்ணே. எனவே, வீடு என்ற சாம்ராஜியத்தின் நிர்வாகம், பரிபாலனம் பாதிக்கப்படாமல் இருப்பது மிக முக்கியம். இன்று பெண்ணிலைவாதிகள் அல்லது நவீனத்துவவாதிகள் என்று அழைக்கப்படுகின்ற பெண்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள் பெண்கள் தொழில் புரிவது தொடர்பில் சில வாதங்களை முன்வைக்கின்றனர். ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று கோஷமிடுகின்றனர். தங்களின் இயல்பை மறந்து தாங்களும் ஆண்களைப் போல் அனைத்து விவகாரங்களிலும் ஈடுபட வேண்டும், அது தமது உரிமை என வாதிடுகின்றனர். அந்த உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக அமைப்புக்களையும் உருவாக்குகிறார்கள்.




பெண்கள் சமூகத்தில் சம அந்தஸ்து உள்ளவர்கள். சரி பாதி. அவள் வீட்டில் முடங்கிக் கிடப்பது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும். சமூகத்தில் குறைந்தபட்சம் 50 சதவீதமாக இருக்கும் பெண்கள் தொழில் செய்யாமல், உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடாமல் இருக்கின்றபோது, நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. பெண்கள் முடங்கியிருக்கும்போது இந்த நிலை உருவாகும். குடும்ப நலனானது பெண் தொழில் செய்வதை வேண்டி நிற்கின்றது. பெண்கள் தொழில் செய்யாதபோது குடும்ப நலன் பாதிக்கப்படுகிறது. குடும்பத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதனால் பல விபரீதங்கள் ஏற்படுகின்றன. குடும்பத்தின் வாழ்வாதாரம், கல்வி நிலை, போஷாக்கு மட்டுமன்றி குடும்பத்தின் இன்னும் பல விடயங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, குடும்ப நலனானது பெண் தொழில் செய்வதை வலியுறுத்துகின்றது.

பெண் வீட்டிலே முடங்கிக் கிடக்கின்றபோது அவளுடைய ஆளுமை விருத்தி முழுமை பெறுவதில்லை. அவள் வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றால் தான் அவள் அனுபவம் பெறுவாள், திறன்கள் வளரும். இவற்றின் ஊடாக ஆளுமை பெற்ற வளாக அவள் மாறுவாள். எனவே, பெண்கள் தொழில்புரிவதன் மூலம் அவர்களது நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. அவர்களின் ஆளுமை விருத்தியடைகின்றன. தொழில் பெண்ணுக்கு ஓர் ஆயுதத்தைப் போன்றது, அவளது கையிலிருக்கும் பாதுகாப்புக் கவசம். ஒரு பெண்



வளர்ந்து வருகின்றபோது தந்தையை இழக்கலாம். திருமண பந்தத்தில் இணைந்ததன் பின்னர் திடீரென்று கணவன் விவாகரத்துப் பெறலாம் அல்லது கணவனை இழக்கலாம். இப்படியான நிலையில் அவளுக்கு மிகப் பெரும் பாதுகாப்பு அரணாக, ஆயுதமாக அவளது தொழில், உழைப்பு விளங்குகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அதிசய மோதிரம்

முன்னொரு காலத்தில், கிராமம் ஒன்றில் ஒரு விவசாயி வாழ்ந்து வந்தான். செய்வதற்கு வேலையும் கிடைக்காமல், அவ்வாறு வேலை கிடைத்தாலும், அதன் மூலம் போதிய வருமானம் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு அவன் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் ஒருநாள்.... தேவதை ஒன்று அவனிடம் வந்தது. அந்தத் தேவதையிடம் அவன், தனது வாழ்க்கையில் தான் படும் கஷ்டங்களையெல்லாம் கூறினான். தனக்கு ஒரு விடிவு காலம் ஏற்பட வழி வகை செய்ய வேண்டுமென்றும், தேவதையிடம் வேண்டிக் கொண்டான். "நான் சொல்கிறபடி செய்.... நேராக அதோ எதிரே தெரியும் காட்டுக்குள் செல். அங்கு பல வகையான மரங்கள் உள்ளன. அவற்றில் எல்லா மரங்களையும் விட ஒரு மரம் உயரமாக வளர்ந்து நிற்கும். அந்த மரத்தின் பெயர் பைன் மரம். அதை அப்படியே வெட்டிப் போடு. அப்புறம் அதிர்ஷ்டம் உன்னைத் தேடி வரும். உனது கஷ்டங்கள் எல்லாம் தீரும்." என்று அந்தத் தேவதை ஏழை விவசாயிக்கு வழிகாட்டியது. அடுத்த நாளே, அந்த ஏழை விவசாயி கையில் கோடரியை எடுத்துக் கொண்டு காட்டுக்குச் சென்றான். காட்டுக்குள் இருந்த பைன் மரத்தைக் கண்டுபிடிக்க இரண்டு நாள்கள் அங்குமிங்கும், தேடி அலைந்தான். இறுதியில் ஓங்கி உயர்ந்து நின்று கொண்டிருந்த




பைன் மரத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான். பின்னர், தனது கையிலிருந்த கோடரியால் பைன் மரத்தின் அடிப்பாகத்தை ஓங்கி வெட்டினான். அது தரையின் மீது விழும் போது, அதன் முனைப் பகுதியில் இருந்து ஒரு பறவைக் கூடும் விழுந்தது. அந்தக் கூட்டில் இரண்டு முட்டைகள் இருந்தன. விழுந்த வேகத்தில் அந்த முட்டைகள் உருண்டோடி உடைந்தன. ஒரு முட்டையிலிருந்து ஒரு கழுகுக் குஞ்சு வெளிப்பட்டது. இன்னொரு முட்டையிலிருந்து, ஒரு மோதிரம் வெளி வந்து உருண்டோடியது.

கழுகுக் குஞ்சு பெரிதாக வளர்ந்து கொண்டே போனது. அந்த விவசாயியின் பாதியளவுக்குப் பெருத்து விட்டது. இந்தக் காட்சியைக் கண்டு விவசாயிக்கு ஒரே ஆச்சரியம். அவனால் தனது கண்களையே நம்ப முடியவில்லை. அந்தக் கழுகு தனது சிறகை அடித்துப் பறக்கும் முன்னர் விவசாயியைப் பார்த்து, "எனது அடிமைத்தனத்திலிருந்து எனக்கு விடுதலை அளித்துவிட்டீர்கள். உங்களுக்கு எனது நன்றி. அடுத்த முட்டையிலிருந்து வெளி வந்துள்ள மோதிரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அது ஓர் ஆச்சரியமான அதிசய மோதிரம். நீங்கள் எதைக் கேட்டாலும் அது கொடுக்கும். ஆனால், அதை ஒரே ஒரு தடவை பயன்படுத்தி விட்டால், அது சாதாரண மோதிரம் ஆகிவிடும். இதுதான் அந்த மோதிரத்தின் அற்புத சக்தியாகும். எனவே, ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுங்கள். அசட்டையாய் இருந்து விட்டால், பின்னர் வருத்தப்பட நேரிடும்" என்று கூறிவிட்டு கழுகு உயரே பறந்து கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தது. மிகவும் மகிழ்ச்சி அடைந்தான் விவசாயி. அந்த மோதிரத்தை எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டான். செல்லும் வழியில், அங்குள்ள நகைக் கடைக்குச் சென்றான். நகை வணிகரிடம் அந்த மோதிரத்தைக் காட்டி, "இதன் மதிப்பு என்ன இருக்கும்?" என்று கேட்டான். மோதிரத்தை வாங்கிப் பார்த்த நகை வணிகர், "இதற்கு ஈடாக யாரும் ஒரு புல்லுக்கட்டு கூடத் தரமாட்டார்கள்" என்று கூறினார். நகைவணிகர் கூறியதைக் கேட்ட விவசாயி சிரித்துக் கொண்டே அவரிடம், "இந்த மோதிரத்தின் மகிமையைப் பற்றி உமக்குத் தெரியாது. உலகத்திலுள்ள எல்லா மோதிரங்களையும் சேர்த்தாலும் இதன் மதிப்புக்கு ஈடாகாது" என்று கூறிய விவசாயி, அந்த மோதிரம் தனக்கு எப்படிக் கிடைத்தது என்றும் விளக்கமாகக் கூறினான். விவசாயி கூறியதைக் கேட்டு, மோதிரத்தின் மகிமையை அறிந்து கொண்ட நகை வணிகரின் உள்ளத்தில் பேராசை தலை தூக்கியது. அவன் அந்த மோதிரத்தை அபகரிக்கத் திட்டம் போட்டார்.

விவசாயியிடம் வணிகர் மிகவும் கனி வாக, "ஐயா, நீங்கள் இன்று இரவு எனது வீட்டில் தங்கிவிட்டு, நாளைக் காலையில் செல்ல வேண்டும் என்பது எனது விருப்பம்" என்று கூறினார். விவசாயியும் அதற்குச் சம்மதித்தான். அன்று இரவு விவசாயிக்கு நல்ல அறுசுவை விருந்து. விருந்தின் முடிவில் திராட்சை ரசம் வேறு. அதை வாங்கிக் குடித்த விவசாயி சிறிது நேரத்தில் மயங்கி விழுந்தான். அந்தச் சமயம் பார்த்து விவசாயியின் கையிலிருந்த மோதிரத்தைத் திருடிக் கொண்டு, ஒரு சாதாரண மோதிரத்தை மாட்டி விட்டார் வணிகர். விவசாயி நன்றாகத் தூங்கினான். "மோதிரத்தைப் பயன்படுத்தி உலகின் முதல் பணக் காரனாக ஆகி விடலாம்" என்று எண்ணி ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தார் வணிகர். மறுநாள் பொழுது விடிந்தது. சிறப்பான விருந்து கொடுத்தமைக்கு நன்றி கூறி விட்டு, நகை வணிகரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு தனது வீட்டை நோக்கிப் புறப்பட்டான் விவசாயி. நகை வியாபாரியோ, அந்த மாய மோதிரத்தைத் தனது கை விரலில் அணிந்து கொண்டு, ஒய்யார மாகத் தனது இருக்கையில் அமர்ந்தவாறே, மாய மோதிரத்தைப் பார்த்து, "எனக்கு ஐந்தாயிரம் பொற்காசுகள் வேண்டும்" என்று கேட்டான். மோதிரம் தனக்குள்ளாக, "அடப்பாவி! ஓர் அப்பாவி ஏழையை ஏமாற்றி, அவனிடமிருந்து என்னைத் திருடி, என் மூலம் உலகப் பணக்காரன் ஆகப் பார்க்கிறாயா? இதோ, உனது கதையை இப்போதே முடித்து விடுகிறேன்" என்று கூறிக் கொண்டது. நகை வணிகர் கேட்டுக் கொண்ட மாதிரியே, அந்த மோதிரம் தங்கக் காசுகளை அவரது தலையில் மழை போல் பெய்து கொண்டிருந்தது. தங்கக் காசுகள், "பட் பட்" என்று அவரது தலை மீது விழுந்தன.

"தலை வலிக்கிறது, போதும் போதும்!" என்று கத்தினார். ஆனால், தங்க மழை நின்றபாடில்லை. கடைசித் தங்கக் காசு அவரது தலையில் விழுந்தவுடன் தங்க மழை ஓய்ந்து போனது. ஆனால், விழுந்து கிடந்த தங்கக் காசுகளை அந்த வணிகரால் எடுக்க முடியவில்லை. காரணம், தங்க மழை ஓய்வதற்கு முன்பே, அவரது உடலை, விட்டு உயிர் போய் விட்டது. தங்க மழை பெய்ததால், நகை வியா பாரி இறந்து விட்டார் என்ற செய்தி காட்டுத் தீ போல் பரவியது. நகை வியாபாரியின் வீட்டை நோக்கி அந்த ஊர் மக்களெல்லோரும் ஓடினர். நகை வியாபாரி மீது தங்கக் காசுகள் குவிந்து கிடந்தன. "இப்படி மழைபோல் தங்க காசுகள் வந் தால், தீமையும் வராமலா போய்விடும்" என்று வந்தவர்கள் பேசிக் கொண் டனர்.

பின்னர் ஆளுக்கு இரண்டு தங்கக் காசுகளை எடுத்துக் கொண்டு அவரவர் வீடுகளை நோக்கிச் சென்றனர். பின்னர் நகை வியாபாரியின் கைவிரலில் இருந்த அந்த மாயமோதிரம் தானே கழன்று அந்த விவசாயியின் வீட்டை நோக்கிப் பறந்து சென்றது.



# துணிவைத் துணையாக்குவோம்!

"துணிவைத் துணையாக்கி அச்சத்தை அச்சப்படுத்துவோம்! அகிலமே நமதென்று எதிலும் வெற்றி கொள்வோம்!"

மனதில் அச்சம் குடி கொண்டிருந்தால் உங்களால் எதையும் முழுமையாகச் செய்ய முடியாது. ஆகவே முதலில் அச்சத்தை மனதில் இருந்து வெளியேற்ற வேண்டும். அச்சத்தை வெளியேற்றும் ஆற்றல் தன்னம்பிக்கைக்குத்தான் உள்ளது. எனவே மனதில் தன்னம்பிக்கை சுடர் விட வேண்டும். மேலும் உங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறச் சமுதாயத்தில் உள்ள பல்வேறு தரப்பட்ட மக்களிடையே சுமுகமாகவும் இணக்கமாகவும் பழக வேண்டும். அப்பொழுது தான் அவர்களின் அன்பையும், உதவியையும் பெற்று உங்களால் உயர முடியும். அவ்வாறு அனைவரிடமும் அன்பாகவும், இயல்பாகவும் பழகுவதற்கும் அச்சம் தடையாக இருக்க ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது. அதாவது நாம் எவரைப் பார்த்துப் பயப்படுகின்றோமோ அவர்கள் மீது அன்பு செலுத்த முடியாது. அச்சம் நீங்கினால் தான் ஒருவர் மீது அன்பு செலுத்த முடியும். அவருடைய நல்ல பண்புகளை புரிந்து கொள்ள முடியும். நடந்தவைகளை எண்ணிச் சிலர் வருந்துவதன் காரணமாகவும் மனதில் அச்சம் குடிபுகுந்து விடுகின்றது. ஆகவே நடந்த தவறுகளைத் திருத்திக் கொண்டு முன்னேற வேண்டுமே தவிர தேவையில்லாமல் வருந்தக் கூடாது.

**மரியாதை வேண்டும்**

மண்ணைப் பார்த்து விதை அச்சப்படுமானால் அது முளைப்பது எப்படி? நீரைப் பார்த்து மீன் அச்சப்படுமானால் அது பிழைப்பது எப்படி? அச்சம் என்பது வேறு மரியாதை என்பது வேறு. அச்சம் எமது சிந்தனைகளை முடக்கும். மரியாதை நமது சிந்தனைகளைச் சீராக்கும். ஆகவே எதையும் அச்சமின்றி அணுகுறு தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். வளர்கின்ற வயதில், எமது இளைய மனங்களில் பிறர் அச்சத்தை ஏற்படுத்தி வைத்திருக்கக் கூடும். ஆகவே நமது செயல்களைச் சுயமாகக் கண் காணித்து, எமது சுபாவத்தை மாற்றி யமைத்துக் கொள்ள வேண்டும்.

மரியாதை செலுத்தினால், மதிப்பு உயரும். அதாவது, மரியாதை என்பது மனதால் ஒருவரை மதிப்பது. அச்சம் என்பது அவரைப் பார்த்து உடலும், உள்ளமும் நடுங்க பயப்படுவதால் உண்டாகும் தாழ்வான எண்ணம். மேலும் அச்சம், தாழ்வு மனப்பான்மையையும், கோழைத்தனத்தையும் உண்டாக்கும். மரியாதை, தன்னம்பிக்கையையும், துணிச்சலையும் உருவாக்கும். ஆகவே மற்றவர்கள் மீதும் மரியாதை செலுத்தக் கற்றுக் கொள்ளுங்கள்.

**தன்னம்பிக்கை வேண்டும்**

தவறு நேர்ந்துவிடுமோ? என்ற அச்சமே தவறு ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணமாக இருக்கிறது என்று மனோதத்துவ அறிஞர்கள் கூறுகிறார்கள். மேலும், எதையும் சிறப்பாகச் செய்து முடிக்க முடியும் என்று நம்புகின்றபோது, உங்களுடைய ஆழ் மனதின் முழு ஆற்றலும் வெளிப்பட்டு, எதுவாயினும் அதைச் சிறப்பாகவும் முழுமையாகவும் செய்து உங்களால் வெற்றி பெற முடிகின்றது. சிறுசிறு முயற்சிகளைச் செய்து கொண்டே இருங்கள். முயற்சிச் சிறகுகள் முளைக்கும் போது அச்சத்தின் ஆதிக்கம் குறைந்து விடுவதை உணர்வீர்கள். நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கையும், வீழ்ந்தாலும் உங்களால் எழுந்துவிட முடியும் என்ற தன்னம்பிக்கையும் உங்களுடைய மனதில் சுடர் விட்டுக் கொண்டே இருக்க வேண்டும். பிரச்சினைகளின் தொகுப்பே வாழ்க்கை என்பதையும், பிரச்சினைகளைத் தீர்ப்பதே வெற்றி என்பதையும் புரிந்து கொள்ளுங்கள். பின்னர் பிரச்சினைகள் உங்களைப் பயமுறுத்துவது குறைந்து விடும். சிக்கல்களைத் தீர்க்க ஆக்கப்பூர்வமாக சிந்திக்க வேண்டுமே ? தவிர அச்சப்படக்கூடாது.

**பிரச்சினைகளை எதிர்கொள்ளுங்கள்**

பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது, பிரச்சினைகள் எம்மைப் பார்த்து பின் வாங்கத் தொடங்குகின்றன. துணிச்சல் எம்மோடு துணைக்கு இருக்கும்போது எரிமலையும் பணிந்து பனிமலையாகின்றது. ஆம்! எதையும் எமக்குச் சாதகமாக மாற்றும் சக்தி துணிச்சலுக்கு உள்ளது. எதிர்த்து நிற்கும்போது, அச்சம் எம்மை விட்டு விடை பெற்றுக் கொள்கின்றது.

ஒருசமயம் சுவாமி விவேகானந்தர் காசி நகரில் ஒரு சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது ஒரு குரங்கு அவரைப் பின் தொடர்ந்து வந்து கொண்டு இருந்தது. உருவத்தில் மிகவும் பெரியதாக இருந்த அந்தக்குரங்கு அச்சத்தை ஊட்டுவதாக இருந்தது. குரங்கைப் பார்த்து அஞ்சிய விவேகானந்தர் வேகமாக நடந்தார். குரங்கும் அவரை வேகமாகப் பின் தொடர ஆரம்பித்தது. பின்னர் அவர் ஓட ஆரம்பித்தார். குரங்கும் ஓடி வந்தது.

பின்னர் திடீரென அப்படியே நின்று குரங்கையே உற்றுப் பார்த்தார் விவேகானந்தர். குரங்கும் அப்படியே நின்று கொண்டது. பின்னர் சில நொடிகளில் திரும்பி ஓட ஆரம்பித்தது.

இது எமக்கு ஒன்றைத் தெளிவுபடுத்துவதாக இருக்கின்றது. அதாவது சிக்கல்களைக் கண்டு நாம் அஞ்சி ஓடினால் சிக்கல்களும் நம்மை விடாமல் துரத்தும். அவ்வாறு ஓடாமல், துணிந்து நின்று எதிர்க்கத் தொடங்கினால் சிக்கல்கள் சிதறுண்டு போகும்.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தண்டனைகளை அதிகரிப்பதை விடுத்து குற்றங்களைத் தடுங்கள்

## அரசிடம் கோருகிறார் மகிந்த



கொழும்பு, ஒக்.28

சாவுத் தண்டனை நிறைவேற்றுவதற்கான அரசின் யோசனையை, தாம் எதிர்ப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தண்டனைகளை அதிகரிப்பதை விடுத்து சமூகத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களைத் தோற்கடிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் அரசிடம் கோரியுள்ளார்.

பாதுக்க என்ற இடத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய போதே மகிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு கூறியுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சமூக விழுமியங்கள் இன்று இழக் கப்பட்டு வருகின்றன. தண்டனைகளை அதிகரிப்பதால் குற்றங்களை குறைக்க முடியாது. அண்மைக் காலத்தில் இலங்கையில் பெரியளவில் குற்றங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, சாவுத் தண்டனையே வேண்டும் என்று அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமசந்திர யோசனை ஒன்றை நாடாளுமன்றத்தில் முன் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-106)

# பொலிஸாரைக் கண்டு ஓடியவர் தவறி விழுந்ததால் மாட்டினார்

யாழ்ப்பாணம், ஒக். 28

பொலிஸார் நிறுத்துமாறு சைகை காட்டியபோதும் அதனைப் புறக் கணித்து வேகமாகச்சென்றதால் மோட் டார்சைக்கிளில் பின்னாலிருந்தவர் தூக்கி வீசப்பட்டு விழுந்தார். இத னையடுத்து கைது செய்யப்பட்ட அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதி மன்று உத்தரவிட்டது.

புன்னாலைக் கட்டுவனில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இருவர் ஒரு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர். ரோந்தில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவர்களை மறித் துள்ளனர். ஆனால் அவர்கள் அதனைப் புறக்கணித்து மேலும் வேகமா கச் செல்ல முற்பட்டுள்ளனர். அதன்போதே மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து பயணித்தவர் தூக்கி வீசப்பட்டார். அதனால் பொலிஸார் அவரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் முற் படுத்தினர். அவரை எதிர்வரும் 2 ஆம் திகதி வரைவிளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தர விட்டது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் தப்பியோடிய நிலையில் அவரையும் பொலிஸார் மறுநாள் கைது செய்தனர். அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (த-4)

## மரண அறிவித்தல்

### அந்தோனி இன்னாசிமுத்து



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி இன்னாசிமுத்து 2015 / 10 / 27 அன்று காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான அந்தோனி சூசானத்தின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான இராயப்பு அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மரியம்மாவின் அன்புக் கணவரும், அன்ரன் விமலதாஸ் (ஆசிரியர் Dr.A. தியாகராஜா M.M.V) றெனோ அன்ரனீசியா (ஆசிரியர் யா/வேரப்பிட்டி ஸ்ரீகணேச வித்தியாலயம்), ரூபாகினி கனிஷ்ரா, சபேசன் அருள்தாஸ், சத்தியசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மேரி லேற்றீசியா (காரைநகர் விவசாயத் திணைக்களம்) வரத கிறிஸ்துராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், கிளாஸ்ரிக்கா, நிவேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நாளை 29.10.2015 வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு தூய பற்றிமா அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தூய பற்றிமா அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

T.P 0778256309

# தலைமன்னார் - இராமேஸ்வரம் தரைப் பாதை குறித்து ஆராய்வு

## இந்திய அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.28

தலைமன்னார் மற்றும் இராமேஸ்வரம் இடையேயான தரை வழிப் பாதையை விரைவில் அமைப்பது தொடர்பில் இந்திய அரசு ஆய்வு மேற்கொள்ளவுள்ளது என்று இந்திய அமைச்சர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இருநாடுகளின் ஒப்புதலுடன் பல கட்டப் பேச்சுக்கள் ஊடாக இது சாத்தியப் படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதனை வீதிப் போக்கு வரத்து,நெடுஞ் சாலைகள் மற்றும் கப்பல் போக்கு வரத்து மத்திய அமைச்சர் பொன் இராதாகிருஸ்ணன் உறுதிப்படுத்தியுள்ளார்.

சேது சமுத்திரத் திட்டம் தொடர்பிலும் பல ஆய்வு அறிக்கைகள் தயாரிக் கப்பட்டுள்ளதுடன் உயர் நீதிமன் றத்தில் இந்த திட்டம் தொடர்பில் வழக்கு நிலுவையில் இருந்தாலும் மக்களின் உணர்வுகளைப் பாதிக்காத வகையிலும் மன்னார் வளைகுடாவின் சூழலியலைப் பாதிக்காத வகையிலும் புதிய வழிமுறைகளைப் பின்பற்றுவது தொடர்பில் தீர்மானிக் கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித் துள்ளார்.

மீனவர் பிரச்சினை தொடர்பில் கூறுகையில் மீனவர்களின்உணர்வுகளைப் புரிந்துகொண்டு இந்திய அரசு அண்மையில் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிப்பது தொடர்பில் பேச்சை ஆரம்பித்துள்ளது என்று தெரிவித்துள்ளார். (ற-ரி2)

# ஆப்கானிஸ்தானுக்கு இலங்கை அனுதாபம்

ஆப்கானிஸ்தானில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட சக்திமிக்க பூகம்பத்தில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை அரசு அனுதாபத்தைத் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இலங்கை வாழ் மக்கள் மற்றும் அரசு மிகுந்த கவலையடைவதாக வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பூகம்பத்தினால் உயிரிழந்த மக்களின் குடும்பங்களுக்கு அனுதாபங்களை தெரிவிப்பதாகவும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைவதற்கு பிரார்த்தனை செய்வதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# தென்மராட்சியில் டெங்கு ஒழிப்பு

சாவகச்சேரி, ஒக்.28

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இன்று மட்டுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும் டெங்குப் பரிசோதனைகள் இடம்பெறுமென அறிவிக் கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற டெங்குபரிசோதனைகளின் போது அரச பணியாளர்களின் குடியிருப்புகளில் டெங்கு உற்பத்திக்கான ஏதுநிலை காணப்பட்டதென்றும் தற்போது காணப்படும் விடுமுறை தினங்களைப் பயன்படுத்திக் குடியிருப்புகள் மற்றும் காணிகளைத்துப்புரவாக்குமாறும் தெரிவித்துள்ள சுகாதாரப் பகுதியினர் டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான நிலை காணப்படின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை கடந்த 15தினங்களில் சங்கத்தானை, மீசாலை, வரணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த எட்டுப் பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி மருத்துவம [illegible]

# கஞ்சா வைத்திருந்தவர் யாழ். நகரில் கைது

யாழ்ப்பாணம், ஒக்.28

உடைமையில் 29 கிராம் கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் நபரொருவரை, யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று செவ்வாய்க் கிழமை கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நாவாந்துறை ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே யாழ். நகர் சத்திரத்து சந்தியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் ஹையஸ் வாகனச் சாரதி என்றும், வாகனத்தில் 29 கிராம் கஞ்சாப் பொதியை வைத்திருந்த போதே பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் சிவில் உடை தரித்த பொலிஸார் குறித்த நபரைக் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் மற்றும் அவரிடம் மீட்கப்பட்ட ஹையஸ் வாகனத்தையும் யாழ்ப்பாணம் பொலிஸார், பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

குறித்த நபரிடம் விசாரணை மேற்கொண்ட பின்னர் இன்று புதன் கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் யாழ்ப் பாணம் பொலிஸார் தெரிவித் துள்ளனர். (வ-106)

# விசாரணை ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை தயார்

## எதிர்வரும் நாள்களில் ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு, ஒக்.28


பெரியளவிலான நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை மேற் கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழு, இதுவரை நடத்திய விசாரணைகள் குறித்து, இடைக்கால அறிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளது.

எதிர்வரும் இரண்டு வார காலத்திற்குள் குறித்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்று ஆணைக்குழுவின் செயலாளர் லெஸில் டி சில்வா தெரிவித்தார்.

குறித்த ஆணைக்குழுவினால் இது வரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முன்னேற்றம் குறித்த இரண்டு இடைக்கால அறிக்கைகள் ஏற்கனவே ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் மூன்றாவது இடைக்கால அறிக்கை எதிர்வரும் நாட்களில் சமர்பிக்கப்படும் என்றும் விசாரணைகள் குறித்த பூரண அறிக்கை தயார் படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் ஆணைக்குழுவின் செயலாளர் லெஸில் டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (வ)

## மரண அறிவித்தல்



### தர்மகுலசிங்கம் டினா

(கணித ஆசிரியர் - அறிவொளி கல்விநிலையம், பளை)

படித்த மகளிர் திட்டம் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மகுலசிங்கம் டினா 26.10.2015 திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் தர்மகுலசிங்கம்-விஜயராணி தம்பதியரின் அன்பு மகனும் டனிஷா (T.O வலயக்கல்வி அலுவலகம் தென்மராட்சி), கவிஷா (CSS தொழில்நுட்பவியல் கல்லூரி) பிருந்தன் (ICT தொழில்நுட்பவியல் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகரத்தினம் (மீசாலை-ஓய்வூதியர் யாழ். நீதிமன்றம்), கமலராணி (மிருசுவில்), யோகராணி (லண்டன்), செந்தில்ராணி (லண்டன்) ஆகியோரின் பெறாமகனும், கண்மணி (பளை), கமலாம்பிகை (மிருசுவில்) கோணேஸ்வரி (குடத்தனை), விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), சிவபாலசுப்பிரமணியம் (பிரான்ஸ்), கதிர்காமநாதன் (பிரான்ஸ்), செந்தில்நாதன் (லண்டன்), யோகநாதன் (பிரான்ஸ்), சுவேந்திரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.10.2015) புதன்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக படித்த மகளிர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் [illegible] அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: குடும்பத்தினர்.
077 95 94 391

(65607) (10.17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றங்களில் ஈடுபட்டோருக்கு எதிராக கண்டிப்பாக நடவடிக்கை

### அமைச்சர் ஹக்கீம் சென்னையில் தெரிவிப்பு



சென்னை, ஒக்.28
போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கடந்தஅரசால்தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்கள் மீண்டும் அவர்களுக்கே வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு சென்னை சென்றிருந்த அமைச்சர் ஹக்கீம், சென்னை விமான நிலையத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய அரசுகளிடையே நல்ல சுமுகமான உறவு உள்ளது. தொடர்ந்து அது நல்ல முறையில் நீடிக்கவேண்டும். அதற்காக இரு நாட்டுஅரசுகளும்உரிய முயற்சிகள்மேற்கொண்டு வரு கின்றன.

எல்லைதாண்டி தமிழக மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லையில் மீன் பிடிப்பதாகவும் அப்படிப் பிடிப்பவர்கள் கைது செய்யப்படுவதாகவும் பிரச்சினைகள் உள்ளன. தற்போது இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கையில் மீன் பிடித்தால் அவர்களைக் கைது செய்வதோடு ரூ. 15 கோடி அபராதம் விதிக்கப்படுவதாக செய்திகள் வெளி வந்துள்ளன.

இதைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம். இந்த விவகாரத்தில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாமல் சுமுக உறவைப் பாதுகாக்க இலங்கை அரசு முழு முயற்சி மேற்கொள்ளும். இந்திய - இலங்கைக்கிடையேயான சுமுக உறவு என்பது பாரம்பரிய அடிப்படையிலானது. அதற்குப் பழுது ஏற்படாத வகையில் இருநாட்டு மீனவர்களின் பிரச்சினைகளை சுமுகமான முறையில் தீர்க்க நடவடிக்கைஎடுக்கப்பட்டுவருகிறது.மிகவிரைவில் நல்ல தீர்வு ஏற்படும்.

தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட்ட இடங்களை மீண்டும் தமிழர்களுக்கே திருப்பித்தர மைத்திரிபாலசிறிசேனஅரசுஉறுதியாகஉள்ளது.தற்போது இராணுவக் கட் டுப்பாட்டில் உள்ள அந்த இடங்கள் பகிர்ந்தளிக்கப்படும். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இலங்கையில் தமிழர் ஒருவர் எதிர்க் கட்சித் தலைவராகி உள்ளார்.

இது ஆரோக்கியமான அரசியல். அவருடன்கலந்து பேசி பறிக்கப்பட்ட இடங்கள் திருப்பி ஒப் படைக்கப்படும். இலங்கைப் போர் குறித்து நடக்கும் உள் நாட்டு விசாரணையில் போர்க்குற்றம் நடந்திருப்பதாக விசாரணைக்குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இதில் இலங்கை அரசு உறுதியாக நடவடிக்கை மேற்கொள்ளும். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை. போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக் கப்படும்-என்றார். (த-வ)

# நெல்லியடி நகைக்கடையில் நேற்றுமுன்தினமிரவு திருட்டு

### 10 லட்சம் ரூபா பெறுமதியான நகை களவாடப்பட்து

நெல்லியடி, ஒக்.28
நெல்லியடி வதிரி பிரதான வீதியில் அமைந்துள்ள நகைக்கடையொன்று நேற்று முன்தினம் உடைக்கப்பட்டு 10 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் களவாடப்பட்டிருப்பதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடையின் மேல்சீற்றை பிரித்து உள்ளிறங்கிய திருடர்களே இந்த திருட்டை நடத்தியதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். கடையை முதல் நாள் பூட்டி விட்டு உரிமையாளர், பணியாளர்கள் சென்ற நிலையில் நள்ளிரவு நேரம் இந்ததிருட்டுஇடம்பெற்றிருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிசாருக்கு நேற்றுக் காலை கிடைத்த முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை நடத்தியுள்ளனர். இந்த சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-108,109)

## ரயிலுடன் மோதுண்ட குடும்பஸ்தர் சாவு

கிளிநொச்சி 55 ஆம் கட்டைப் பகுதியில்ரயிலுடன்மோதுண்டுகுடும் பஸ்தர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நேற்றிரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தைச் சேர்ந்த நிக்லஸ் ஸ்டீபன் (வயது-63) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

குறித்த குடும்பஸ்தர், புகையிரதப் பாதையை கடக்க முற்பட்ட போதே இந்த விபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (வ-ரி3)

# ஜெனிவாத் தீர்மானம் குறித்து ஆராய்கிறது சமசமாஜக் கட்சி

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் தமது கட்சியின் உறுப்பினர்களின் கருத்துகளைப் பெறுவதற் காக லங்கா சமசமாஜக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் இவ்வாரம் நடை பெறவுள்ளது.

அதன்பின்னர் எதிர்வரும் 7 ஆம் திகதி மத்திய செயற் குழுக் கூட்டம் நடைபெற வுள்ளது.

சர்வகட்சிக் குழுக் கூட்டத்தின் போது, ஜெனிவாத் தீர்மானம் தொடர்பிலும் அதில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரை குறித்தும் தத்தம் கட்சிகளின் நிலைப்பாட்டை இரண்டு வாரங்களுக்குள் தனக்குச் சமர்ப்பிக்குமாறு அரசியல் கட்சிகளிடம் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கான தயார்ப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவே சமசமாஜக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் பற் றியும் பேசப்படும் என்று கட்சியின் தலைவரான முன் னாள்அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இதேவேளை- அடுத்த மாதம் நடுப் பகுதியில் சர்வகட்சிக் குழுக் கூட்டம் ஜனாதிபதியின் தலைமையில் மீண்டும் நடைபெறவுள்ளது. (த-வ)

## சபாநாயகரின் நடவடிக்கை குறித்து டலஸ் அதிருப்தி

கொழும்பு, ஒக்.28
சபாநாயகர் கரு ஜயசூரியவின் நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது என முன்னாள் அமைச்சர் டலஸ் அழப்பெரும தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு உரிய சந்தர்ப்பம் அளிக்கப் படுவதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

செயற்குழுக்களில் அங்கம் வகிப்பதற்கானதெரிவு,நாடாளுமன்றில் உரையாற்றுவதற்கான நேர ஒதுக்கீடு ஆகியன தொடர்பில் திருப்தி அடைய முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கரு ஜயசூரிய சபநாயகராக நியமிக்கப்பட்டதனைத் தொடர்ந்து பெரும்மகிழ்ச்சிஅடைந்ததாகவும், இலங்கைக்கு பொன்னான ஓர் காலம் உருவாகியுள்ளது என கருதியதாகவும் டலஸ் அழகப்பெரும கூறியுள்ளார். (வ)

31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் கணபதி இரத்தினம்
(ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயில் பூசகர், குறிசுட்டகுளம்- கனகராயன் குளம்)
பிறப்பு 26.02.1952
இறப்பு 29.09.2015

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே! நீங்கள் மறைந்து மாதம் ஒன்றென்ன பல ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றுமே எம்மை விட்டு நீங்காது.
நாளை (29.10.2015) வியாழக்கிழமை குறிசுட்டகுளம், கனகராயன் குளம் முகவரியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
குறிசுட்டகுளம் கனகராயன் குளம்.
குடும்பத்தினர்.

60ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 28 . 03 . 1983
மறைவு 30 . 08 . 2015

கடந்த 30.08.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதமெய்திய எமது குடும்ப விளக்கு
அமரர் சசிகுமார் பத்மபிரியா (பிரியா)
அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (28.10.2015) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இக்கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
கனேஸ்வரம், அளவெட்டி. T.P. 0770376928
குடும்பத்தினர்.

கண்ணீர் அஞ்சலி



கப்டன்
என். சோமசுந்தரம்
(முன்னாள் பிரதி அதிபர் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, முன்னாள் தலைவர் - ஜொலிஸ்ரார் வி.க.)

கரை தட்டி கண்ணீரோ
கடலலையாய் பாயுதையா - வெண்
திரைகட்டி கண்களெல்லாம்
காண் இருளாய் போகுதையா
நிரையிலெல்லாம் மனிதரெனில்
நீர் தெய்வத்துள் தெய்வமையா
கரை காணா நின்புகழால்
காலமெல்லாம் வாழ்வீர் ஐய!

கனா குடும்பம்
சயன்ஸ் அக்கடமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பகமான விசாரணைப் பொறிமுறை இலங்கை அரசு உருவாக்கவேண்டும்

## இந்து நாளேடு வலியுறுத்து

புதுடில்லி, ஒக்.28

போர்க்காலத்தில் இடம்பெற்ற மீறல்களை விசாரணை செய்யுமாறு சர்வதேச சமூகமானது இலங்கை மீது பெரும் அழுத்தத்தை மேற்கொண்டு வரும் நிலையில், மிகவும் நம்பகமானதொரு விசாரணைப்பொறிமுறையை இலங்கை உருவாக்க வேண்டிய தேவையுள்ளது.

இவ்வாறானதொரு பொறிமுறையில் சர்வதேச கோட்பாடுகள், சட்டவல்லுநர்கள் மற்றும் தடயவியல் வல்லுநர்கள் உள்வாங்கப்பட வேண்டும். இதுவே அதிகாரமளிக்கக் கூடிய உள்நாட்டு நீதிப் பொறிமுறையின் ஊடாகப் பல்வேறு குற்றங்களை விசாரணை செய்வதற்கான வழியை ஏற்படுத்தும்.

இவ்வாறு இந்திய ஆங்கில ஊடகமான இந்து தனது நேற்றைய பதிப்பில் ஆசிரியர் தலையங்கம் வரைந்துள்ளது. அதன் முழுப்பகுதி வருமாறு:-

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையில் தொடரப்பட்ட உள்நாட்டுப்போரின்போது இடம்பெற்றமீறல்களுக்குப் பொறுப்பானவர்களை விசாரணைசெய்து தண்டிப்பதற்கான முறைசார் பொறிமுறை ஒன்று மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது என்பதை, இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட இரண்டு ஆணைக்குழுக்களும் கோடிட்டுக் காட்டியுள்ளன.

உள்நாட்டுவிசாரணைப்பொறிமுறை பலமானதாக உள்ளது என்பதைச் சர்வதேச சமூகத்துக்குக் காண்பிக்கும் ஒரு சமிக்ஞையாக இந்த ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் உள்ள போதிலும், அந்த அறிக்கைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

காணாமற்போனோர் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட மக்ஸ்வல் பரணகம ஆணைக்குழு, 2009இல் இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சில் கணிசமான அளவில் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர் எனவும் ஆனாலும் இவற்றில் பெரும்பாலானவை தனிப்பட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்களாக உள்ளதாகவும் தனது விசாரணை அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறெனினும், பெருமளவான பொதுமக்களின் இழப்பிற்கு தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம் எனவும் மூன்று பேரைக் கொண்ட பரணகம ஆணைக்குழு பழிசுமத்தியுள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில் போர் வலயங்களில் அகப்பட்ட மக்களைப் புலிகள் அமைப்பு மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியதாகவும் இவர்களை ஆயுதமுனையில் அச்சுறுத்தியதுடன் இந்த மக்கள் போர் வலயங்களிலிருந்து வெளியேறுவதற்கும் புலிகள் தடைவிதித்திருந்தனர் எனவும் பரணகம ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளையில், பொதுமக்கள் மீதான எறிகணை வீச்சுக்கான காரணம் என்ன என்பதையும் இதனை மேற்கொண்டவர்கள் தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளதாகவும் இந்த ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இலங்கை இராணுவத்திடம் சரணடைய முனைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டமை, சரணடைந்த பல நூறு வரையான புலி உறுப்பினர்கள் காணாமற்போனமை, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மகனான பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்டமை போன்ற குறித்த சில சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்யப்பட வேண்டும் எனவும் பரணகம ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் என்பது இலங்கையில் பொதுவான ஒன்றாகும். ஆனால் இதன் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆணைக்குழுவானது குற்றவியல் வழக்குகளை விசாரணை செய்வதற்காக அமைக்கப்படவில்லை.

கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை நடவடிக்கைகள் மிகவும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இந்த ஆணைக்குழு மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பாகவும் மற்றும் நாட்டில் நீதி மற்றும் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்குமான பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

போர் மீறல்கள் இடம்பெற்ற சந்தர்ப்பங்கள் மற்றும் அவை எங்கு இடம்பெற்றன என்பது தொடர்பாக ஆராய்ந்து இவ்வாறான மீறல்கள் தொடர்பாக உண்மையைக் கண்டறிதல் மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்கான முக்கிய பணிகளைப் பரணகம ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

போர்க்களத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு சட்ட வரையறைக்குள் கொண்டு வரப்பட வேண்டும் என இந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

மறுபுறத்தே நோக்கில், 2005-2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற பல்வேறு முக்கிய மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்த உடலகம ஆணைக்குழுவானது சில முரண்பாடான தீர்வுகளை முன்வைத்துள்ளது.

அதாவது 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட்டில் விமானக் குண்டுத் தாக்குதல்கள் மூலம் 51 பாடசாலை மாணவிகள் படுகொலை செய்யப்பட்டனர். இதற்கு இந்த ஆணைக்குழுவானது தமிழீழ விடுதலைப் புலிகள் மீதே குற்றம் சுமத்தியுள்ளது. உண்மையில் இது ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகும்.

இதேபோன்று சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய 17 பணியாளர்களைப் புலிகளே கொன்றனர் என இந்த ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது. ஆகவே உடலகம ஆணைக்குழுவின் இவ்வாறான சில விசாரணை முடிவுகள் முரண்பாடானவையாகக் காணப்படுகின்றன.

போர்க்காலத்தில் இடம்பெற்ற மீறல்களை விசாரணை செய்யுமாறு சர்வதேச சமூகமானது இலங்கை மீது பெரும் அழுத்தத்தை மேற் கொண்டு வரும் நிலையில், மிகவும் நம்பகமானதொரு விசாரணைப்பொறிமுறையை இலங்கை உருவாக்க வேண்டிய தேவையுள்ளது.

இவ்வாறானதொரு பொறிமுறையில் சர்வதேசக் கோட்பாடுகள், சட்டவல்லுநர்கள் மற்றும் தடயவியல் வல்லுநர்கள் உள்வாங்கப்பட வேண்டும். இதுவே அதிகாரமளிக்கக் கூடிய உள்நாட்டு நீதிப் பொறிமுறையின் ஊடாக பல்வேறு குற்றங்களை விசாரணை செய்வதற்கான வழியை ஏற்படுத்தும்.

கலப்பு நீதிப்பொறிமுறைக்கு நீடித்த செயற்பாடே தேவையான ஒன்றாகும். இதற்கு ஆங்காங்கே மேற்கொள்ளப்படும் தற்காலிக நடவடிக்கைகள் தேவையற்றதாகும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ)

# அமெ. பெண் இராஜதந்திரி நேற்று இலங்கை வருகை



கொழும்பு, ஒக்.28

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், பூகோள பெண்கள் விவகாரங்களுக்கான தூதுவர் கத்தரின் ருசெல், இலங்கைக்கு நேற்று வருகை தந்துள்ளார்.

நாளை வியாழக்கிழமை வரை அவர் இலங்கையில் பல்வேறு தரப்பினருடனும் பேச்சுக்களில் ஈடுபடுவார் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் அரச அதிகாரிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், தொழில் முனைவோர், மதத் தலைவர்கள், உள்ளிட்டோரைச் சந்தித்து, பாலினத்தை அடிப்படையாகக்கொண்ட வன்முறைகள், பெண்களின் பொருளாதாரத்தை உயர்த்துதல், அமைதி மற்றும் பாதுகாப்பில் பெண்களை ஈடுபடுத்தல் உள்ளிட்ட பரந்துபட்ட விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடவுள்ளார் என இது தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பூகோள பெண்கள் விவகாரங்களுக்கான தூதுவர் கத்தரின் ருசேல் அம்மையார், கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தெற்காசியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, இலங்கைக்கும் வரத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால், அப்போதைய மகிந்த ராஜபக்ச அரசு அவரது ப்யணத்துக்கு இடையூறு ஏற்படுத்தி, அந்தப் பயணத்தை இடைநிறுத்தியிருந்தது. இதனால், இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் இராஜதந்திர முறுகல்கள் ஏற்பட்டிருந்தன.

இலங்கைப் பயணத்தை ரத்துச் செய்த பின்னர், கத்தரின் ருசெல், இணையத் தொழில் நுட்பம் மூலம், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ)







SAAMSON
Experts in English Training
SPOKEN ENGLISH
நெல்லியடி & யாழ்நகர்
இம்முறை A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், பல்கலை புதுமுகமாணவர்கள்
தொழில்புரிவோர், ஆசிரியர்கள் வெளிநாடுசெல்வோர் இணையமுடியும்.
பாடப்புத்தகங்கள், சான்றிதழ் மற்றும் VIDEO DVD என்பன முற்றிலும் இலவசம்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 31.10.2015 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வார நாள் (திங்கள், புதன்) பிரிவுகள் ஆரம்பம் 02.11.2015
1. காலை 8.00-10.00 2. காலை 10.00-12.00
SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

# சிறுவர் பாதுகாப்பு வாரம் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஒக். 28

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டுச் சிறுவர் பாதுகாப்பு வாரம் ஒன்றை அனுஷ்டிப்பதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. 'பிரகாசமான சிறுவர் உலகுக்குப் பாதுகாப்பான நாளை' என்ற தொனிப் பொருளில் இந்த சிறுவர் பாதுகாப்பு வாரம் அனுஷ்டிக்கப்பட உள்ளது.

எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் இந்தச் சிறுவர் பாதுகாப்பு வாரம் அனுஷ்டிக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த வாரத்தில் பாடசாலை மட்டத்தில் சிறுவர் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற் றும் பாடசாலை சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல் போன்றவற்றைச் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், பாடசாலைகளுக்கு அருகில் போதை மருந்துகள் விற்பனை செய்யும் இடங்கள் தொடர்பில் தகவல்களை வழங்குமாறு பொதுமக்களை பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். பாடசாலைகள் மற்றும் பிற்பகலில் நடைபெறும் வகுப்புக்களுக்கு அருகில் போதை மருந்துகளை விற்பனை செய்வது தொடர்பாக கடந்த காலங்களில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றி ருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சமூக விரோத முறைகேடுகள் வடபகுதியிலும் தாராளமாக இடம்பெற்றுவருகின்றன. அதனைத் தடுக்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலும் போதைப் பொருள்கள் விற்பனை இன்னமும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. அவற்றைத் [illegible] னெடுத்து [illegible] ருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேர்வின் சில்வாவுக்கு எதிராக நிதி மோசடிக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.28

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கோடிக் கணக்கான ரூபா மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

களனி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் லக்ஸ்மன் விஜேசிறி மற்றும் எம்.பீ பெரேரா ஆகியோர் இந்த முறைப்பாட்டை நேற்றுமுன்தினம் செய்துள்ளனர்.

கொழும்பு நிதிக் குற்றவியல் விசாரணைப்பிரிவில் இந்தமுறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

களனி பிரதேச சபைக்கு சொந்தமான காணி ஒன்றைக் கைப்பற்றி துண்டுகளாக பிரித்து, போலி உறுதிகளைத்தயாரித்து விற்பனை செய்துள்ளதாகவும் இதன் மூலம் பெருந்தொகைப் பணத்தைச் சம்பாதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் நலனுக்காக இந்தக் காணி பயன்படுத்தப்படவிருந்தது. எனினும் பலவந்தமான அடிப்படையில் காணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. 31 காணித் துண்டுகள் தலா 25 லட்சம் ரூபா என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது என முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# இலங்கை - இந்திய கடற்படைகள் திருமலைக் கடலில் கூட்டுப்பயிற்சி

திருகோணமலை, ஒக்.28

இலங்கை - இந்தியக் கடற்படைகளுக்கு இடையிலான பெரியளவிலான கூட்டுப் பயிற்சி நேற்று திருகோணமலைக் கடற்பரப்பில் ஆரம்பமானது.

சிலிநெஸ் என்ற பெயரில், இந்திய, இலங்கைக் கடற்படைகள் ஆண்டு தோறும் கூட்டுப் பயிற்சிகளை நடத்தி வருகின்றன. இந்த ஆண்டுக்கான கூட்டுப் பயிற்சி நேற்றுத் தொடக்கம், எதிர்வரும் முதலாம் திகதி வரை திருகோணமலைக் கடற்பரப்பில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போர்ப் பயிற்சியில் பங்கேற்பதற்காக, இந்தியக் கடற்படையின் கோரா, கிர்பன் ஆகிய ஏவுகணைப் போர்க்கப்பல்கள் மற்றும் ஆழ்கடல் ரோந்துக் கப்பலான சாவித்ரி ஆகிய மூன்று போர்க்கப்பல்களும், திருகோணமலைத் துறைமுகத்தில் தரித்துள்ளன.

அத்துடன் இந்தியக் கடற்படையின் கண்காணிப்பு விமானம் ஒன்றும் இதில் பங்கேற்கவுள்ளது.

இதேவேளை, இலங்கைக் கடற்படையின் சயுர, சமுத்ர, சாகர ஆகிய போர்க் கப்பல்களுடன், இரண்டு அதிவேக பீரங்கிப் படகுகள், ஒரு ஏவுகணைப் படகு உள்ளிட்ட ஆறு போர்க்கப்பல்களும், ஆறு டோறா ரக அதிவேகத் தாக்குதல் படகுகளும், இந்தக் கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கின்றன.

அயல்நாட்டுக் கடற்படைகளுக்கு இடையில் காத்திரமான புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்தக் கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருதரப்பும் ஆற்றல்களையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளவும், பிராந்தியத்தின் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்ளவும் இந்தக் கூட்டுப் பயிற்சி பயனுடையதாக இருக்கும் என்றும் இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (வ)

## உக்கிரமடைகின்றது

நிலையில் மேற்படி கைதுகள் இடம்பெற்றுள்ளன.

மன்னார் கடற்பரப்பில் அத்து மீறியதாக 3 படகுகளுடன் 12 இந்திய மீனவர்களும், நெடுந்தீவுக் கடலில் அத்துமீறியதாக இரு படகுகளும், பருத்தித்துறைக் கடற்பரப்பில் இரு படகுகளுமாக நான்கு படகுகளுடன் 23 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் குறித்த மாவட்டங்களின் நீரியல் வளத்துறைப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுத் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட 23 மீனவர்களில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைதான 13 மீனவர்களையும் ஊர்காவற்துறை நீதவான் எஸ்.லெனின்குமாரிடம் முன்னிலைப்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், பருத்தித்துறையில் கைது செய்யப்பட்ட 10 மீனவர்களையும் பருத்தித்துறை பதில் நீதவான் உ.விஜயராணியிடம் முன்னிலைப்படுத்தியபோது அவர்களை நவம்பர் 9ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டதாக யாழ். மாவட்டக் கடற்றொழில் நீரியல் வள திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ரமேஸ் கண்ணா தெரிவித்தார்.

நேற்றைய இந்தக் கைதால் இலங்கை - இந்திய மீனவர் விவகாரம் மேலும் சிக்கலுக்குள்ளாகும் நிலையை எட்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தற்போது இலங்கைச் சிறைகளில் 121 இந்திய மீனவர்களும், இந்தியச் சிறைகளில் 28 இலங்கை மீனவர்களும் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(த-101-106-109)

## மீனவரின்

என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற மூவரில் ஒருவர் கடல் கொந்தளிப்பு மற்றும் கடும் காற்று என்பன காரணமாகக் கடலில் தூக்கி வீசப்பட்டுள்ளார்.

கடலில் வீழ்ந்தவரை ஏனைய இருவரும் சேர்ந்து தேடியபோதும் அவரைக் கண்டு பிடிக்க முடியாது கரைதிரும்பினர்.

இந்தச் சூழ்நிலையில் கடலில் வீழ்ந்து காணாமற்போயிருந்த இளைஞனின் சடலம் செம்பியன் பற்றுக் கடற்கரையில் ஒதுங்கிய நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளது. (த-108-17)

## உலகத்

என்றும் விக்கிரமபாகு கருணாரட்ணவுக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த விக்கிரமபாகு கருணாரட்ண,

அருட்தந்தை அவர்களே, உங்கள் வரவை எதிர்பார்த்துக்காத்துக்கொண்டிருக்கின்றோம் - என்று பதில் மின்னஞ்சல் அனுப்பியுள்ளார். அருட்தந்தை இம்மானுவேல், இலங்கையில்

ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக இலங்கைக்கு வரமுடியாத நிலை காணப்பட்டதால் ஜேர்மனியில் நீண்டகாலமாக வசித்துவருகிறார். புலம்பெயர் தமிழர் அமைப்புகளுடன் மிக நெருங்கிய தொடர்பைப் பேணி வந்தமையால் மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் தடை செய்யப்பட்ட 400இற்கும் மேற்பட்ட புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் பெயர்ப் பட்டியலில் அருட்தந்தை இம்மானுவேலின் பெயரும் உள்ளடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-சி)

## நீரில் மூழ்கி

பாதுகாப்பற்ற தன்மை, கடற்கரைகளில் கடலின் ஆழம் தொடர்பிலான அதன் பாதுகாப்பு எல்லையிடல்கள் குறித்த அறிவுறுத்தல்கள் இன்மை போன்ற பல காரணங்களால் நீரில் மூழ்கி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வகையான உயிரிழப்புக்களின் எண்ணிக்கையைத் தடுப்பதற்கான விழிப்புணர்வு வேலைத் திட்டங்களையும், அறிவுறுத்தல்களையும் மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு ஒவ்வொருவருக்கும் இருப்பதாகவும் சட்டவைத்திய அதிகாரி மேலும் கூறினார்.

இந்த வருடத்தில் 6 சிறுவர்கள், 18 இளைஞர்கள் மற்றும் 13 முதியவர்கள் என நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் போக்கில் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் கடந்த செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை, நாரந்தனைப் பகுதியில் உள்ள அருமைக்குட்டிக் குளத்தில் குளிக்கச் சென்ற மங்களேஸ்வரன் தனுசன் (வயது 11), சுரேஸ்குமார் விதுசன் (வயது 8) ஆகிய இரு சிறுவர்களும் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவத்தின் பின்னர் வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதிக் கடலில் நேற்று முன்தினம் காலை குளிக்கச் சென்ற இரண்டு இளைஞர்கள் நீரில் மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-ரி2)

## 4 1/2 லட்சம்

வரும் நிலையில், அவற்றை இல்லாதொழிப்பதற்கான முயற்சிகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு நிலையிலேயே, நிலங்க சமரசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் போர் முடிந்துள்ளது. இதனால் நாட்டிலுள்ள நான்கரை லட்சம் பாதுகாப்புப் படையினரையும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைக்குப் பயன்படுத்த முடியும். அவ்வாறு படையினரைப் பயன்படுத்தினால் ஆறு மாத காலத்தினுள் முழு நாட்டிலிருந்தும் போதைப்பொருளை துடைத்தெறியலாம்.

நாட்டுக்குள் ஒரு வருடத்தில் போதைப்பொருள் ஆயிரம் கிலோ கிராம் கொண்டு வரப்படுகின்றது. அதில் 50 கிலோ கிராம் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்படுகின்றது. இந்த 50 கிலோ கிராம் சுங்கப் பிரிவினால் மீட்கப்படுகின்றது. ஏனையவை பாதுகாப்புப் பிரிவினால் மீட்கப்படுகின்றன.

நாட்டுக்குள் வரும் போதைப் பொருள்களில் 80 வீதமானவை கடல் வழிப் பாதை வழியாகவே கொண்டுவரப்படுகின்றன. இதனைக் கட்டுப்படுத்த சரியான வழிமுறையொன்று இதுவரை காணப்படாமை கவலையளிக்கிறது -என்றார். (த-5)

## பொதுமன்னிப்பே

விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி, நாடு முழுவதிலும் உள்ள 14 சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 217 தமிழ் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை கடந்த 12ஆம் திகதி ஆரம்பித்திருந்தனர். இதனையடுத்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் தொடர்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தரத் தீர்வு பெற்றுத்தரப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் உறுதியளித்திருந்தார். அதேவேளை, இந்த உறுதிமொழியை சிறைச் சாலைகள் ஆணையாளர் ரோஹண புஷ்பகுமாரவுக்கு எழுத்துமூலம் ஜனாதிபதி வழங்கியிருந்தார். ஜனாதிபதியின் உறுதிமொழியை எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் கடந்த 17ஆம் திகதி தமிழ் அரசியல் கைதிகளை நேரில் சந்தித்துத் தெளிவுபடுத்தி அறிவித்ததையடுத்து தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை அவர்கள் தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தனர்.

மேற்படி உறுதிமொழிக்கு அமைவாக நவம்பர் 7ஆம் திகதிக்கு முன்னர் தமது விடுதலை விவகாரம் குறித்து நிரந்தரத் தீர்வு எட்டப்படாவிடின் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ் அரசியல் கைதிகள் எழுத்துமூலம் அறிவித்தும் இருந்தனர்.

இந்நிலையிலேயே, தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கமுடியாது என்றும், நீண்ட காலம் தடுப்பிலுள்ள கைதிகளுக்கு சட்டபூர்வமான பிணை வழங்குவது என்றும் பிரதமர் தலைமையில் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின்போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலம் தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் இந்த அரசு விடுதலை செய்யவேண்டும் என்றும், இல்லையேல் தமிழ் அரசியல்கைதிகளுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் போராட்டத்தில் குதிக்கும் என்றும் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (த-சி)

## மணல் கடத்திய

மடக்கிப் பிடித்தனர் நெல்லியடிப் பொலிஸார்.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது -

துன்னாலைப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றிக் கொண்டு சென்றுகொண்டிருந்த கன்ரர் வாகனத்தை நெல்லியடிப் பொலிஸார் இடைமறித்துள்ளனர். இதன்போது வாகனத்தை நிறுத்தாமல் சாரதி வேகமாகச் செலுத்தியுள்ளார்.

இதனை அடுத்து வீதி ஒழுங்குக் கடமையில் இருந்த இரு பொலிஸாரும் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கியதோடு குறித்த கன்ரர் வாகனத்தை துரத்திச் சென்றனர். நெல்லியடிப் பொலிஸ் நிலைய வாகனமும் இணைந்து கன்ரரைத் துரத்தியுள்ளது.

ஆயினும் பருத்தித்துறை வீதியில் கல்வியங்காடு வரை பயணித்த கன்ரர் திடீரென ஆடியபாதம் வீதி வழியாக திரும்பிப் பலாலி வீதியை அடையும்போது திருநெல்வேலிச் சந்தையின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், ஓட்டோ என்பவற்றை மோதித் தள்ளியவாறு சென்றது.

பொலிசார் விடவில்லை. தொடர்ந்து விரட்டினர். பலாலி வீதியில் பயணித்த கன்ரர் கோண்டாவில் சந்தியில் இருபாலை நோக்கித் திரும்பியவேளை வீதியோரம் நின்ற மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதனால் சாரதி வகையாக மாட்டிக்கொண்டார்.

இதனை அடுத்துச் சாரதியை கைது செய்த நெல்லியடிப் பொலிஸார் கன்ரரையும் கொண்டு சென்றனர். (த-101)

## இலங்கைக்

இலங்கைக் கடற்பரப்பில் விழவுள்ளதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இந்த மர்மப் பொருள் மூன்று தொடக்கம் 7 அடி வரை (சுமார் 2 மீற்றர்) நீளமுள்ளதாக இருக்கலாம் என்றும், இது ஏவுகணை ஒன்றின் பாகமாகவோ அல்லது சந்திரனுக்கு முன்னர் அனுப்பப்பட்ட விண்கலத்தின் பாகமாகவோ இருக்கலாம் என்று நாசாவின் நிபுணரான பில்கிரே தெரிவித்துள்ளார்.

சந்திரனுக்கு அப்பால் சுற்றிக் கொண்டிருக்கும் இந்த மர்மப் பொருளுக்கு விஞ்ஞானிகள் டபிள்யு.ரி 1190 எப் எனப் பெயரிட்டுள்ளனர்.

இந்த மர்மப்பொருள், வரும் நவம்பர் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.15 மணியளவில், இலங்கைக்கு சுமார் 40 மைல் தொலைவில் இந்து சமுத்திரத்தில் விழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது பூமியை வந்தடைய முன்னர் எரிந்து போகும் என்று நம்பப்படுகின்ற போதிலும், அந்தப் பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவதைத் தாம் விரும்பவில்லை என்றும் நாசா நிபுணர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே இந்த மர்மப்பொருள் மிகவேகமாகவும், சூடாகவும் பூமியை நோக்கி வரும் என்றும், இது ஏவுகணை ஒன்றின் இயந்திரத்தின் பாகமாக இருக்கலாம் என்றும், மற்றொரு விண்வெளி நிபுணரான ஜொனாத்தன் மக்டோவல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விண்வெளியில் சுமார் 5 இலட்சம் பல்வேறு சிதைவுகள், சுற்றிக் கொண்டிருப்பதாக நாசா விஞ்ஞானிகள் கணித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ)

## யாழில்

இந்த நிலையில் மக்களின் போக்குவரத்தில் இடையூறு காணப்பட்டது. இதனால் வீதிகளில் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

நேற்று காலை 8:30 மணி தொடக்கம் பிற்பகல் 2:30 மணி வரை 35.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளது. இந்த வருட ஆரம்பத்திலிருந்து நேற்று வரை 644.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளது. இடைநிலை பருவப் பெயர்ச்சிக் காற்று காலநிலை ஆரம்பித்துள்ளதால் பிற்பகல் வேளைகளில் இடி, மின்னல் அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. நேற்றைய சூழல் வெப்ப நிலை 23 பாகை செல்சியஸிலிருந்து - 27 பாகை செல்சியஸாகக் காணப்பட்டதாக வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

(த-10,108,ரி -4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழிவாங்கப்பட்ட இராணுவத்தினர் மீளச் சேவையில்

## இராணுவத் தளபதி உறுதியளிப்பு

கொழும்பு, ஒக்.28

மகிந்த ஆட்சியின்போது அரசியல் அழுத்தங்கள் காரணமாக திட்டமிட்ட அடிப்படையில் சேவையிலிருந்து வெளியேற்றப்பட்ட இராணுவத்தினருக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

இதன் ஓர் அங்கமாக அரசியல் பழிவாங்கலுக்குள்ளான 15 இராணுவ அதிகாரிகளை இராணுவத் தலைமையகத்துக்கு அழைத்து நேற்று முன்தினம் பேச்சு நடத்தினார்.

சந்திப்பில் கலந்துகொண்ட அதிகாரிகளை மீண்டும் இராணுவச் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன்போது இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர நேற்று உதயனிடம் உறுதிப்படுத்தினார். இனிவரும் நாள்களிலும் இவ்வாறான சந்திப்புக்கள் இடம்பெறவுள்ளன என்றும் தெரிவித்தார்.



மகிந்த ஆட்சியின்போது, முன்னாள் இராணுவத் தளபதிக்கு நெருக்கமாகச் செயற்பட்ட படை அதிகாரிகள் சிலர் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (டு)

## படையினருக்கு எதிரான விசாரணை: இராணுவத்துக்கு எதுவும் தெரியாது

### ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவிப்பு

பரணகம மற்றும் உடலகம ஆணைக்குழு அறிக்கைகள் இராணுவத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தவேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ள நிலையில், இந்த விடயம் தொடர்பில் இராணுவத்துக்கு இதுவரை தெளிவுபடுத் தப்படவில்லை என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்தார்.

இந்த விவகாரம் இன்னமும் இராணுவத்தினரின் மட்டத்துக்கு கொண்டுவரப்படவில்லை என்பதால், அமைச்சரவைப் பேச்சாளரிடமே இது குறித்து வினவவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பரணகம மற்றும் உடலகம ஆணைக்குழுக்களின் அறிக்கைகளானவை இராணுவத்துக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளதுடன், அது குறித்து விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என்றும், சனல் -4 ஆவணப்படம் குறித்தும் விசாரிக்கவேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளன.

இந்தநிலையில், இது விடயம் தொடர்பில் இராணுவம் எவ்வாறான அவதானத்தைக் கொண்டுள்ளது என்பது தொடர்பில் வினவியபோதே இராணுவ ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

**கேள்வி:** பரணகம மற்றும் உடலகம ஆணைக்குழுக்களின் அறிக்கையில் இராணுவத் தரப்பு மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அவை குறித்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் இராணுவம் அவதானம் செலுத்தியுள்ளதா?

**பதில்:** இது தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளரிடம்தான் கேட்கவேண்டும். ஏனெனில், நாம் கருத்துக் கூறுவதற்காக இது இராணுவத்தினரின் மட்டத்துக்கு வரவில்லை. இன்னமும் பேச்சுக்குட்படுத்தப்படும் வகையில்தான் உள்ளது. அதனால், அமைச்சரவைப் பேச்சாளரிடம் இதைப் பற்றிக் கேட்பது சிறந்தது.

**கேள்வி:** சனல்-4 ஆவணப்படம் பொய்யானது என கடந்த அரசும், இராணுவமும் குறிப்பிட்டிருந்தன. இவ்வாறான நிலையில், முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவானது சனல் -4 ஆவணப்படத்தைஏற்றுக்கொண்டுள்ளதுடன், அது குறித்து விசாரணை நடத்தவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளதே?

**பதில்:** சனல் -4 காணொலியில் இராணுவத்தினர் இருக்கின்றார்களா என அது தொடர்பான காட்சிகளை நாம் ஆராய்ந்து பார்த்தோமே. அதை நாம் செய்தோம். இதுபற்றி தற்போதைய அளவில் நாம் கருத்து எதனையும் குறிப்பிடமுடியாது. அவ்வாறு ஏதும் இருப்பின் ஊடகங்களுக்கு நாம் தெளிவுபடுத்துவோம். விசேடமாக எதனையும் குறிப்பிட நான் அறிவுறுத்தப்படவில்லை. தேவையேற்படின், ஊடக அறிக்கையினூடாக ஊடகங்களை நாம் நிச்சயமாகத் தெளிவுபடுத்துவோம்.

**கேள்வி:** சாதாரணமாக இராணுவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் எனக் குறிப்பிடும்போது அது குறித்து கவனம் செலுத்தவேண்டுமல்லவா?

**பதில்:** அதுபற்றி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விளக்கமளித்து,ஓர் அறிவிப்பை நான் விடுக்கின்றேன். இது தொடர்பில் இன்னமும் எமக்கு தெளிவுபடுத்தப்படவில்லை.

**கேள்வி:** இராணுவத்துக்கு தெளிவுபடுத்தப்படவில்லையா?

**பதில்:** நாம் இதுதொடர்பில் காரணங்களை ஆராய்ந்துள்ளோமே? இது பற்றி ஆராய்ந்து கூறுகின்றேன்.

**கேள்வி:** பரணகம ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் இராணுவத்தினரால் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா?

**பதில்:** இது இன்னமும் நாடாளுமன்ற அளவில்தானே பேச்சில் உள்ளது. இராணுவத்தின் மட்டத்துக்கு இன்னும் வரவில்லை. அதனால், இது தொடர்பில் தற்போது என்னால் கருத்தெதனையும் வெளியிட முடியாது. தேவை யேற் படின் ஆராய்ந்து பார்த்துக் கூறுகின்றேன்.

**கேள்வி:** இராணுவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதே. அதைப்பற்றி நான் கேட்கின்றேன்?

**பதில்:** இன்னமும் இது தொடர்பில் எமக்கு தெளிவு படுத்தப்படவில்லை - கூறினார் இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர. (கு-சி)

## உள்ளூராட்சித் தேர்தலில் சு.க. தனித்தா? இணைந்தா?

### பங்காளிக் கட்சிகளுடன் பேசவுள்ளார் மைத்திரி

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடுவதா? அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிடுவதா? என்பது குறித்து கூட்டணியில் இணைந்துள்ள ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களுடன் பேச்சு நடத்த சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆயத்தமாகி வருவதாகச் சுதந்திரக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் சுதந்திரக் கட்சி தனியாகத்தான் போட்டியிட வேண்டுமெனவும், கூட்டுச் சேர்ந்துதான் போட்டியிடவேண்டும் எனவும் தற்போது சுதந்திரக் கட்சிக்குள் யோசனைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும், இது குறித்து இதுவரை சுதந்திரக் கட்சியின் சரியான நிலைப்பாடு தெரிவிக்கப்படவில்லை. விரைவில் கட்சியின் மத்திய செயற்குழுவைக் கூட்டி இது குறித்து இறுதித் தீர்மானமொன்றை எடுப்பதில் கட்சியின் கவனம் திரும்பி இருப்பதாகச் சுதந்திரக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறான போதிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய சுதந்திர முன்னணி, பொதுசன ஐக்கிய முன்னணி, பிவிதுரு ஹெல உறுமய, ஜன நாயக இடதுசாரிகள் முன்னணி, சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, தேச விடுதலை மக்கள் கட்சி ஆகிய கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் சில ஒருங்கிணைந்து கூட்டணியொன்றை உருவாக்கும் செயற்பாடுகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்வரும் தேர்தலில் தனியாகப் போட்டியிடுமானால் அந்தக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு மேற்குறிப்பிட்ட கட்சிகள் திட்டமிட்டு வருகின்றன. (கு-22)

## கராத்தே ஆசிரியர் படுகொலை; படை அதிகாரிக்குத் தொடர்பு

கொழும்பு, ஒக்.28

கின்னஸ் சாதனையாளரான கராத்தே ஆசிரியர் வசந்த சொய்சா (வயது - 57) கூரிய கத்தியால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் 8பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தப்படுகொலைக்கு முன்னாள் படைத்தரப்பு அதிகாரியொருவரே திட்டம் வகுத்துக் கொடுத்துள்ளார் என்று-பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்தநிலையில், சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்காக ஐந்து பொலிஸ் குழுக்கள் தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளன.

அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதித்தா மாவத்தைப் பகுதியில் அமைந்திருந்த இரவுநேர விடுதியொன்றுக்குள் கடந்த சனியன்று இரவு 11.30 மணியளவில் 25 பேரடங்கிய ஆயுததாரிகள் கும்பலொன்று திடீரென நுழைந்தது.

முகத்தை மூடிக்கொண்டு, ஒரே மாதிரியான ஆடைகள் அணிந்து கொண்டு இவ்வாறு நுழைந்த கும்பல், அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனம் உட்பட மேலும் பல பொருள்களுக்குப் பொல்லுகளால் அடித்து சேதம் விளைவித்தனர். இதன்போது பெற்றோல் குண்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டது.

சி.சி.ரி.வி. கமரா மூலம் இதைக் கண்ட ஹோட்டல் உரிமையாளரான வசந்த சொய்சா வெளியே வந்துள்ளார். இதன்போதே அவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். அத்துடன், ஹோட்டல் முகாமையாளர், ஊழியர்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்த மூவர் அநுரா தபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவத்தின் பின்னர், கராத்தே ஆசிரியரை அவரது மகன் அநுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். எனினும், அவர் உயிர்பிழைக்கவில்லை.

இந்தநிலையில், சம்பவம் குறித்துப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் துரிதமாகச் செயற்படத் தொடங்கினர். இதுவரை பலரிடம் வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளன. இதன் அடிப்படையிலேயே 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், 15 பேருக்கு வலைவிரிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் பிரபல கராத்தே பயிற்சிவிப்பாளராவார். அவர் ஆலோசகராகவும் செயற்பட்டு வருகின்றார். பல உலக சாதனைகளைப் படைத்துள்ளார். உலக சாதனை படைத்து கின்னஸ்புத்தகத்திலும் இடம்பிடித்துள்ளார். (டு)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்



யாழ்ப்பாணம், ஒக். 28
யாழ். மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர் சபையினால் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் பொ. விபுலானந்தன் ஞாபகாரத்த கிண்ணத்துக்காக நடத்தப்படும் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறும் அரையிறுதியாட்டங்களில் பிற்பகல் 3மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் திருக்குடும்பகன்னியர்மட அணியை எதிர்த்து வேம்படி மகளிர் கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 4 மணி க்கு இடம்பெறும் ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் மல்லாவி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

## தடகளத் தொடர்

யாழ்ப்பாணம், ஒக். 28
வடமாகாண விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான மாவட்டங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் எதிர்வரும் 31ஆம் திகதியும் 1 ஆம் திகதியும் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

# யாழ். மத்தி-கொத்தலாவல கல்லூரி அணிகளின் மோதல்

யாழ்ப்பாணம், ஒக். 28
அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான பிரிவு 3ற்கான சுப்பர் அணிகளுக்கான கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இன்னிங்ஸ் ஆட்டம் ஒன்று கடந்த வாரம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது. இதில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து குருநாகல் ஜோன் கொத்தலாவல கல்லூரி அணி மோதிக்கொண்டது.

முதலில்துடுப்பெடுத்தாடிய குருநாகல் ஜோன் கொத்தலாவல கல்லூரி அணி 59பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சந்திக்க பிரியமால் 67 ஓட்டங்களையும், ஜியாஸ் அக்மல் 21ஓட்டங்களையும், சேனாரத்ன 15ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து .வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் கிருபாகரன் 4 இலக்குகளையும், தசோபன் 3 இலக்குகளையும்,ஸ்ரிபன்ராஸ், அலன்ராஜ், மதுன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும், வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 68 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 360 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கிருபாகரன்124 ஓட்டங்களையும், டினோஜன் 77ஓட்டங்களையும், பிரயலக்சன் 38ஓட்டங்களையும், கார்த்தீபன், 38ஓட்டங்களையும், ஸ்ரிபன்ராஸ் 24 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் குருநாகல் ஜோன் கொத்தலாவல கல்லூரி அணி சார்பில் பெரேரா 3 இலக்குகளையும், பொன்சேகா, அபயசிங்க, அக்மல், பிரியமால், ஜெயசிங்க ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.



மழை பெய்ததால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. (கு-23)



லண்டனில் வசிக்கும் கபிலன் அவர்களால் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் கிரிக்கெட் அணிக்காக பந்துவீசும் இயந்திரம் ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. (ம-23)

## கொக்குவில் இந்து வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.28
யாழ்.மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினரால் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் ஆண், பெண் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெற்று வருகின்றது.

அதில் நேற்று இடம் பெற்ற பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் யாழ்.இந்துமகளிர்கல்லூரிஅணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, 60:50 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது. (கு-23)

# பிபா தலைவர் தேர்தல்: எட்டுப் பேர் வேட்புமனு



சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் (பிபா) தலைவர் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று முன் தினம் திங்கட்கிழமையுடன் நிறைவடைந்துள்ள நிலையில் அதிகாரபூர்வமாக எட்டுப் பேர் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஜோர்தான் இளவரசர் அலி பின் அல் ஹுசைன், ஐரோப்பிய உதைபந்தாட்டச் சபைத் தலைவர் மைக்கல் பிளாட்டினி, ஓமானின் பிரான்ஸ் தூதுவரான ஜெரோம் சாம்பெய்ன், உள்ளிட்ட எட்டு அதிகாரிகள் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர்.

அதன்படி எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பிபா தலைவர் தேர்தலில், ஜோர்தான் இளவரசர் அலி பின் அல் ஹுசைன் போட்டியிடவுள்ளார். 39 வயதுடைய அலி- பின் அல் ஹுசைன், கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் பிபா செயற்குழுவில் இடம்பெற்றுள்ளார். இவர் இந்த வருடம் இடம்பெற்ற பிபா தலைவர் தேர்தலில் செப் பிளாட்டரை எதிர்த்து போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

இரண்டாவது வேட்பாளராக ஐரோப்பிய உதைபந்தாட்டச்சபைத் தலைவர் மைக்கல் பிளாட்டினி வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தார். இவர் வேட்புமனுத்தாக்கல் செய்து சில மணி நேரங்களில் பிபா நெறிமுறைக் குழுவினால் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார். கடந்த 2011 ஆம் ஆண்டு எவ்வித எழுத்துமூல ஆதாரங்களும் இன்றி சுமார் 2 மில்லியன் டொலர் நிதியைப் பெற்றுக் கொண்டதாக குற்றம் சாட்டப்பட்டு 90 நாள்களுக்கு பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அடுத்து குறித்த தேர்தலுக்கான வேட்புமனுவை ஓமானின் பிரான்ஸ் தூதுவரான ஜெரோம் சாம்பெய்ன் பதிவு செய்துள்ளார். கடந்த 1999 ஆம் ஆண்டு பிபாவில் இணைந்து கொண்ட இவர், செப் பிளாட்டரின் கீழ் துணைப் பொதுச் செயலாளராகக் கடமையாற்றியிருந்தார்.

மேலும் டேவிட் நக்கிட், இனவெறிக்கு எதிரான தென்னாபிரிக்க பிரசாரகர் டோக்கியோ செக்ஸ்வேல், சல் மான் பின் ப்ராஹிம் அல் கலிபா, வழக்கறிஞரும் ஐரோப்பிய கால்பந்து சபையின் முன்னாள் பொதுச் செயலாளருமான சியானி இன்பான்டினோ மற்றும் லைபீரிய [illegible] தாட்டச் சங்கத்தின் தலைவர் [illegible] பெலிற்றி ஆகியோர் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர். (இ)

## அமித் மிஸ்ராவுக்கு பிணை

தோழியை தாக்கியதாக முறைப்பாடு வழங்கப்பட்ட இந்திய சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா நேற்றுச் செவ்வாய்க்கிழமை பெங்களூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் பயிற்சிக்காக பெங்களூர் சென்றிருந்த அமிஸ் மிஸ்ரா தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்றிருந்த தோழி ஒருவருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தினால் குறித்த பெண்ணைத் தாக்கியதாக அசோகா நகர் பொலிஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இது குறித்து மிஸ்ராவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது. இந்த அழைப்பாணைக்கு ஏற்ப மூன்று மணிநேர விசாரணைக்குப் பின்னர் நேற்று கைது செய்யப்பட்ட அமித் மிஸ்ரா பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

அவர் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பெண்ணைத் தாக்குதல் மற்றும் காயம் ஏற்படுத்தும் நோக்கில் குற்றம் புரிதல் உள்ளிட்ட குற்றச் சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(கு)



# கிண்ணம் உருத்திரபுரத்திடம்

யாழ்ப்பாணம், ஒக். 28
புதுமுறிப்பு உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்திய விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை புதுமுறிப்பு உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தை சொந்தமாக்கியது. (ம-23)





நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட விளையாட்டு மைதானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. குறித்த விளையாட்டு மைதானத்தை நானாட்டான் பிரதேச செயலாளர் என்.பரமதாஸ், தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ. குணசீலன் ஆகியோர் திறந்து வைத்தனர். (ம-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடி வாங்கினாலும் அசையாத இந்தியா

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் சிறந்து விளங்கும் அணிகள் மற்றும் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை டுபாயில் வெளியிட்டது.

இதில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரை இழந்த நிலையிலும் இந்திய அணி 2ஆவது இடத்தில் தொடர்கிறது.

தென்னாபிரிக்கா அணி 112 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும், ஆஸ்திரேலியா 127 புள்ளிகளுடன் முதலிடத்திலும் நீடிக்கிறது.

மேலும் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் தென்னாபிரிக்க அணித்தலைவர் டிவில்லியர்ஸ் முதல் இடத்தை தக்க வைத்துக் கொண்டார்.

இந்திய துணை அணித்தலைவர் விராட் கோஹ்லி 3ஆவது இடத்தில் இருந்து 2ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இந்திய அணித்தலைவர் டோனி 6ஆவது இடத்திலும், ரோஹித் 12 ஆவது இடத்திலும், ரஹானே 27 ஆவது இடத்திலும் முன்னேற்றம் கண்டுள்ளனர். தொடக்க வீரர் ஷிகர் தவான் 7ஆவது இடம் பிடித்தார்.

தென்னாபிரிக்க வீரர்களான டுபிளசி, குயிண்டன் டி கொக் 10ஆவது இடத்தைப் பகிர்ந்து கொண்டனர். தொடக்க வீரர் அம்லா 5ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார். பெகார்டியன் 76ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

பந்துவீச்சாளருக்கான தரவரிசைப் பட்டியலில் ஆஸ்திரேலியாவின் மிட்செல் ஸ்டார்க் மீண்டும் முதலிடம் பிடித்தார். தென்னாபிரிக்கா சுழற்பந்து வீச்சாளர் இம்ரான் தாகிர் 5 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்.

தவிர மற்ற தென்னாபிரிக்க பந்து வீச்சாளர்களான ஸ்டெய்ன் 6ஆவது இடத்திலும், மோர்கல் 8ஆவது இடத்திலும் உள்ளனர். ரபாடா 49ஆவது இடம் பிடித்துள்ளார்.

இந்திய பந்து வீச்சாளர்களில் காயத்தால் பாதிக்கப்பட்டுள்ள அஸ்வின் 10ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். மொகித் சர்மா 44ஆவது இடத்தில் உள்ளார். அக்சர் (28ஆவது இடம்), மிஸ்ரா (32ஆவது இடம்) முன்னேற்றம் கண்டுள்ளனர். (நி)

# 200 மில்லியன் யூரோ செலவில் லோட்ஸ் மைதானம் அபிவிருத்தி



இங்கிலாந்து லோட்ஸ் கிரிக்கட் மைதானம் 200 மில்லியன் யூரோ செலவில் மீள் அபிவிருத்தி செய்யப்பட்டு புதிய பரிமாணம் பெறவுள்ளது.

உலகின் மிகப்பிரபலமான கிரிக்கட் மைதானமான இந்த லோட்ஸ் மைதானம் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஆஷஸ்தொடரின்போது புதிய தோற்றத்துடன் தயாராக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த புதுப்பிக்கும்திட்டத்தில் 1935ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அலன் அரங்கு, 1960 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட டேவன் அரங்கு இரண்டும் இடிக்கப்படவுள்ளது. மேலும் புதிய திட்டத்தில் இரு உணவகங்கள் மற்றும் பார்வையாளர்கள் இருக்கைகள் ஆகியன அதிகரிக்கப்படவுள்ளன. சுமார் 30 ஆயிரத்து 530 பார்வையாளர்களை உள்ளடக்கக் கூடியதாக இது அமையவுள்ளது.

வீரர்கள் ஓய்வு அறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் மீள் அபிவிருத்தியின் போது கவனிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# இந்தியன் பிரீமியர் லீக்கின் புதிய இலச்சினை வெளியீடு




புதிய டைட்டில் அனுசரணையாளர் விவோவுடனான ஐ.பி.எல் புதிய இலச்சினை நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி ஒன்பதாவது ஐ.பி.எல் போட்டிகள் விவோ ஐ.பி.எல் என அழைக்கப்படவுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐ.பி.எல் போட்டிகளின் டைட்டில் அனுசரணையாளராக இருந்த பெப்சி நிறுவனம் அண்மையில் வெளியேறியது. 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல் சூதாட்டத்தினால் கிரிக்கட் மதிப்பிழந்துள்ளதாகத் தெரிவித்து தனது அனுசரணையிலிருந்து விலகியது.

இதனையடுத்து சீனாவின் ஸ்மார்ட் போன் நிறுவனமான விவோ எதிர்வரும் இரு ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான வங்கி உத்தரவாதம் கடந்தவாரம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் எதிர்வரும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுக்கான புதிய ஐ.பி.எல் இலச்சினை நேற்று வெளியிடப்பட்டது.

எதிர்வரும் இரு ஐ.பி.எல் போட்டிகளிலும் விவோ மற்றும் ஐ.பி.எல் இரண்டும் விளையாட்டு நிகழ்வுகள், மைதான செயலாக்கங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரசாரங்களில் விரிவான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது. (நி)

# 2017 ஆசிய தடகளம் இந்தியாவில் நடக்கும்

2017 ஆம் ஆண்டுக்கான ஆசிய தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் இந்தியாவில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற ஆசிய தடகள சம்மேளனத்தின் 83ஆவது கூட்டத்தொடரில் 2017 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 22 ஆவது ஆசிய தடகள சம்பியன்ஷிப் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் போட்டி நடைபெறும் அதிகாரப்பூர்வமான அறிவிப்பு எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் டோஹாவில் நடைபெறவுள்ள கூட்டத்தில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்படி 2017ஆம் ஆண்டு ஆசிய தடகள போட்டிகள் ராஞ்சியில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் ஆசிய தடகளப் போட்டிகள் கடந்த 1989 ஆம் ஆண்டு டெல்லியிலும், 2013ஆம் ஆண்டு புனேயிலும் நடைபெற்றிருந்த நிலையில் மூன்றாவது முறையாக இந்தியாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ரவி சாஸ்திரி மீது விசாரணை



இந்திய கிரிக்கட் அணியின் இயக்குநர் ரவிசாஸ்திரி தவறான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தியதாக மும்பை வான்கடே மைதான ஊழியர் சுதிர் நாயர் வழங்கிய முறைப்பாடு தொடர்பில் எதிர்வரும் 30 ஆம் திகதி மும்பை கிரிக்கட் சங்க நிர்வாகக் குழு ஆலோசனை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் மும்பை கிரிக்கட் சங்கச்செயலாளர் பி.விசெட்டியினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான 5 ஆவது ஒருநாள் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் தென்னாபிரிக்க துடுப்பாட்ட வீரர்கள் மூவர் சதமடித்தனர். அத்துடன் 214 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா அபார வெற்றி பெற்றது.

இப்போட்டி நடைபெற்ற வான்கடே மைதானம் துடுப்பாட்டத்துக்கு சாதகமாக அமைந்ததால் பந்து வீச்சாளர்களால் எதையுமே சாதிக்க முடியாமல் போனது.

இந்நிலையில் கோபமடைந்த இந்திய அணி இயக்குநர் ரவி சாஸ்திரி, மற்றும் பந்து வீச்சுப் பயிற்சியாளர் அருண் ஆகியோர், ஆடுகளப் பராமரிப்பாளர் சுதிர் நாயக்கிடம் கடும் வாக்குவாதம் செய்ததாகக் கூறப்படுகிறது. இந்த விவகாரம் தொடர்பில் சுதிர் நாயக் மும்பை கிரிக்கட் சங்கத்தில் முறைப்பாடு வழங்கியதைத் தொடர்ந்து தற்போது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. (நி)

# சரியான திட்டங்கள் டோனியிடம் இல்லை




இந்திய அணித் தலைவர் டோனிக்கு சரியான திட்டத்தைச் செயல்படுத்தும் திறன் இல்லை என்று கவாஸ்கர் குற்றம் சாட்டியுள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

இதில் ரி20 தொடரை கைப்பற்றிய தென்னாபிரிக்க அணி, இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரையும் 3-2 என்ற கணக்கில் வென்றது.

அதிலும், மும்பையில் நடந்த கடைசி ஒருநாள் போட்டி இந்திய அணிக்கு பெரிய அடியாக அமைந்து விட்டது. இந்நிலையில் இந்திய அணித்தலைவர் டோனியிடம் சரியான திட்டம் இல்லை என்றும், திட்டங்களைச் செயல்படுத்தும் திறமையும் இல்லை எனவும் முன்னாள் தலைவர் கவாஸ்கர் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், அவர் கூறுகையில், முன்பு டோனியிடம் பந்துவீச்சில் மாற்றம் செய்யும் திட்டங்கள் சிறப்பாக இருக்கும். ஆனால் இந்தப் போட்டியில் ஒட்டு மொத்த பந்து வீச்சாளர்களும் சொதப்பி விட்டனர்.

வான்கடே ஆடுகளம் நல்ல திருப்பம் தரக் கூடியது. ஆனால் அந்த சூழலுக்கு ஏற்ப நமது பந்து வீச்சாளர்கள் திறமையாகச் செயல்படத் தவறிவிட்டனர்.

இந்திய பந்துவீச்சாளர்கள் ரி20, ஒருநாள் தொடரில் எந்த அளவு மந்தமாகச் செயல்பட்டனர் என்பது அனைவருக்கும் தெரியும். இந்திய அணியில் பந்துவீச்சுப் பிரிவு அந்த அளவுக்கு மோசமாக உள்ளது என்று கூறியுள்ளார்.

மேலும், இந்திய அணியில் அஸ்வின் இல்லாதது பேரிழப்பாக மாறிவிட்டது என நினைக்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீற்றர்சனின் கனவு அணியில் இடம்பெற்றார் சங்கா

இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரான பீற்றர்சன் அவரது பார்வையில் சிறந்த வீரர்களைத் தெரிவுசெய்து கனவு அணியொன்றை அறிவித்துள்ளார். குறித்த அணியில் இலக்குக் காப்பாளராகவும் ஐந்தாம் நிலை வீரராகவும் சங்கா இடம் பெற்றுள்ளார்.

டோனி, கோக்லி, ராவிட், கங்குலி மகெல, மிச்செல் ஜோன்சன், குக், பெல், ரூட், மக்கலம், வில்லியம்சன், மலிங்க போன்ற பிரபல்யமான வீரர்கள் இடம் பெறவில்லை. கில்கிறிஸ்ட், கலிஸ் ஆகியோரை பீற்றர்சன் தெரிவுசெய்திருந்தாலும் சிறந்த ஆரம்ப வீரர்களாக சச்சின், சேவாக் இருவரையுமே அவர் குறிப்பிட்டுள்ளார். பீற்றர்சனின் அணிக்கு வோர்ண் தலைவராகவும் கில்கிறிஸ்ட் உபதலைவராகவும் உள்ளனர். பீற்றர்சனின் கனவு அணி - சச்சின், சேவாக், பொண்டிங், கலிஸ், சங்கக்காரா (இலக் குக் காப்பாளர்), பிளிண் டொப், சேன் வோர்ன் (அணித் தலைவர்), கில் கிறிஸ்ட் (துணைத் தலைவர்), அண்டர்சன், மெக்ராத், அக்தர். (ம)

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
Honda Road Master CD 200
விற்பனைக்கு உண்டு.
விலை ரூ.375000
தொடர்பு:- 077 360 4934
(65604)(11,15,17)



# சானியா ஜோடி அசத்தல் வெற்றி

தரவரிசையில் முதல் 8 இடங்களில் உள்ள வீராங்கனைகள் பங்கேற்கும் உலக மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடந்து வருகிறது.

இதில் நேற்று முன் தினம் நடந்த மகளிர் இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா (இந்தியா)-மார்ட்டினா ஹிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) ஜோடி 6-4, 6-2 என்ற நேர் செட்டில் அமெரிக்காவின் கோப்ஸ் ஜோன்ஸ்-அபிகைல் ஸ்பியர்ஸ் இணையை தோற்கடித்தது.

அதே போல் ஒற்றையர் ஆட்டம் ஒன்றில் 3ம் நிலை வீராங்கனை கார்பின் முகுருஜா (ஸ்பெயின்) 6-3, 7-6 (7-4) என்ற நேர்செட்டில் செக் குடியரசு வீராங்கனை சபரோவாவைத் தோற்கடித்தார்.

மற்றொரு ஆட்டத்தில் ஜேர்மனி வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பர் (ஜேர்மனி) 6-2, 7-6 (7-3) என்ற நேர்செட்டில் கிவிடோவாவை (செக் குடியரசு) வீழ்த்தினார்.(கு)

17 ஆம் ஆண்டு நினைவலைகள்
அமரர் இராசசிங்கம்
உதயகுமாரன்
(ஆசிரியர் மு/ வள்ளிபுனம் ம.வி)



மூச்சை நினைவாய் மாற்றிவிட்டோம்
மூளும் தீயை தோற்றுவிட்டோம்
நீச்சல் தெரியா தெங்களுக்கு- உன்
நினைவை படகாய் மாற்றிவிட்டோம்

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்
மற்றும் உறவினர்கள்
இல. 144/6,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
4 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு

தோற்றம் 19.03.1964
மறைவு 28.10.1998

அமெரிக்க லொத்தர் விசா
நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
இன்றும் 2 நாளில் பதிவுகள் நிறைவடைகின்றன.
V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226241
கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892
வல்வெட்டித்துறை 0776697960

1942
தூய நீர் வாழ்க்கைக்கு ஆரோக்கியத்தை வழங்கிடும்

ஆசனிக், கட்மியம் போன்ற பாரமான உலோகங்கள் மற்றும் நீரில் கரைந்திருக்கும் துணிக்கைகள் மற்றும் புளோரைட் ஆகியவற்றை அகற்றும் உலகின் முன்னணி நீர் தூய்மையாக்கும் சாதனங்கள், 70 ஆண்டுகளாக மக்களின் நம்பிக்கையை வென்ற St.Anthony's நிறுவனத்தின் உத்தரவாதத்துடன்

KENT GRAND+
இல்லங்களுக்கான நீர் தூய்மையாக்கல் சாதனம்

aura
தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்துறைகள் ஆகியவற்றுக்கான தூய்மையாக்கல் சாதனம்




ரூ. 39,900/-
ரூ. 187,058/-

NSF Certificate WQA Gold Seal ISO Certificate

St.Anthony's Consolidated
516, Sri Sangaraja Mw, Colombo 10.
www.stanthonys.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# புதன் பொய்கை

உதயன்

28 ஒக்ரோபர் 2015 புதன்கிழமை


சிறு குழந்தையின் வேடிக்கைப் பேச்சைக் கேட்டு நமக்குச் சிரிப்பு வருகிறது. ஆயினும், அந்தப் பேச்சிலே எத்தனையோ ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன.

—காண்டேகர்

# அகம்பாவத்தை ஒதுக்கி விடு


உடுவிலூர் கலா

குடும்பம் முதல் குவலயம் வரை பரந்து வியாபித்திருக்கும் பெண்ணின் சேவைகள் மகத்தானவை. எதிர்ப்பால் இனத்தவர்க்கும், எனைய ஜீவராசிகளுக்கும் மிகவும் வேண்டப்படுபவை. பெண் என்பவள் பொறுமை, தியாகம், விட்டுக்கொடுப்பு, இரக்கம் என்பவற்றின் முழுவடிவம். பெண்மையின் கனிந்த வடிவம் தாய்மை. ஐந்தறிவு விலங்குகளும் சரி, ஆறறிவு மனிதரும் சரி தாய்மையில் தான் உதய தரிசனம் உருவாகிறது. பெண்களாய்ப் பிறந்த அனைவருமே தமக்கென ஒவ்வொரு தனித்துவம் மிக்கவர்கள். ஆண்களை அன்பால் ஆளுமை செய்யும் திறன் கொண்டவர்கள். பெண்ணின் அன்பு என்பது அகிலத்தையே ஆளும்சக்தி கொண்டது.

அன்று வீட்டுக் கைதிகளாகத் தம்மை அர்ப்பணித்துச் சேவை செய்தவர்கள், இன்று அதீத வளர்ச்சியடைந்து எங்கும் தமது திறமைகளை வெளிக்காட்டிச் சேவை செய்கின்றனர். பெண்களின் வளர்ச்சிக்கும், பணிநிலை முன்னேற்றத்துக்கும் அத்திபாரமாக அமைவது கல்வி ஒன்றே. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு... எனும் ஆணாதிக்க அடக்குமுறைக் கேள்விக்கு, "சட்டங்கள் ஆள்வதும் பட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" எனத் தமது கல்வி மூலம் பதிலடி கொடுத்துள்ளனர். "மங்கையராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டும்" என்று பெண்ணின் பெருமைகளை நன்குணர்ந்த பாரதி கவி வடித்துள்ளார். பெண் கல்வியைப் பெற்றுக்கொண்டால் சந்ததி கல்வியில் திளைக்கும். தாம் கற்ற கல்வியின் துணைகொண்டு எதிர்காலச் சமுதாயத்தையே உருவாக்குகின்றனர் பெண்கள்.

இயற்கை பெண்ணுக்கு அளித்த மாபெரும் சக்தி தாய்மை. பெண்மையின் பூரணத்துவமான தாய்மையால் எதிர்கால தலைமுறையை அழகாக, திடகாத்திரமாக உருவாக்க முடிகிறது. பெண், சக்தியானது தெய்வசக்தியாகும். இதனாலேயே பெண் தெய்வத்துக்குச் சமனாகப் போற்றப்படுகின்றாள். அரவணைக்கும் ஆத்ம சக்தியாகி, படைக்கும் பிரம்மாவாகி, குடும்பத்துக்கு ஒளியேற்றும் சுடராகி, சமுதாயத்தை உருவாக்கக் கருப்பொருளாகும் பெண்ணின்

**இயற்கைப் பெண்ணுக்கு அளித்த மாபெரும் சக்தி பெண்மை. பெண்மையின் பூரணத்துவமான தாய்மையால் எதிர்கால தலைமுறையை அழகாக, திடகாத்திரமாக உருவாக்க முடிகிறது. பெண் சக்தியானது தெய்வ சக்தியாகும். இதனாலேயே பெண் தெய்வத்துக்குச் சமனாகப் போற்றப் படுகின்றாள்.**



பெருமை சொல்லும் தரன்று. ஆணின் துணையின்றி பெண்களால் வாழ முடியும். ஆனால், பெண்ணின் துணையின்றி ஆண்களால் வாழமுடிவதில்லை. ஆண் ஆணாக வாழவேண்டுமெனில், பெண்ணின் அரவணைப்பும் அன்பும் கட்டாய தேவையாகின்றது.

இன்று வளர்ச்சியின் உச்சியில் பெண்கள் நின்றபோதும் பல பெண்கள் வேதனையோடும் கண்ணீரோடும் தான் வாழ்கின்றனர். ஆணாதிக்க வன்முறைகளும், சமுதாயத்தின் பார்வைகளும் மட்டுமல்லாது, பெண்களின் அகம்பாவமும் அவர்களது கண்ணீருக்குக் காரணமாகின்றன. இறைவனின் கருணையைக் கொடையாகப் பெற்றுக் கொண்ட பெண்கள், அதனை உரிய வழியில் பயன்படுத்தாமல், வேதனையோடு வாழ்கின்றனர். கல்வியானது பெண்ணடிமைத் தனத்தின் அடிமைத்தளையை அறுத்தெறிகின்ற கூராயுதம். கல்வி முழுமையான வாழ்வைக் கொடுக்கிறது. அரவணைக்கும் சக்தியையும், அனுபவிக்கும் பண்டங்களையும், மன உறுதியையும், மறந்தும் தவறிழைக்காத மன நிலையையும் கொடுக்கிறது கல்வி. அத்தோடு புரிந்துணர்வையும், பிரச்சினைகளை எதிர்கொள்ளும் திறனையும், எதிரிகளிடமிருந்து பாதுகாக்கும் தன்மையையும் கல்வி ஏற்படுத்துகிறது. அத்துடன் கல்வியியலாளர்களின் சகவாசத்தையும் ஏற்படுத்துகின்றது.

(B பக்கம் பார்க்க.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விழுங்கப்பட்ட விதைகள்" கவிதை நூல் அறிமுகம்




கவிஞரும், எழுத்தாளரும், ஊடகவியலாளரும், சூழலியலாளருமான தி. திருக்குமரன் என்பவரால் எழுதப்பட்ட 'விழுங்கப்பட்ட விதைகள்' மற்றும் 'தனித்தி ருத்தல்' ஆகிய கவிதை நூல்களின் அறிமுக நிகழ்வு சுவிற்ஸர்லாந்து சூரிச் மாநகரில் எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இலக்கிய ஆர்வலர் சிவமோகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இலக்கியவாதிகளான 'கங்கைமகன்' நயினை சிறி, தயா நாகரட்ணம் ஆகியோரும் – ஊடகவியலாளர் களான சண் தவராஜா, கனகரவி, க. சிவகுமார் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவர். திருக்குமரன் கவிதைகள் என்ற கவிதை நூலையும், சேதுக்கால்வாய்த் திட்டம் – ஓர் இராணுவ, அரசியல், சூழலியல் நோக்கு என்ற ஆய்வுநூலையும் படைத்துள்ள திருக்குமரனின் கவிதை நூல்கள் இங்கிலாந்து, ஜேர்மனி, இந்தியா ஆகிய நாடுகளைத் தொடர்ந்து தற்போது சுவிஸ் நாட்டிலும் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சண் தவராஜா**

# எதிர்காலத்தின் மாற்றம் இணையவழி ஓவியக்கண்காட்சி

ஈ.மெயில் (Edmail), ஈ.சொப்பிங் (Edshopping), பாங்கிங் (Edbanking) என எமது அன்றாட வாழ்க்கையில் இணையத்தின் பாவனை அதிகூடிய இடத்தைப் பெற்றுவிட்டது. புதிய அலைபேசிகளின் நுகர்ச்சியும் அதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்துவிட்டது. கடந்த 30 வருடப் போரினால் எமது பிரதேசம் நவீன தொழில் நுட்பவியலில் பின்தங்கி நின்றாலும், மிகத் துரிதமாக இணைய வழியில் நடக்க ஆரம்பித்து விட்டோம். அன்றிருந்த சமு தாய நிலைமைகளும் இன்று மாறத்தொடங்கி விட்டன. பரபரப்பான வாழ்க்கை வட்டத்தில் சடங்குகளும், பண்டிகைகளும் கூடச் சுருங்கி விட்டன. ஓய்வு நேரங்களில் உற்றார், உறவினர்களுடன் கூடி மகிழ்ந்த எமது சமூகம், இன்று முகப் புத்தகத்தில் (Face book) மூழ்கிவிட்டது. கச்சேரிகள், நூல் வெளியீடுகள், கண்காட்சிகள், அரங்கேற்றங்கள் போன்றவற்றுக்கு இன்று சனக்கூட்டம் நலிந்து விட்டது. இந்தக் காலகட்டத்தில் ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி சித்திரப்பயிற்சி நிறுவனத்தின் இணையவழி ஓவியக் கண்காட்சி எதிர்கால மாற் றத்தின் ஆரம்பமாக அமைகின்றது. இந்த நிறுவனம் 2013 ஆம் ஆண்டு முதலாவது இணையவழி ஓவியக் கண்காட்சியை நடத்தியது. அதனைத் தொடர்ந்து 2015 ஆம் ஆண்டு இந்தக் கண்காட்சியை www.iat art.webs.com என்ற இணைய முகவரியூடாகப் பார்வையிட முடியும். சிறுவர் தொடக்கம் வளர்ந்த மாணவர்கள் வரையான ஆக்கங்கள் பதிவேற்றப்பட்டுள்ளன. இதனைப் பார்க்கும் பொழுது நேரில் கண்காட்சியைப் பார்க்கும் அனுபவம் கிடைக்கின்றது. உருவச் சித்திரங்கள், அலங்காரச் சித்திரங்கள், நவீன சித்திரங்கள் என சித்திரங்கள் யாவும் கண்ணுக்கு விருந்தளிப்பதாக அமைந்துள்ளன.

**சி.விமலேஸ்வரன்**





# கடலில் ஏழு நூல்கள் வெளியீடு

ஆசிரியர் திருச்செல்வம் தவரத்தினத்தின் உலக சாதனைப் பதிவுக்கான நூல் வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் கசூரினா பீச்சில் அமைக்கப் பட்ட மிதக்கும் சர்வ சக்தி அரங்கில் இடம்பெற்றது. திருகோணமலை மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் வி.குணபாலா தலைமையில் நடைபெற்ற நூல் வெளி யீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாய கன் கலந்து சிறப்பித்தார். கடலில் நூல் வெளியிடும் அதிசயக் காட்சியைக் காண பெருமளவு மக்கள் கடற்கரையில் கூடியிருந்தனர். நூலாசிரியரால் எழுதப்பட்ட 7 நூல்கள் கடலில் ஒரே மேடையில் வெளியிடப்பட்டுச் சாதனை நிலை நாட்டப்பட் டது.

(ஐ-250)

# அகம்பாவத்தை ஒதுக்கி விடு

A பக்கத் தொடர்ச்சி

இன்று கல்வியறிவுள்ள பெண்களே பாதகமான விளைவுகளைச் சந்திக் கின்றனர். கல்வி பெண்களுக்கு ஓரங் கட்டப்பட்ட நிலையை மாற்றிவிட்டது. எழுதத்தெரிந்தால் போதும், அறிவுக்குப் படித்தால் போதும் எனப் பெண்கள் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்காத காலம் மலையேறி, பெண்பிள்ளைகள் படிக்க வேண்டும், உயர் பதவிகளை வகிக்க வேண்டும் என்ற மாற்றுக் கோட்பாடு கள் வலுப்பெற்று கல்வியால் பெண்கள் பல பணிநிலை அதிகாரிகளாக உயர்ந்து விட்டனர். இன்று கல்வியைப் பெற்றுக்கொண்ட சில பெண்கள் பெண்மைக்கே உரித்தான ஏதோ ஒன்றை அழித்து விட்டு அகம் பாவத்தைத் தமக்குள் சேர்த்துக் கொண்டு வாழத் தலைப்பட்ட காரணத்தால் பல துன் பங்களைச் சந்திக்கின்றனர். அகம் பாவமே பெண்களை வழிநடத்துகின்றது. இதன் விளைவாக வேண்டாத பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக் கின்றனர். பெண்மைக்கே உரித்தான பண்புகளைக்கூட அகம்பாவத்தால் கொன்று போடுகிறார்கள். தம்மை மறந்து மனம்போன போக்கில் வாழ்கிறார்கள். காரணமின்றித் தெருக்களில் நடமாடு கின்றனர். பண்பாடு மறந்து வீதியோரங் களில் தொலைபேசி உரையாடல்களில் ஈடுபடுகின்றனர். ஆடம்பர மோகத்தில் தம்மை இணைத்து அழகையே கெடுக் கின்றனர். பெற்றோருக்கு அடுக்கடுக் காகப் பொய்களைச் சொல்கின்றனர். திரு மண வாழ்விலும்கூட கரம்பிடித்தவனை மதியாது ஆணவத்துக்கு துணை போகின்றனர். இல்லற வாழ்க்கைக்கு அகம் பாவத்தால் புதுமெருகூட்டுகின்றனர். பண்பாட்டை, கலாசாரத்தை பாதுகாக்க வேண்டியவர்கள் படுகுழிதோண்டிப் புதைக்கின்றனர். சற்றும் தயங்காமல் விவகாரத்துக்குத் தயாராகின்றனர்.

கல்வி பெண்களைப் பாதுகாக்கும் கவசம். நல்வழி காட்டும் வழிகாட்டி. தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்து தன்னம்பிக்கையை வளர்க்க உதவுவது கல்வி. சொந்தக்காலில் நிற்கப் பலம் தருவது கல்வி. கல்வியை பெற்றுக் கொண்டவர்கள் நேரிய வழியில் பய ணிக்க வேண்டும். அகம்பாவத்தைக் கட்டிக்கொண்டு அசிங்கமான வாழ்வு வாழ்வதை அறவே கைவிட வேண் டும். கல்வியும் அகம்பாவமும், ஒரே இருக்கையில் இருக்க முடியாது. புனி தமான வாழ்வு வாழவும், பெண் மையை மேலும் புனிதப்படுத்தவும், சமுதாயத்தை ஆரோக்கியம டையச் செய்யும் ஏனைய பெண்களை அர வணைத்து, அவர்களின் கண்ணீரைத் துடைக்கவும், கல்வியறிவு பெற்ற பெண் கள் அகம்பாவத்தை தூக்கியெறிய வேண்டும். அகம்பாவம் யாரையும் வாழவிடாது.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**

எனும் வள்ளுவம், பெண்களுக்கு இடித்துரைப்பது எதுவெனப் புரிந்து கொண்டு அதன்படி வாழ்ந்தால் பெண்மை சிறக்கும்.





அனலைதீவு த.நாராயணன் எழுதிய 'அடியேன் குறள்' எனும் நூல் வெளியீட்டு விழா கடந்த 25 ஆம் திகதி அன லைதீவு அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அனலைதீவின் மூத்த தலைமுறை மூதாட்டி திருமதி செல்லமுத்து நமசிவாயம் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து அங்குள்ள முதியோர்கள் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அண்டம் கடந்த பொருள் பண்டும் இன்றும் என்றும்

(புலவர் முத்து இராசரத்தினம்)

**"பரக்கும் பெருமை இலங்கையென்னும் பதி யிற்பொலிவாய**
**அரக்கர்க்கிறைவன் முடியுந்தோறும் அணியார் விரல் தன்னால்**
**நெருக்கியடர்த்து நிமலா போற்றி யென்று நின்றேத்த**
**இரக்கம் புரிந்தார் உமையாளோடும் ஈங்கோய் மலையாரே."**

(திரு ஈங்கோய்மலை பதிகம் : திருஞானசம்பந்தர்)

அரக்கர்க்கு இறைவனாகிய இராவணன், பரந்த பெருமைபெற்ற இலங்கையென்னும் பதியிற்பொலிவானவன். அந்த அரக்கர்களுக்கு இறைவனாகிய பேரரசனின் முடியும், வலிய உரம்பொருந்திய தோள்களும், அவன் கைலையங்கிரியைத் தூக்கிச் சுமந்து சென்று தனது அன்னையார் வழிபட வைக்க வேண்டும். எனப் பெயர்த்தபோது, அழகிய திருவடிகளில் உள்ள விரல்களால் நெருக்கி அடர்த்த சிவ பெருமானை "நிமலா போற்றி" என்று நின்று ஏத்தித் தொழுதிட, இராவணனுக்கு இரக்கம் புரிந்தார் உமையன்னையுடன் இணைந்திருந்த சிவபெருமான். அத்தகைய உயர்ந்த சிவபக்த சீலன் இராவணன். மும்மலங்களின் தீயபார்வை அவனைத் திருந்திய சாத்வீகத்திலிருந்தும் மாறுபடவைத்ததால் அகங்காரம் ஆணவமாகத் தீவினை புரிந்து கன்மத்தில் தீயசெயல்களைச் செய்ய அசுத்த மாயை வசீகரித்துவிட்டது. மாயையின் மயக்கால் திருமாலும் நான்முகனும் இறைவனின் அடிமுடியைத் தேடினார்களே!

திருமால் பன்றியாகவும், நான்முகன் பறவையாகவும் உருவெடுத்துக் கீழ்நோக்கி இறைவனின் திருவடி காணச் செல்லத் திருமாலும், இறைவனின் திருமுடிகாண நான்முகன் பறந்து மேலேமேலே பறந்தபோது, அடிமுடி காணப்புறப்பட்டவர்கள் களைத்துச் சோர்ந்தனர். திருமால் தோல்வியைத் தழுவி திருவடிகாண முயல்வதிலிருந்தும் விடுபட்டு நிறுத்திப் பின்வாங்கினார். நான்முகன் சிவபெருமானின் முடியிலிருந்து தவறிக் கீழ்நோக்கி வந்த தாழம்பூவிடம் கேட்டார் "நீ எங்கே இருந்து வருகிறாய்", என்று.

**தாழம்பூ** : நான் இறைவனின் முடியிலிருந்து தவறிவிழுந்து விட்டேன்.

**நான்முகன்** : அப்படியா?

**தாழம்பூ**: என்ன குற்றம் செய்தனோ? ஏன் இந்த நிலை ஏற்பட்டுவிட்டது.

**நான்முகன்**: சிவசிவா! இனி என்று இறைவனின் கருணை கிடைக்குமோ?

தாழம்பூ துயரம் தழுவ வாடியது. அப்பொழுது நான்முகன் அதனிடம் தனக்கு உதவிபுரிய வேண்டும் எனக் கேட்டார்.

**தாழம்பூ**: தங்களுக்கு எப்படி நான் உதவுவேன்?

**நான்முகன்** : நீ இறைவனின் முடியில் இருந்து வருபவன்தானே? நான் இறைவனின் திருமுடிகண்டு தரிசித்தேன் எனச் சான்று உரைத்து உதவ வேண்டும்.

தாழம்பூ நான்முகனின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டது. நான்முகனும் தாழம்பூவும், மும்மலமான ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றின் சிக்குண்டு தீய பலனுக்குள் சிக்கினர்.

இதனால் பூசை வழிபாட்டுக்குத் தாழம்பூ சேர்த்துக் கொள்ளப்படும் தகைமையை இழந்தது. நான்முகன் தமக்குக் கோயில் கட்டி வழிபடும் உரிமையை இழந்தார்.

யானை முதலான எறும்பீறாய ஈனமில் யோனிகளாம் உயிர்கள் மட்டுமல்ல, மும்மலங்களாகிய அசுத்த மலங்கள் தீமை செய்யும்காலம் எல்லோருமே தீவினைக் காளாவர்.

**"வா இங்கே நீகுயில் பிள்ளாய்**
**மாலொடு நான்முகன் தேடி**
**ஓவி அவர் உன்னி நிற்ப**
**ஒண்தழல் விண்பிளந் தோங்கி**
**மேவி அன்று அண்டம் கடந்து**
**விரிசுடராய் நின்ற மெய்யன்**
**தாவிவரும் வரிப் பாகன்**
**தாழ்சடையோன் வரக் கூவாய்"**

ஒண்தழல் நீண்டுயர்ந்து விண்ணைப் பிளந்து அண்டத்தைக் கடந்தும் எரிகின்ற விரிசுடராய் நின்ற உளம் கடந்த மெய்யானவன் சிவபெருமான். அவனது திருமுடியைக் காண முடியுமா? அதேபோல்தான் அவனது திருவடியும். அந்த அரிய வடிவானவனை, தாவி



விரைந்து வரும் குதிரைப்பாகனாகவும், நீண்ட சடையையுடையவனாகவும் திகழும் பரம்பொருளை வருமாறு கூவி அழைப்பாயாக! என்று, மாணிக்கவாசக சுவாமிகள் குயிற்பத்து பதிகத்தில் குயிற் பிள்ளையிடம் கட்டளையிடுகிறார்.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி, அன்பே சிவம்". அவர் அன்பு செலுத்திப் பணிவோடு வழிபடுபவர்களிடம் இயல்பாக அருகில் வந்து திருவருள் நல்குவார். அவர் ஒருவர்தான் கடவுள்.

காட்டுமிராண்டிகள் கடவுளை உணர்ந்ததும் அவரை வழிபடத் தமது உளத்தை நில்லையாக நிலைத்து வைக்கமுயற்சித்து, உள்ளம் பலபல உணர்வுகளில் நிலைதடுமாறி அலையவே கடவுளைக் காணத் தாமே சிந்தித்தனர். தாம் பிறப்பதற்குக் கருவியாக இருந்தது எது? கந்து அதனால் கடவுளை முதலில் கந்து (இலிங்கம்) எனக் கண்டு உருவாக்கி வழிபட்டனர். அதனால் முதலில் கந்து வழிபாடே உருவாகியது என அறிஞர்கள் கண்டறிந்து தெளிவாக்கியுள்ளனர்.

கந்துவை வழிபட்டு வந்தவர்களின் உளத்தில் சலனம் ஏற்பட்டது.

ஆம் கந்து கரு உற்பத்திக்கே உதவுகிறது. ஆனால் பெற்றெடுப்பது ஆவுடையார் அல்லவா?

ஆவுடை இலிங்கம் முழுமைபெற்றார். ஆவுடை இலிங்கம் குமரி முதல் இமயம் வரை திருவருள் நல்கினார்.

உள்ளம் ஒடுங்கி அடங்கி ஒரே நிலையாக ஆத்மா கடவுளை உணர்ந்து கண்டு வழிபட்டுக் கடவுளுடன் கலந்தது.

ஆவுடை இலிங்கத்தை வழிபட்டவர்கள் ஆவுடை இலிங்கத்தைக் கழுத்தில் அணியும் அணிகலனாகவும், புயத்தில் அணியும் அணிகலனாகவும், தமது உள்ளத்தின் விரிவுக் கேற்பப் பலபல உயர வடிவங்களில் அமைத்திருந்தனர். இவை சிந்துவெளிப் பள்ளத்தாக்கில் அகழ்வாய்வின்போது, அகப்பட்டன.

இலங்கையிலும் திருக்கேதீச்சர அகழ்வாய்வில் பிரமாண்டமான ஓர் இலிங்கம் கிடைத்தது. தற்பொழுது பேராசிரியர் சி.பத்மநாதன் குருநாகலில் ஆழ்ந்த எட்டடிக்கும் கூடுதலான ஆழத்தில் கண்டுள்ளார் என்றும், வன்னியிலும் நாகர்கள் வழிபட்ட கந்து இலிங்கம் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பத்திரிகையில் ஒரு கட்டுரையைப் படித்துள்ளேன்.

இலிங்க வழிபாடென்பது அநாதி முறைமையா பழைமை மட்டுமல்ல. அறிவை வளர்த்து, உணர்வில் இரக்கத்தை உருவாக்கி, உயிர்ப் பிறப்புக்கள் அனைத்திலும் அன்பு செலுத்துவதற்குரிய உணர்வை வளர்த்து, மரப்பட்டைகளையோ, இலைதளைகளையோ, விலங்குரிகளையோ ஆடையாக அணிவதற்குச் சிவபெருமான் விலங்குரிகளுடன் காட்சியளித்து வழிகாட்டி அவைகளைத் தாமும் அணிந்து மனிதர்கள் தோன்றினர். கொடூரமான பாலுணர்வு வேட்கையுடனிருந்த ஆண்களிடம் இருந்து பெண்கள் தம்மைக் காப்பாற்றினார்கள்.



## தேசிய ரீதியில் விருதுகளைப் பெற்ற திருக்குடும்பக் கன்னியர்மடம்







2015ஆம் ஆண்டுக்கான அரச சிறுவர் நாடகப் போட்டியில், யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடத் தேசிய பாடசாலை, தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் 10 விருதுகளையும் பெற்றுள்ளது.

வருடந்தோறும் இலங்கைக் கலைக்கழகமும், கலாசார அமைச்சும் இணைந்து நடத்துகின்ற, மேற்படி சிறுவர் நாடகப்போட்டியில், பாடசாலை மட்ட (வரையறுக்கப்பட்ட) போட்டிப் பிரிவில், யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மட மாணவர்களின் 'கிளிக்கூண்டு' நாடகம் மேற்படி விருதுகளைப் பெற்றுள்ளது. ஆசிரியர் யோ.யோன்சன் ராஜ்குமார் எழுதிய மேற்படி நாடகத்தை ஆசிரியர் இ.ஜெயகாந்தன் நெறியாள்கை செய்து தயாரித்திருந்தார். இதற்கான இறுதிச் சுற்றுப் போட்டிகள் கடந்த மாதம் மருதானை டவர் மண்டபத்தில் நடைபெற்றதோடு, இதற்கான பரிசளிப்பு வைபவம் கடந்த 6 ஆம் திகதி செத்சிறிபாயாவில் நடைபெற்றது. பரிசில்களைக் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிக் கௌரவித்தார்.

இந்தப் போட்டியில் திருக்குடும்பக் கன்னியர் மட மாணவர்களின் 'கிளிக்கூண்டு' தேசிய மட்டத்தில் முதல் இடம் பெற்றதுடன், 10 விருதுகளையும் பெற்றுக் கொண்டது. இந்த நாடகத்தை நெறிப்படுத்திய ஆசிரியர் இ.ஜெயகாந்தன் சிறந்த நாடகத் தயாரிப்பு, சிறந்த நடிப்பின் நயனம், சிறந்த ஆடை அலங்காரம் ஆகியவற்றுக்கான மூன்று விருதுகளையும் பெற்றுக்கொண்டார். சிறந்த நடிகைக்கான விருதை செல்வி எட்வின் டனோஜாவும், சிறந்த துணை நடிகைக்கான விருதை செல்வி மேரி நித்தியாவும், சிறந்த ஒப்பனைக்கான விருதை ஆசிரியர் நிதாகரனும், சிறந்த இசை அமைப்புக்கான விருதை ஆசிரியர் ஜஸ்ரின் ஜெலூட்டும், சிறந்த எழுத்துருவுக்கான விருதை யோ.யோன்சன் ராஜகுமாரும், விசேட நடிப்புத் திறமைக்கான விருதை செல்வி யூட் அபி ஷாவும், விசேட அரங்க முகாமைக்கான விருதை ஆசிரியர் மு.தனுஷாந்தும் பெற்றுக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எட்டாவதில் கைக்கு எட்டாதவை

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்

உலகத்தில் எல்லோரையும் சமமாக, சமரசம் செய்யும் சாதனம் வாக்குச்சீட்டு. அதே போல, இறைவனோடு கதைப்பதற்கும், வரம் வேண்டுவதற்கும் உலகத்தவருக்குச் சமத்துவம் கொடுக்கும் ஆலயம் ஒரு ரூபா அர்ச்சனைச் சீட்டு வழக்கில் உள்ள நல்லூர் முருகன் ஆலயம். ஏன் இந்த இரண்டையும் குறிப் பிடுகின்றேன் என்றால், ஒரு ரூபாவால் நல் லூரான் உலகையாள்கின்றான். அந்த ஒரு வாக்குச் சீட்டினால் ஒரு நாட்டையே ஆளவும் முடியும். ஓர் அரசை வீட்டுக்கு அனுப்பவும் முடியும். ஒன்று என்பது இலேசான விடயமல்ல.

நடந்து முடிந்த எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலில் சரியாகப் புள்ளடி போடாத காரணத்தினால் வடக்கிலும் கிழக்கிலுமாக மொத்தம் எண்பத்தாறாயிரத்து, எண்ணூற்றி எழுபத் தொன்பது (86, 879) வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.



இந்தச் செய்தியை (20/08) ஆம் திகதி உதயனில் பார்த்தபோது நான் கவலையடைந்தேன். கண்ணீர் சிந்தினேன். உங்களுக்கு அழுகை வரவில்லையா? எல்லோரும் பெரியவர்களே. படித்திருக்கிறார்கள். ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கே புள்ளடி போடத் தெரிய வில்லையாயின், இவர்களது குடும்பமும் ஏதோவொரு வகையில் பாவம் செய்த தாகவே இருக்கப்போகிறது. இது எவருடைய பிழை? இதை எல்லோரும் ஏற்றேயாக வேண்டும். கருத்துக்கள் பகிரப்படவில்லை.

ஒரு பாடசாலையில், சித்தியடையாதவர்கள் பற்றியே சிந்திக்க வேண்டும்.

ஒரு கிராமத்தில் எழுத்தறிவில்லாதவர்கள் பற்றியே சிந்திக்க வேண்டும்.

ஒரு நாட்டில் அடிப்படை வசதியற்றவர்கள் பற்றியே சிந்திக்க வேண்டும்.

ஒரு வீட்டில் ஆரோக்கியம் பற்றியே சிந்திக்க வேண்டும்.

இந்த உலகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் பற்றியே சிந்திக்க வேண்டும்.

ஒரு தேர்தலில், ஒட்டு மொத்தமாக நிராகரிக் கப்பட்ட வாக்குகள் பற்றியே சிந்திக்க வேண்டும். நாம் சிந்தித்தோமா?

சொன்னோமா?

மேடைகளில் முழங்கினோம். தெளிவாக திரும்பத் திரும்பக் காட்சிப்படுத்தி வாக்காளப் பெருமக்களுக்குப் புள்ளடி போடுவது எப்படியென்று சொல்லியிருக்கிறோமா? பட்டும் படாமலும், தொட்டும் தொடாமலும் சொன்னோமே. தவிர அறுத்து உறுத்து சொல்லவில்லையே! சரி ஊடகங்களாவது பெரிய எழுத்தில் முதலில் என்ன செய்யவேண்டும், இரண்டாவது என்ன செய்ய வேண்டும்என்று ஒருமுழுப் பக்கத்திலாவது பிரசுரித்திருக்கலாம் அல்லவா? செய்தோமா? இல்லையே! அல்லது கிராமம் கிராமமாக வீடு வீடாகச் சென்று வாக்காளர்களுடன் கலந்துரையாடியிருக்கிறோமா? தொழில்நுட்பச் சாதனங்கள் வாயிலாக எல்லாவற்றையும் வெல்ல முடியுமா? நாம்தவறு செய்துவிட்டோம்.

ஒவ்வொருவரையும் குடைந்தெடுக்க நிரப் பந்திக்கும் நிராகரிப்புக்கு இலக்கான வாக்குகளை அளித்தோர், யாழ்ப்பாணம் 25, 496 பேர், வன்னி 17, 155 பேர், திருமலை 10, 542 பேர், மட்டக்களப்பு 13, 538 பேர், திகாமடுல்ல 18, 423 பேர், மொத்தம் 85, 154 பேர்.

கவலை தரவல்ல, தபால்மூலம் நிராகரிப்பு வாக்குக்கள்,

யாழ்ப்பாணம் 272,
வன்னி 199,
திருமலை 137,
மட்டக்களப்பு 86, திகாமடுல்ல 716,
மொத்தம் 1410,

இடம்பெயர்ந்தவர்களது நிராகரிக்கப்பட்ட வாக்குக்கள் 315,

மொத்தமாக நிராகரிப்பு 86, 879,

எவ்வளவுதுன்பத்தைச்சுமக்கும்(5,74,398 பேர்)

இவர்கள் எங்கே?

மேற்தரப்பட்ட ஐந்து மாவட்டங்களிலும் வாக்களிக்கப்படாத ஐந்து லட்சத்து, எழுபத்தி னான்காயிரத்து முந்நூற்றி தொண்ணூற்றெட்டு வாக்காளப் பெருமக்களின் நிலை தொடர்பாகக் கண்டறியப்பட வேண்டியவர்களாக நாமிருக்கின்றோம். மொத்த வாக்குகளில் வாக்களிக்காதவர்கள் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியாகவும், வாக்களித்தவர்களோடு ஒப்பிடும்போது வாக்களிக்காதவர்கள் கிட்டத்தட்ட அரைப்பங்காகவும் இருப்பது மிகவும் கவனத்துக்கும், கவலைக்கும் உரியது. உரியவர்கள் மட்டுமல்ல ஏனையோரும் இதுபற்றி ஆராய்வது நன்மை பயக்கும்.

| | மொத்தவாக்காளர் | அளிக்கப்பட்டவை | மிகுதி? |
|---|---|---|---|
| யாழ். | 5,29,239 | 3,25, 805 | 2,03,434 |
| வன்னி | 253,058 | 181,930 | 71,128 |
| திருமலை | 2,56,852 | 1,90,938 | 65,914 |
| மட்டு | 365,167 | 2,52,384 | 1,12,783 |
| திகாமடுல்ல | 4,65,757 | 3,44,618 | 1,21,139 |
| மொத்தம் | 18,70,073 | 12,95,675 | 5,74,398 |

இதுபற்றி ஆராய்வதற்கு நான்கு காரணங்கள் வலுச்சேர்க்கலாம்.

1. பலர் இடம் பெயர்ந்திருக்கலாம். முகாம்களில் இருக்கலாம்.
2. பலர் இறந்திருக்கலாம், காணாமல் போயிருக்கலாம்.
3. பலர் பதியப்படாமல் இருக்கலாம். (இதற்கு நடைமுறைப் பிரச்சினைகளும் உண்டு)
4. மருத்துவமனை, முதியோர் இல்லங்கள், சிறைச்சாலைகள், பயணங்கள், வைபவங்கள் என்பவற்றில் பொறுப்புக்களோடு இருந்திருக்கலாம்.

இந்த நான்கு காரணங்களுக்கு மேலதிகமாக ஒருசிலர் அக்கறையின்மை காரணமாகவும் வாக்களிப்பதைத் தவிர்த்திருக்கலாம். அல்லாமலும் முதுமை, நோய்கள், போக்குவரத்து, கண் தெரியாமை ஆகிய நடைமுறைப் பிரச்சினைகளும் பாதித்திருக்கலாம். எது எப்படியோ, 5,74,398 வாக்குகள் அளிக்கப்படாத நிலையானது அதர்மமாகச் சிந்திக்கப்பட வேண்டியதாகும். ஊடகங்கள் மூலமாக உரத்துச் சொல்லப்பட வேண்டிய விடயமிதுவாகும். ஆன்மிகமும் இதற்கு விதிவிலக்கல்ல.

வாக்கு என்பது ஒவ்வொருவருடைய உரிமையாகும். வாக்களிப்பது, வாழ்வுக்கு வேண்டிய அத்தியாவசியத் தேவையாகும். உணவு, உடை, உறையுள் போல ஒவ்வொருவருடைய வாழ்வையும் வளப்படுத்தவல்ல ஒரு சாதனமாகும். அதனை ஒவ்வொருவரும் பெறுமதியாகஎண்ணியபடியால்தான் இலங்கையின் ஜாதகத்தையே மாற்றக்கூடியதாக இருந்தது. ஜனநாயகத்தோடு, ஆன்மிகமும் இணைந்து பயணித்தமையால், அரசியல் வென்றுவிட்டது.

அரசியலை முன்னின்று நடத்துபவன் எல்லாம் வல்ல இறைவனே. இனி வருங் காலத்தில் அதனை எமது கைக்கு எட்டும்படியாகச் செய்வதில் ஆன்மிகம் ஈடுபட்டேயாக வேண்டும். பதவிகளுக்காக அல்ல, பரோபகாரங்களுக்காக!

## "கனவுகளின் புலர்வு" கவிதை நூல் வெளியீடு

செந்தணல் வெளியீட்டகத்தின் 15 ஆவது வெளியீடாக வெளிவந்த செ. கஜானன் எழுதிய "கனவுகளின் புலர்வு" கவிதை நூல் வெளியீடு கடந்த வாரம் பளை கூட்டுறவு மண்டபத்தில் வவுனியா தமிழ்ச் சங்க செயலர் தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து சிறப்பித்தார். ஆசியுரைகளை புலோப்பளை புனித இராயப்பர் ஆலய பங்குத் தந்தை அ. சில்வெஸ்ரர்தாஸ், பச்சிலைப்பள்ளி அறத்தி அம்பாள் திருக்கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ ந. பிரபாகரக் குருக்கள், வவுனியா தமிழ்ச்சங்க தலைவர் எஸ். என்.ஜீ.நாதன் ஆகியோர் நிகழ்த்தினர். வாழ்த்துரைகளை பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் ப. ஜெயராணி, தமிழகத்தில் இருந்து வருகைதந்த இலக்கியவாதி வெள்ளைச்சாமி ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப. அரியரத்தினம், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் ப. ஜெயராணி ஆகியோர் கலந்து கொண்டனர். கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் அ. கேதீஸ்வரன், பளை றோமன் கத்தோலிக்க பாடசாலை முன்னாள் அதிபர் திருமதி இ. குமாரவேலு ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். அறிமுக உரையை செந்தணல் வெளியீட்டக இயக்குநர் காவியப்பிரதீபா, தமிழ்ச்சுடர் வன்னியூர் செந்தூரன் ஆகியோர் நிகழ்த்தினர். நூலாசிரியர் அறிமுகத்தை அதிபர் திருமதி இ.குமாரவேலு நிகழ்த்தினார். வெளியீட்டுரையை தாய்தேச கலைஞர்கள் அமைப்பின் செயலர் கவிச்சுடர் சிவரமணி நிகழ்த்தினார். நூல் வெளியீட்டை நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் வெளியிட்டு வைக்க, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ப. ஜெயராணி பெற்றுக்கொண்டார். நூல் ஆய்வுரையை தமிழ் மணி மேழிக்குமரன் நிகழ்த்தினார். (421)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதநாட்டியமும் அபிநயமும்

தொகுப்பு: சோபனா


**பரதநாட்டியம்**

பரதநாட்டியம் என்ற கலை அடையாளப்படுத்துவது அதனை அளிக்கை செய்பவர் தரித்திருக்கும் ஆடை அணிகலன்களையும் சார்ந்தது என்று சொன்னால், அதை மறுப்பவர் எவருமில்லை. அந்தக் கலையைக் கண்டு, இரசிப்பவர்கள் பெருகிவருவதற்கு இந்தத் தோற்றப் பொலிவு கூட ஒரு காரணம்என்றுகூறலாம். ஒருகலைஞரின் பார்வையிலும்,பார்வையாளர்களின் கோணத்திலும் பரதம் என்ற கலை மனதில் பதிந்திருப்பது ஒப்பனை, விசேட அணிகலன் மற்றும் ஆடை கலந்த கலவையாகத்தான். 'ஒரு கலை, எந்தவித தொழில் நுட்ப உதவியும் இல்லாமல், இசைக்கலைஞர்களது உதவியைக் கொண்டு செயற்பட்டு, பார்வையாளர்களையும், தன்னையும் இன்றளவிலும் கவர்ந்திருக்கிறது என்றால் அது பரத நாட்டியம் என்றகலையாகமட்டும்தான் இருக்கும்'. இது பரதம் பற்றி பிரான்ஸ் நாட்டு இதழொன்று வெளியிட்ட குறிப்பு. இதை இங்கே குறிப்பிட வேண்டியதன் அவசியம் என்னவெனில், பரதக் கலையை அதனது ஜீவன் குறையாமல் வைத்திருக்கச் செய்யும் சிலவற்றைப் பற்றி கூறுவதற்காகத்தான். நாட்டியக் கலைஞருக்கு ஆடை, சலங்கை, ஆபரணங்கள், ஒப்பனை ஆகியவற்றில் தற்போது மற்றவர்கள் உதவி செய்கிறார்கள். ஒரு கால கட்டத்தில் இவையெல்லாவற்றையும் நாட்டியம் கற்பிக்கும் குருமாரே கவனித்துக் கொண்டனர். ஆனால் தற்போது இதற்கென்று பல தனியார் நிறுவனங்கள் செயற்படுகின்றன. அதேபோல், நாட்டியத்தில் பயன்படுத்தப்படும் தாளம், தாளக்கட்டை ஆகியவற்றையும் தற்போது சில தனியார் நிறுவனங்களே அமைத்துத் தருகின்றன. சலங்கையைப் பொறுத்தவரை பழங்காலத்தில் தமிழ் நாட்டின் கும்பகோணம் பகுதியில் அவை தயாராகி வந்ததைத் தான் அனைத்துக் கலைஞர்களும் பயன்படுத்தி வந்தனர். ஆனால் தற்போது குஜராத் மாநிலத்தில் தயாராகி வரும் நிறை குறைந்த சலங்கையைத் தான் அனைத்துக் கலைஞர்களும் பயன்படுத்திவருகின்றனர். அதேபோல் ஆடையிலும் தற்போது பல வண்ணங்கள் கலந்ததையும், விசேடமாக வடிவமைக்கப்பட்டதையும் அணிகிறார்கள், ஆனால் எவரும் இந்த விசிறி மடிப்பை பெரிதாக விரும்புவதில்லை. இருந்தாலும் பாரம்பரியம் கருதி இதனைப் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். தாளத்திலும் தற்போது நிறை குறைவானதையே ஜதி சொல்பவர்களும், நட்டு வாங்கம் செய்பவர்களும் விரும்புகின்றனர். அணிகலன்கள் அணிவதிலும் இதே நிலைதான் நீடிக்கிறது. நிறை குறைவாக உள்ளவற்றையும், தங்க முலாம் பூசப்பட்டவற்றையும் தான் விரும்புகின்றனர். ஒரு சிலரே வைரம் பதித்த தங்க நகைகளை விசேடமாக வடிவமைத்து அணிகின்றனர். ஆடை,அணிகலன், தாளம் உள்ளிட்ட பரதநாட்டியத்துக்கு தேவைப்படும் அனைத்திலும் பாரம் பரிய அடையாளத்தை மீறாமல் புதுமை புகுத்தப்பட்டு வருவதை அனைவரும் வரவேற்கத் தொடங்கியிருப்பது சிறந்த மாற்றத்துக்கான அடையாளங்கள் என்று நாட்டியர் துறை வல்லுநர்கள் தெரிவிப்பதை நாமும் ஆமோதிப்போம்.

**அபிநயம்**

எமது பாரம்பரியமான நடனக் கலையான பரதநாட்டியத்தில் அபிநயம் என்பது மிகவும் சிறப்பு மிக்கதாகும். அபிநயம் என்பது கதாபாத்திரத்துக்கு ஏற்ப கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் கலை. அதாவது, ஒரு கதையிலோ அல்லது பாடலிலோ வரும் ஒவ்வொரு வார்த்தையினதும் கருத்தையும் வாயினால் சொல்லாது கையினாலும், தலை, கண், கழுத்து முதலிய அங்கங்களினாலும் பார்ப்பவர் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் செய்யப்படும் செய்கையே அபிநயம் ஆகும். அபிநயம் இரண்டு விதங்களில் சித்திரிக்கப்படுகிறது. ஒன்று உலக வழக்கு. இது லோக தர்மி எனப்படும். மற்றொன்று நாடக வழக்கு. இது உலக வழக்குக்குச் சற்று அப்பாற்பட்டு கலை வடிவத்துக்கு முதலிடம் அளிக்கும். இது நாடக தர்மி எனப்படும். உலக வழக்குக்கு எடுத்துக்காட்டு உண்மையான கண்ணீர். கண்ணீர் சிந்துவது போல் நடிப்பது நாடக வழக்காகும். அபிநயத்தில் நடிப்பு, பாவம், பல்வேறு அங்க நிலைகள் போன்றவை ஆடுபவரின் மன எழுச்சிகளை உணர்த்தப் பயன்படுகின்றன. பரத நாட்டியத்தில் நான்கு விதமான அபிநயங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

> ஒரு கதையிலோ அல்லது பாடலிலோ வரும் ஒவ்வொரு வார்த்தையின் கருத்தையும் வாயினால் சொல்லாது கையினாலும், தலை, கண் கழுத்து முதலிய அங்கங்களினாலும் பார்ப்பவர் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் செய்யப்படும் செய்கையே அபிநயம் ஆகும்.






**அவை:**

1. ஆகார்ய அபிநயம்
2. வாசிக அபிநயம்
3. ஆங்கிக அபிநயம்
4. சாத்விக அபிநயம்

என்பவையாகும்.

**ஆகார்ய அபிநயம்:**

அலங்காரம் மூலம் அபிநயித்தல் ஆகார்ய அபிநயம் எனப்படும். முக ஒப்பனை, உடை, அணி அலங்காரம், மேடை அமைப்பு முதலியவை பரத நாட்டியத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. சிவனாக ஒருவர் ஆட வேண்டுமென்றால் அவர், சடாமுடி, பிறைச் சந்திரன், பாம்பு, புலித்தோல், நெற்றியில் திருநீறு முதலான ஒப்பனைகளைச் செய்து கொள்ள வேண்டும். இந்த ஒப்பனைகள் அவரைச் சிவனாக உணர்த்தும். இவ்வாறு அபிநயம் செய்வது ஆகார்ய அபிநயம் எனப்படும்.

**வாசிக அபிநயம்:**

பாடலுக்கேற்ப அபிநயிப்பது வாசிக அபிநயம் எனப்படும். இந்த அபிநயத்துக்குப் பாடல் முக்கியம். பாடற் பொருள் அபிநயிக்கப்படும். ஆடுபவரே பாடலைப் பாடி அபிநயிப்பார். தற்காலத்தில் வேறொருவர் பக்க இசை பாட, ஆடுபவர் அதற்கேற்ப அபிநயம் செய்து ஆடும் பழக்கமும் நடைமுறைக்கு வந்துள்ளது.

**ஆங்கிக அபிநயம்:**

உடல் உறுப்புகளால் உள்ளக் கருத்தை வெளிப்படுத்துவது ஆங்கிக அபிநயம் எனப்படும். உடல் உறுப்புகளுக்குத் தனித்தனி இயக்க முறைகள் உண்டு. இவற்றில் கைமுத்திரைகள் முதன்மையானவைகளாகவும், சிறப்பானவைகளாகவும் கொள்ளப்படுகின்றன. கைமுத்திரை என்பது விரல்களின் செய்கைகளாகும். பரத நாட்டியத்தில் ஒற்றைக் கை முத்திரைகளும், இரட்டைக் கை முத்திரைகளும் உள்ளன. ஒற்றைக்கை முத்திரை தமிழில் பிண்டி எனவும், சமஸ்கிருதத்தில் அசம்யுத ஹஸ்தம் எனவும் குறிப்பிடப்படுகிறது. இரட்டைக்கை முத்திரை தமிழில் பிணையல் எனவும், சமஸ்கிருதத்தில் சம்யுதஹஸ்தம் எனவும் குறிப்பிடப் படுகிறது. பாடலின் பொருளைக் கைமுத்திரைகள் காட்டுகின்றன. கை முத்திரைகள் வழி கண் செல்லும். கண்கள் செல்லும் வழி மனம் செல்லும். மனம் செல்லும் வழி உள்ளத் தின் உணர்வு செல்லும்.

**சாத்விக அபிநயம்:**

நவரசம் எனப்படும் ஒன்பது சுவைகளாகி பயம், வீரம், இளிப்பு, அற்புதம், இன்பம், அவலம், நகை, கோபம், நடுநிலை ஆகிய உணர்வுகளைக் கை முத்திரைகள், முக பாவம் போன்ற உடல் மெய்பாடுகளால் அபிநயித்தல் சாத்விக அபிநயம் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி பரமலிங்கம்

# கவிதைக்கு உருவம் மட்டுமல்ல உள்ளடக்கமும் தேவை

மரபுக் கவிதைகள் பற்றிய சர்ச்சைகள் ஈழத்து இலக்கியத் தளங்களில் உணர்வுபூர்வமாகப் பல பக்கங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தச் சமயத்தில் கவிதையின் மற்றொரு கூறாகக் கருதப்படும் உள்ளடக்கம் பற்றியும் சிந்திக்க வேண்டிய கடப்பாடு இருக்கின்றது.

"ஆள்பாதி ஆடைபாதி" என்பதைப்போன்று கவிதைக்கு இலக்கண மரபுகள் எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு உள்ளடக்கமான கருவும் முக்கியத்துவம் பெறுகின்றது.

1960களில் 'கலை மக்களுக்காக, கலை கலைக்காக' என்ற இருவேறு கருத்துகளைக் கொண்ட இரண்டு அணிகள், கருத்து மோதல்களில் ஈடுபட்டிருந்ததை நினைவு கூரலாம். தற் சமயம் கலை கலைக்காக என்ற அணியினர் ஓய்ந்து கலை மக்களுக்காகவே என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

உதாரணத்துக்கு எமது நாடென்றில்லாமல், உலகளாவிய அடிப்படையில் நடத்தப்படுகின்ற இலக்கியப் போட்டிகளுக்குத் தெரிவாகும் படைப்புகளைத் தெரிவு செய்யக் கருவுக்கு 50 வீதம், மொழி நடைக்கு 25 வீதம், படைப்பை ஒப்புவிக்கும்- சொல்லும் பாங்குக்கு 25 வீதமென வழங்கப்படுகிறது.

ஆக உருவத்துக்கு 50 வீதம் வழங்கப்படும். அதே சமயம் உள்ளடக்கத்துக்கும் 50 வீதம் வழங்கப்பட்டுள்ளதைக் கவனிக்கலாம்.

"நெற்றிக் கண்ணைக் காட்டினும், குற்றம் குற்றமே" என்று நக்கீரர் சிவபெருமானுடன் வாதிட்ட இலக்கிய அல்லது புராணக் காட்சியில், "சொற்குற்றம், நடைக்குற்றம் மன்னிக்கப்படலாம் பொருட்குற்றம் மன்னிக்க முடியாதது" என்று நக்கீரர் வாதிடுகிறார்.

அந்த வகையில் பொருளில் மிகுந்த கவனமெடுத்தே படைப்புகள் தெரிவு செய்யப்பட வேண்டுமெனச் சங்க காலம் மற்றும் சங்கம் மருவிய காலங்களில் இருந்து இலக்கியப் படைப்புக்களை நோக்குகின்றோம்.

அதேவண்ணம் 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டையார் போன்றவர்களின் கவிதைகளை எடுத்துக் கொண்டால் அவர்களது படைப்புகள் நின்று நிலைப்பதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட பாடு பொருள்களே தோள் கொடுத்து நிற்கின்றன.

அவர்கள் வாழ்ந்த காலத்திலும் ஆயிரக்கணக்கான கவிஞர்கள், புலவர்கள் வாழ்ந்தபோதிலும் படைப்புகளில் சொல்லப்பட்ட பொருள்களின் வலுக் குறைவால் அவர்களது படைப்புக்கள் நின்று நிலைக்க முடியாமல் போயின.

இலக்கியத்தில் பல வகையான படைப்புக்கள் காலத்துக்குக் காலம் படைக்கப்பட்ட போதும், அவற்றில் வாழ முடியாத கருப்பொருள் அமைந்ததால் நீண்ட காலம் நின்று நிலைக்காமல் குப்பையில் போய்ச் சேர்ந்ததைச் சீர்தூக்கிப் பார்க்கலாம்.

கவிதை இலக்கியத்தைப் பற்றிய ஆய்வுகள் காத்திரமாக வைக்கப்படாமல் நவீன கவிதை வளர்ச்சி குன்றிப் போகின்றது.

பல்கலைக்கழகப் பேராசிரியர்களில் இருந்து என்னைப் போன்றவர்கள் வரையானவர்கள் எழுதுகின்ற ஆய்வுக் கட்டுரைகளில் 'அரைத்த மாவையே அரைக்கின்ற நிலைமை'யைப் பெரும்பாலும் காணலாம்.

அல்லது நுனிப்புல் மேய்வதைப்போன்று 60 களுக்கு முன்பு - பின்பு, 80களில், 90களில் தற்சமயம் எனக் காலஎல்லைகளைப் பிரித்து வைத்து அந்தந்தக் காலங்களில் கவிதை எழுதியவர்களின் பெயர்ப் பட்டியலை மட்டும் கூறுவதோடு கட்டுரை முடிவு பெறும்.

மிஞ்சி மிஞ்சிப் போனால் 60களில் எழுதியவர்களில் இன்ன இன்னார் இந்தப் போக்குகளில் கவிதைகளைப் படைத்தார்கள் என்பதைச் சொல்வதுடன் சரி.

அல்லது மிகப் பிரபலமான மகாகவி நீலாவணன், சில்லையூர் செல்வராசன், இ.முருகையன் போன்றவர்களின் புதிய கவிதை வரிகளை அல்லாமல் வேறொருவர் ஏற்கனவே தொட்டுக்காட்டிய கவிதை வரிகளைப் பத்துப் பேர் கட்டுரை எழுதி இருந்தால் அந்தப் பத்துக் கட்டுரைகளிலும் உதாரணம்காட்டப்பட்ட அந்த ஒரே கவிதை வரிகளைத் திரும்பத் திரும்பப் போட்டு, எழுதி இருப்பார்கள்.

ஆயிரக்கணக்கான கவிதைகளை எழுதிய அந்தக் கவிஞருடைய ஏனைய கவிதை வரிகள் இந்த ஆய்வாளர்களுக்குக் கிடைப்பதில்லையா?

முயற்சி செய்து, அந்தக் கவிஞர்களின் ஏனைய கவிதைகளைத் தேடி எடுத்து ஆய்வுகளை மேற்கொள்ளாமை தான் அதிகமாகக் காணப்படுகிறது.

இதனால் கவிஞர்களின் படைப்புக்கள் மட்டுமென்றில்லாமல் ஆய்வாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளும் அரைத்த மாவையே அரைக்கின்ற பாங்கு நீடித்து வருகிறது. இதனால் புதிய படைப்பாளிகளிடம் பொருள் புதிது, சிந்தனை புதிது என்பவற்றைச் சிறிதும் காணமுடிவதில்லை.

இந்த நிலைமை நீடித்துக் கொண்டிருந்தால் ஈழத்துத் தமிழ் கவிதை எங்ஙனம் வளர முடியும்?

ஒருசிலர், ஒருசிலருக்கு முதுகு சொறிவார்கள். அதாவது குறிப்பிட்ட நபர் எழுதும் கவிதைகளைச் சிலாகித்துத் திரும்பத் திரும்ப எழுதி அவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு செல்வார்கள்.

இதனால்தமிழ்க் கவிதை உலகம் வளருமா?



மேலும் மரபுக் கவிதை, புதுக் கவிதை என்ற வடிவ வேறுபாடில்லாமல் படிமம் என்ற ஒன்றையே முற்று முழுதான விதை ஆக்கிவிடுவதால் அத்தகைய கவிதைகள் ஒருவருக்கும் ஒன்றும் விளங்காத வகையில் தான் இருக்கும்.

அப்படியென்றால் கலை கலைக்காக எனத்தான் அமையும். கலை மக்களுக்காக என்றதான பின்பு, கலைகள் மக்களுக்கு விளங்கக் கூடிய முறையில் படைக்கப்பட வேண்டும்.

அதனாலேயே கலைகளின் பெறுமதி உயரும். அல்லாமலும் அதன் பயன்பாடும் மதிக்கப்படுகின்றது இல்லையா?

பல கோட்பாடுகளை இலக்கியத்துறையில் புகுத்தி எது எதுவோவெல்லாம் சொல்லி வருகிறார்கள். முற்போக்கு, நாற்போக்கு, பிற்போக்கு, இடைப்போக்கு இவற்றையும் விட பின்னர் நவீனத்துவம், சோஸலிசம் அந்த இசம், இந்த இசமென்றெல்லாம் வகுத்துக் கொள்கிறார்கள்.

இவற்றையெல்லாம் வகுத்துக் கொள்கிறவர்களுக்குத்தான் அவை விளங்கும். சிலருக்கு சிலகாலம்போனால் அவர்களுக்கே அதுவும் விளங்காமல் போய் விடுகிறது. இந்த நிலையில் சாதாரண வாசகன் - இலக்கிய நுகர்வோனால் இதனை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்?

உருவம், உள்ளடக்கம் எனும் இந்த இரண்டும் எந்தவொரு படைப்பாளியின் படைப்புக்கள் எல்லாவற்றிலும் நூற்றுக்கு நூறு வீதம் அமையும் என்று எதிர்பார்க்க முடியாதுதான். ஆயினும் 75 வீதமாகினும் தேறினால் வரவேற்கலாம்.

அதேவேளை படைப்பாளியே தமது படைப்பைக் குப்பை ஆக்கிவிடுவதும் உண்டு. படைப்புக்குத் தேவைக்கதிகமான படிமம் அல்லது இலக்கணச் செலுத்தல்களால் இத்தகைய நிலைமையைத் தோற்றுவிப்பதை அபரிமிதமாகக் காணக் கூடியதாக இருக்கிறது.

இந்தக் காலக் கவிதைகளின் போக்கில் அதனைப் படைப்பவர்கள் எத்தனை கடினப்பட்டு வார்த்தைப் பிரயோகங்களைப் பிரயோகித்தாலும், காதல் அல்லது கைக்கிளை ஒருதலைக் காதல் போன்ற கருப் பொருள்களை எம்மால் விளங்கிக்கொள்ள முடிகிறது.

புதிய சிந்தனை, புதிய பொருள்களைக் கையாண்டால் கடைசிவரையும் என்னைப் போன்ற நீண்டகால 'இலக்கிய நுகர்வோரால் கூட என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ளவே முடியாது.

சிலர் புரிந்து கொண்டதுபோல் தாழ்வு மனப்பாங்குச் சிக்கலால் நடிப்பார்கள்.

அதனை வெளிப்படையாக ஒப்புவிப்பதில் என்ன வெட்கம்?

ஞானம் சிற்றேட்டின் நூறாவது மலரில் பேராசிரியர்கள் பலர் சிறுகதை, நாவல், கவிதைகள் பற்றிய கட்டுரைகள் எழுதி இருந்தார்கள். அனைத்திலும் முன்பு சமர்ப்பித்த விடயங்களே சிலாகிக்கப்பட்டிருந்தன.

அதேபோன்று இந்தவருட நவம்பர் மாத வெளியீட்டில் சமகால 'ஈழத்தமிழ்க் கவிதை' என்ற தலைப்பில் அருணன் என்பவர் ஒரு சுருக்கக் குறிப்பு எழுதியுள்ளார்.

அந்த இரண்டு பக்கக் கட்டுரையில் நூற்றுக்கணக்கான கவிஞர்களின் பெயர்களைப் போட்டு நிரப்பியதுதான் கண்ட மிச்சம். அத்துடன் கவிதைத் துறையில் தலைவைத்துக் கூட படுக்காதவர்களின் பெயர்களும் இடம் பெற்றிருந்தன. உதாரணத்துக்கு யாழ்வாணன். சிலரது பெயர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் பிரயோகிக்கப்பட்டிருந்தன.

இத்தகைய கட்டுரைகளால் ஈழத்துத் தமிழ்க் கவிதை உலகம் விழிப்படையுமா?

பேராசிரியர் செ.யோகராசாவின் அண்மைக் காலக் கட்டுரைகளையும் இத்தகையவனவாகவே காண முடிகிறது. அவர் கருணையோகன் என்ற பெயரில் எழுதி வந்த காலத்தில் [illegible] கட்டுரைகளில் பெறப்பட்ட [illegible] இப்பொழுதெல்லாம் இல்லை.

இப்பொழுது வயதாளியாக இருந்தாலும் பேராசிரியராக உயர்ந்த காலத்தில் உழைத்துச்செய்த ஆய்வுகளை அவர் மேற்கொள்ள வேண்டும். அப்பொழுதே ஈழத்துத் தமிழ்க் கவிதை உலகம் நிமிர்ந்த நடைபோடும்.

பேராசிரியர் செ.யோகராசா மட்டென்றல்லாமல் பல்கலைக்கழக இளம் விரிவுரையாளர்கள் இந்தத் துறையில் தங்களது பார்வையையும், சிந்தனையையும் திருப்ப வேண்டும்.

கவிதை என்ற உருவில் வெறும் காகிதப் பூக்கள் மலிந்துவிட்ட காலம் இது. இப்பொழுது பிரசுர களம் பரந்து விரிந்து காணப்படுகிறது.

அதனால் பக்கங்களை நிரப்புவதற்காகப் பிரசுரமாகின்ற கவிதைகள் எல்லாம் கவிதைகளாகி விடுமா?

தினகரன் வார மஞ்சரியில் கூராயுதம் பகுதியில் அ.பாவேந்தி என்பவர் பலவாரங்களாகக் கவிதைகளின் பல கூறுகளை ஆராய்ந்து கட்டுரைகளை எழுதி வருகிறார். அத்தகைய கவிதை சார் அறிஞர்களின் கட்டுரைகள் தொடர்ந்து வாசிக்கப்பட்டால் சாதாரண வாசகன் கூட கவிதைகள் எழுதுகின்ற ஞானத்தைப் பெறுவான்.

சரியான ஆய்வுக் கண்ணோட்டத்துடன் சமர்ப்பிக்கின்ற கருத்துக்களைக் கண்டு மலைத்துப் போகிறவர்களால் கவிதை உலகில் நிலைத்து நிற்க முடிவதில்லை.

பத்திரிகைகளில் அவ்வப்போது எழுதப்படுகின்ற கவிதைகளில் குற்றங்கள் ஏற்படலாம். அதனைச் சுட்டிக் காட்டும் பொழுது ஆத்திரமடைந்தோ, மனம் சோர்ந்தோ விடாமல் இளம் கவிஞர்கள் முன் செல்ல வேண்டும். காலப் போக்கில் அந்தக் கவிதைகளில் நாம் விட்ட குறை குற்றங்கள் எங்களுக்குத் தெரிய வரும். அப்பொழுது அந்தப் படைப்புக்களைச் செப்பனிட்டுக் கொண்டால் நூல் வடிவம் பெறுகையில் பெறுமதியாக அமையும்.

இந்தக் காலத்தில், கவிதைகள் எழுதப்படுகின்ற வேகத்துடன் பத்திரிகைகளில் வெளி வருகின்றன. வந்தவையுடன் வராதவைகளையும் சேர்த்துக் குறுகிய காலத்தில் நூலாசிரியராவதையே குறிக்கோளாகக் கொண்டு அத்தகையோர் செயற்படுவதைக் காணமுடிகிறது.

சிறு சஞ்சிகைகள், இலக்கிய ஏடுகள் தவிர்ந்த செய்திப் பத்திரிகைகள் கூட புதிய கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் உருவாக்கியுள்ளன.


பேராசிரியர் சி.மௌனகுரு, தினகரன் நாளிதழில் வெளிவந்த புதன் மலர் மற்றும் திங்கள் விருந்து போன்ற ஒரு பக்க அனுபந்தங்களில் கவிதைகள் எழுதியே வளர்ந்தார். அவ்வாறு சுதந்திரன், வீரகேசரி, தினபதி, சிந்தாமணி, ஈழநாடு, உதயன், சஞ்சீவி பத்திரிகைகளும் பெருந்தொகையான கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் உருவாக்கியமையை மறுத்துவிடவோ, மறைத்து விடவோ முடியாதல்லவா?

கவிதைகளின் உருவத்தைவிட உள்ளடக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்ததைப் பழந்தமிழ் இலக்கியங்களில் நிறையவே காணலாம்.

இப்பொழுதெல்லாம் எழுதப்படுகின்ற கவிதைகளில் உருவம் மட்டுமல்ல உள்ள பக்கமும் பெறுமதியாக இருப்பதில்லை. ஆகவே ஈழத்துத் தமிழ்க் கவிதைகளின் வளர்ச்சியை- பெறுமதியைக் கூட்டிக்கொள்ள வேண்டிய காலகட்டத்தில் ஈழத்துத் தமிழ் கவிஞர்கள் உள்ளனர்.

அதைவிடுத்து ஒருவரால் முன்வைக்கப்பட்ட கருத்தை, சிந்தனையை வளர்த்தெடுக்க முயலாமல் அவருடைய [illegible] களைப் புரிந்தும் [illegible] கருத்துக்களை முன்வைப்பதால் பயனேதும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேணிபித்தன் ச. அருளானந்தம் எழுதிய 'நல்லதோர் வீணை' (நாவல்) நூல் வெளியீட்டு விழா கடந்த 24 ஆம் திகதி திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் செ. பத்மசீலன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் சி. தண்டாயுதபாணி கலந்துகொண்டார். நூலின் சிறப்புப் பிரதிகளைக் கிழக்கு மாகாண கலாசார உத்தியோகத்தர் க. அன்பழகன், திருகோணமலை மாவட்ட வர்த்தக சம்மேளனத் தலைவர் எஸ். கலைச் செல்வன் ஆகியோருக்குப் பிரதம விருந்தினர் வழங்கி வைத்தார். (ஐ-40)

# பாசையூரில் முதியோர்கள் கௌரவிப்பு




முதியோர் தினத்தை முன்னிட்டு பாசையூர் புனித அந்தோனியார் ஆலய வழிபாட்டுப் பொறுப்பாளர்கள் மற்றும் அன்பிய ஊக்குவிப்பாளர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட முதியோர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது. பாசையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் முதியோருக்காக விசேட திருப்பலி இடம்பெற்றதுடன் தேவாலய முன்றிலில் முதியோர்கள் அனைவரும் அவர்களது பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளால் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் பாசையூர் புனித அந்தோனியார் றோ.க. பெண்கள் பாடசாலை மாணவிகளின் பாண்ட் வாத்திய இசையுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு, தேவாலய மண்டபத்தில் நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இதில் பிரதம விருந்தினராக அருட்தந்தை டேமியன் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக ஜே/64 கிராம உத்தியோகத்தர் திருமதி சோபனாம்பிகை பகீரதனும் கலந்து சிறப்பித்தனர். ஆரம்ப நிகழ்வாக வரவேற்பு நடனமும் வரவேற்புரையும் இடம்பெற்றது. அதனைத்தொடர்ந்து 90 வயதைக் கடந்த முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் திருமதி அருளம்மா, பிரதம விருந்தினராலும், திருமதி தேவசகாயம்பிள்ளை ஞானரெத்தினம் சிறப்பு விருந்தினராலும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். ஆலய திருப்பணியைத் திறம்பட செய்து வந்ததற்காக சூசைதாஸ் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து ரி.எம்.அன்ரனிப் பிள்ளை மற்றும் பாலதாஸ் ஆகியோர் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.



மேலும், பாசையூர்ப் பங்கிலிருந்து ஐந்தாம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்த சிறார்கள், அவர்களின் மதிப்பெண்கள் அடிப்படையில் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து பிரதம விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வின் சிறப்பு நிகழ்ச்சிகளாக பாடல், ஆடல், நாடகம் என்பவை முதியோர்களாலேயே நிகழ்த்தப்பட்ட துடன், அனைத்து முதியோர்களுக்கும் பிரதம விருந் தினர் மற்றும் சிறப்பு விருந்தினரால் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது.

-எ.தமிழினியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்புகளின் சிகரம்
## பரமக்குட்டி கனகரட்ணம்

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய முன்னாள் அதிபரும், அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க முன்னாள் தலைவருமாகிய பரமக்குட்டி கனகரட்ணம் ஒரு சிறந்த கல்விமானும், கூட்டுறவுத் துறைப் பற்றாளருமாவார். அளவையில், சைவசமயப் பாரம்பரியமான அருணாசலம் வித்தியாலய கல்விச் சமூகத்தைத் தளம்பாது மேம்பாடடைய வைத்த அதிபர் வரிசையில், இவர் முக்கியமானவராகப் பதிவு செய்யப்படுகின்றார். சமயத்துக்கும், தமிழுக்கும், கூட்டுறவுத் துறைக்கும் இவர் ஆற்றிய சேவை தூய்மையானதேயாகும். நேர்மை, நியாயம், சமத்துவம், சகோதரத்துவம், கடமை, காருண்யம் ஆகிய பண்புகளை அளவெட்டியில் விதைத்தவர். அருட்கவி விநாசித்தம்பி ஐயா போற்றி வளர்த்த சமய சமூகப் பண்பாட்டு விழுமியங்களை மிகுந்த பயபக்தியுடன் காப்பாற்றிய தோடல்லாது, அடுத்தடுத்துவந்த சந்ததிக்கான பாடசாலை வரலாற் றையும், தொகுத்தும் இவர் ஆவணப்படுத்தியிருந்தார். மாணவர் களின் நன்மையும், நலனோம்பும் கருதி மேலதிகமான வகுப்புக்களுக்கும், உடற்பயிற்சி, விளையாட்டுக்கும் வழி சமைத்தார். கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டம் வரை மாணவர்கள் அறிவிலும் சரி, ஆற்றலிலும் சரி, ஏனைய பாடசாலைகளோடு நிகராகத் திகழ வேண்டும் என்பதற்காக அயராது பாடுபட்டவர். அயல் பாடசாலைகளோடு மிகுந்த அக்கறையோடு அன்னியோன்னியத்தையும், ஆதரவையும் பகிர்ந்து கொண்டவர். நாயன்மார் குருபூசைகள், நவராத்திரி விழாக்கள், நடன சங்கீத அரங்க நிகழ்வுகள் யாவற்றிலும் பாடசாலை சமூகத்தைப் பரவும்படி வேண்டி நின்றவர். ஆங்கிலக் கல்விக்கு ஊக்க மளித்தவர்.


பெருமாக்கட வைப் பிள்ளையார், கும்பிழாவளைப் பிள்ளையார் கோயில் திருவிழாக் காலங்களில், சமய நெறியை மாணவர்கள் கடைப் பிடித்திட ஆவலும், அக் கறையும் காட்டியவர். நாகவரத நாராயணதேவஸ்தான திருவிழாக் காலங்களில் இறைபணிசெய்ய வல்ல தொண்டர் அணிக்கு வழி




சமைத்தவர். உடல் மொழியாலும், உள மொழியாலும் சமூகத்தில் மாற்றத்தைத் தமது நடத்தையால் மாற்றிய இவரது குடும்பம், கல்வி, செல்வம், பதவிகளால் நிரம்பிவழிகிறது. 'கல்வியே கருந்தனம்' என்பது இவரது தாரக மந்திரம். இவரது ஆத்மா சிவபதமடைந்த 17.06.2015 அன்று கல்விச் சமூகம் தனது மேலான அஞ்சலிகளை சிரம் தாழ்த்தி வழங்கியது. இவரது பணியை அளவெட்டி ஒரு போதும் மறக்காமல் ஏற்றிப் போற்றும். இவரது சேவையைக் கௌரவிக்கும் முகமாக அன்னாரது பெயருடன் கூடிய ஒரு அறக்கட்டளை மூலம் உயர்தர வகுப்புக்குத் தெரிவாகும் வசதி குறைந்த மாணவர் ஒருவருக்கு ஆரம்பச் செலவாக ஒரு தொகைப் பணத்தை மேற்படி பாடசாலை பரிசளிப்பு நிகழ்வில் வழங்கிக் கௌரவிக்க முடியும். இது ஒரு சிறந்த வரப்பிரசாதமாக சம்பந்தப்பட்ட மாணவ சமூகத்தால் போற்றப்படும். எனவே, தாய், தந்தையற்ற வீட்டு வசதி இல்லாத ஒரு குடும்பம் இந்தக் கைங்காரியத்தால் புண்ணியம் பெறும். இந்த ஆத்மா சாந்தி பெற தரும காரியங்கள் தாராளமாக ஆற்றப்பட வேண்டும்.

கே.எஸ்.சிவஞானராஜா,

# நினைவுகளின் மீளளிப்பாய் "மீள்நினைவுகள்"



மல்லாவி கஜன்

ஒரு காலத்தில் ஈழத்து இலக்கியப் படைப்புக்களின் உருவாக்கத்தில் பெரும் இடைவெளியொன்று ஏற்பட்டிருந்தது. இதற்குப் பலதரப்பட்ட அகப்புறக் காரணிகள் செல்வாக்குச் செலுத்தியிருந்தன. ஆனாலும், அண்மைக் காலமாக ஈழத்து இலக்கிய வெற்றிடம் மிகவேகமாக நிரப்பப்படுவதுடன் மேலும் விஸ்தரிக்கவும் செய்யப்படுகிறது என்றால், அது மனதுக்கு மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. குறிப்பாக முதுபெரும் கவிஞர், எழுத்தாளர்களுடன் இளம் எழுத்தாளர்களின் ஒன்றிணைவு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அதிகரித்தபடி செல்கிறது. போட்டி நிறைந்த இந்த உலகத்தில், போட்டிகளையும் சமாளித்து போட்டி போட்டபடி நூல்களும், எழுத்தாளர்களும் புத்தூக்கம் பெற்று மிளிர்வது எமது இலக்கியத்துறைக்கு ஒரு கட்டாய தேவையாகவுமே உள்ளது. கடந்த 18 ஆம் திகதி அன்று "மீள் நினைவுகள்" எனும் மகுடமிடப்பட்ட கன்னிக் கவித்தொகுப்பு நூலுடன் இலக்கிய உலகில், எழுத்துலகில் தனது பெயரையும் பதித்து வைத்து விட்டார். "காவலூர் அகிலன்" எனும் எழுத்தாளன். கிளிநொச்சி கனகாம்பிகைக்குளத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர், போர் தந்த வலிகளையும், சமூக விடயங்கள் சிலவற்றையும் கவியூடாக மீள நினைவளித்திருக்கின்றார். **"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ?"** என்று நல்வழியூடாக ஔவையார் நயம் பட உரைத்துப் போனாலும் நாம் பட்ட வலிகளுக்கு வரையறையில்லை. அவை என்றும் எமது அடிமனதில் ஏதோவொரு விதத்தில் உணரப்படவே செய்யும். எத்தனையோ இழப்புக்களைத் தந்து விட்டுப்போன அந்த நாள்களை எவராலும் மறக்க இயலாது. தினம்தினம் எமது மனவெளியில் அவை பவனிவரினும், கவிதைகளாகப் பரிமளிக்கையில் இன்னும் அது வலிமைப்படுத்தப்படும். அதனையே இந்த இளங்கவி காவலூர் அகிலனும் செய்திருக்கிறார். ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கும் போர் விமானமும், வான் குண்டுகளாலும், எறிகணைகளாலும், சன்னங்களாலும் சின்னாபின்னமாய்ப் போன தேசமும், அது தந்த இடப்பெயர்வும், அதனையடுத்து போரால் காணாமற் போனவர்களுக்காய் கதறியழுதும், ஆர்ப்பாட்டங்கள் செய்தும், தினம் தினம் ஏங்கும் உறவுகளின் நிலையும் காட்சிப் படிமங்களாகி அட்டைப்படத்தை நிறைக்க, நடுவிலே "மீள்நினைவுகள்" என அழகுத் தமிழில் பொறிக்கப்பட்டிருக்கிறது. நூலின் தலைப்பு. மாண்டவர்களை எண்ணியும், மரண வாயிலிலிருந்து மீண்டவர்கள் அடைந்த வலிகளை மீட்டியும் மெல்ல மெல்ல மீளப் படும் நினைவுக் கீற்றுக்களாய் பெரும்பகுதி கவிதைகள் நூலை அலங்கரித்துள்ளமை நூல் தலைப்புக்கு அழகும், வலுவும் சேர்க்கிறது. 48 கவிப்பக்கங்களும், உரைகள் உள்ளிட்ட விடயங்களுடன் 14 பக்கங்களும், இரண்டு வெற்றுப்பக்கங்களும் உள்ளடங்கலாக மொத்தம் 64 பக்கங்களைக் கொண்டுள்ளது. இந்த நூலில் போரும், அது தந்த வலிகளும் உள்ளிட்ட விடயங்களும் போரின் பின்னரான எமது வாழ்வியல் மாற்றங்கள் பற்றியதுமான விடயப்பரப்புக்களை உள்ளடக்கும் வகையில் 38 புதுக்கவிதைகளும், ஹைக்ஹூ பாணியில் அமைந்த கவிதைகளும் உள்ளடங்கலாக மொத்தம் 44 கவிதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஊதா நிறத்தாலான வண்ண எழுத்துக்களில் எழுத்தாளனின் ஒவ்வொரு வரிகளும் பதிப்பகத்தால் பதிக்கப்பட்டுள்ளன. வழமையாக இடம்பெறும் "பதிப்புரை" என்ற விடயத்துக்குப் பதிலாக, பதிப்புக்கவி எனும் புதிய விடயம் உள்ளீர்க்கப்பட்டுள்ளது. பலதரப்பட்டவர்களால் வழங்கப்பட்ட 6 வாழ்த்துச் செய்திகளுடன் வே.முல்லைத்தீபனின் "ஒரு கவிஞனின் உள்ளத்திலிருந்து..." எனும் பகுதியும், காவலூர் அகிலனின் என்னுரையும், நூலை வெளியீடு செய்த செல்லமுத்து வெளியீட்டக இயக்குநரும், கனடா படைப்பாளிகள் உலகத்தின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளருமான யோ. புரட்சியின் அட்டைக்குறிப்புடனும், வவுனியா, விஜய் அச்சுப்பதிப்பகத்தாரின் அச்சமைப்பில் அழகுற இந்த நூல் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கவிதைகளுக்கும், அவை கூறும் விடயப்பரப்பை இயைவுபடுத்தி அதற்குப் பொருத்தமான படங்கள் ஒவ்வொரு பக்கங்களின் மேற்புறத்தில் குறிப்பிட்ட பகுதியை அலங்கரிக்க அதன் கீழே கவிதை வடிக்கப்பட்டிருப்பது கவிதைக்கு மேலும் அழகு சேர்ப்பதாய் அமைகிறது.

'தாயே' என மகுடமிட்டு அமைந்திருக்கிறது முதற்கவிதை. தாய் அல்லது தெய்வத்தை நினைத்து முதற் கவிதையை பலரும் அமைப்பதுண்டு. இங்கே தன்னைப் பெற்றெடுத்த தாயை முதற்கவிதையின் மூலம் நினைவுறுத்தியிருக்கும் அகிலன், இரண்டாவது கவிதையைத் தெய்வத்துக்கு சமர்ப்பணம் செய்திருக்கிறார். "தடித்த பையில் துடிக்க முன் பிடித்துத் தாங்கியவள்..." எனத் தொடங்கும் கவிதை, தன்னை ஆளாக்க தனது தாய் பட்ட கஷ்டங்களையும், தாய்மை உணர்வுகளின் வெளிப்பாடுகளையும் உணர்வுபூர்வமாக வடித்திருக்கிறார். "மாறுதல் இந்த ஜகத்தின் முதலாவது விதி" என்றார் பாரதியார். அந்த வகையில் மாறுதல்கள் அவசியமாகின்றபோதிலும், பொருத்தமான மாறுதல்கள் மட்டுமே பொருத்தப்பாடாகின்றன. சமுதாயம், மொழி, அரசியல், சமயம், இலக்கியம், கலை, கலாசாரம், நடையுடை, பாவனை என அனைத்திலுமே மாறுதல்கள் உட்புகுந்து விட்ட நிலையில், அதனைக் கவியாக வடித்திருக்கிறார் அகிலன். "காலம் மாறிப்போச்சு" என்ற மகுடமிடப்பட்ட மூன்றாவது கவிதை இது. தான் கூறமுனைந்த விடயத்தை முதலாவது வரியிலேயே முற்படுத்தி கூறிவிட்டு, அதற்கு வலுச்சேர்ப்பதாய் ஏனைய வரிகளைப் புனைந்திருக்கிறார். குட்டிப்பாவடைகளும், குறையாடைகளின் புனைவும், புற்பாய்களை மறந்து கட்டில் தூக்கமும், மாட்டு வண்டி மறைந்து மாருதிக்காரின் வருகையும், தமிழில் ஊடுருவிவிட்ட ஆங்கிலச் செல்வாக்கும் பற்றி கவிதையில் ஆழப் புகுத்தியுள்ளார். "நாகரிகம் தோன்றல் நன்று அநாகரிகம் இன்றித் தோன்றல் அதிலும் நன்று" என்ற கவிவரிகள் மாறுதலின் தேவையையும், அது முறையாக இருக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி நிற்கின்றன. நூலின் பன்னிரண்டாவது கவிதை "மீள்வரவின் நினைவுகள்" என்பதாகும். முகாம் வாழ்வை முடித்துக்கொண்டு மீள்குடி யேற்றம் மேற்கொள்ளப்பட்டபோது, சொந்த வீடும், ஊரும் இருந்த நிலையைச் சித்திரிக்கும் கவிதையிது. அழகான சந்த அமைப்பில் யதார்த்தமான வரிகளின் கட்டிறுக்கத்தாலும் கவிதை வார்க்கப்பட்டுள்ளது. "காய் பறிக்கும் மரங்களெல்லாம் கருகிக்கீழே கிடந்திச்சு வீட்டுமுன் சந்தியெல்லாம் வெறிச்சுப்போய் அலைஞ்சிச்சு..." என்ற வரிகள் வலியை வலிமையாக்குவதுடன் கூடவே வரிகளுக்கு வலுச்சேர்த்து விடுகின்றன. "மீள்குடியேற்றமும் வந்தாய்ச்சு, ஊர்குடியேற்றமும் ஒதுங்கிப்போச்சு...."

என்ற இறுதி இரு வரிகளும் போரின் முன்னான நிலை, போரின் பின் இருக்கவில்லை என்ற கருத்தை ஆணித்தரமாய் உணர்த்தி வைக்கின்றன. மீள்குடியமர்வு செய்யப்பட்டாலும், மீண்டும் சொந்தவூர் வர எல்லோரும் தயாராயில்லை என்ற செய்தி இதன் மூலம் சுட்டப்படுகிறது. இவ்வாறாக போர்க்கால நினைவுகளைக் கண்ணீருடன் கலந்து கவியாக மீட்டிக்கொண்டிருந்த அகிலன், நட்பின் மீள்நினைவுகளை தனது நூலின் 19 ஆவது கவிதையாக மீட்டியுள்ளார். "நட்பி நினைவுகள்" என்ற தலைப்பில் ஏடு எழுதிக் கற்கத் தொடங்கிய காலத்தில் மலர்ந்த நட்பு, போரினால் துண்டாடப்பட்ட நட்பின் பிரிவு வலி எழுத்தாளனின் தனிப்பட்ட வலியாக இருந்தாலும் கூட, இதனை வாசிக்கும் ஒவ்வொருவரும் அனேகம் சந்தித்த வலியாகவுமிருக்கும். "வீட்டு வாசலது உன்வரவை பார்த் ததடா பா இசைக்க பெட்டியிலே வந்தாயடா.." என்ற வரிகள், நட்பின் வரவுக்காய் வழிமேல் விழி வைத்து காத்திருந்த தருணத்தில், எதிர்மறையாய் நிகழ்ந் தேறிய சம்பவமும், அதனால் நேர்ந்த வலியும் வரிகளாயிருக்கின்றன. இவை வாசகரின் கண்களை ஒருதரம் பனிக்கவும் செய்து விடத் தவறாது. "தோழமைகள் மரிக்காதடா, தோள் சாய்ந்த நினைவுகள் இறக்காதடா.." என்ற இறுதி வரிகளின் மூலம், பிரிவின் வலிக்குள்ளும் ஜனனித்த நட்பின் மகோன்னதம் தொனிக்கிறது. உயிர்போன பின்னும் கல்லறையிலும் நட்புக்கள் வாழும் என்ற செய்தியை வாசகர் முன் உரைத்துள்ளார் அகிலன். அண்மைக் காலமாக எமது சமுதாயத்தில் பெரியதொரு சவாலாக உருவெடுத்துள்ள போதைப் பொருள்களின் பாவனையையும், அதன் விளைவுகளையும் எளிய நடையில் இயம்பியிருக்கிறார். "போதைக்கு அடிமையானால்" என்ற கவிதையூடே. "வீட்டடுப்பு மூட்ட முன்பு அவன் வாயடுப்பு மூண்டு விடும்" என்ற தொடக்க வரிகளே இன்றைய எமது சமுதாயத்தில் போதைப்பொருள்களில் குறிப்பாக பீடி, சிகரெட்டுக்களின் பாவனையின் முக்கியத்துவம் புலனாகிறது. மண்வாசனை மறந்து, அன்னிய தேசம் அடையும் உறவுகளின் நிலை கண்டு, அதனைக் கவியாக மீட்டுகிறார் காவலூர் அகிலன். "நீ ஒருவன் காரணமாய் நாட்டை விட்டு ஓடியதனால் அகதி என்ற அடிமைப் பெயர்...." என்ற வரிகள், இக்கரைக்கு அக்கரை பச்சைகளாய் சுதேச நிலம் விட்டு பரதேசம் செல்லும் உறவுகள் சேகரித்துக் கொள்ளும் அவப்பெயர் 'அகதி' என்பதே என்ற செய்தியை முன்வைக்கிறார் அகிலன். "போகாதே மண்விட்டுபோய்விடுமே சந்தோசம் விட்டு" என நிறைவுறும் இந்தக் கவிதை வெளிநாடுகளுக்குச் செல்லும் உறவுகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக மிளிர்வதுடன், நூலில் 30 ஆவது கவிதையாகவும் அலங்கரிக்கிறது. சாதாரண கவிதைகளுடன், ஹைஹூ பாணியிலான கவிதைகளையும் எழுதும் ஆற்றலைப் புலப்படுத்தியிருக்கிறார் அகிலன். நூலின் 46,47 ஆம் பக்கங்களில் ஊமை, நதி, மது, தாலி, கடிதம் ஆகிய தலைப்புக்களிலான 5 ஹைக்ஹூ கவிதைகள் காணப்படுகின்றன. "மாங்கல்யம் எனும் பேரில் பெண்ணை மடக்கிப்போட்டிருக்கும் வேலி" இது தாலி என்ற மகுடத்திலான ஹைக்ஹூ கவிதை. அருமையான வரிகள். நறுக்கென உரைத்திருக்கிறார். அச்சொட்டாய் வாசகரின் நெஞ்சை அள்ளிவிடும் வகையில் போர்க்காலச் சூழலில் நடைபெற்ற கடத்தல் சம்பவம் தொடர்பிலான ஒரு நினைவை "ஒரு அன்னையின் கதறல்" என்ற தனது இறுதிக் கவிதையூடாக வரைந்துள்ளார் அகிலன். தீயசெயல்கள் எதிலும் நாட்டமற்ற தனது பிள்ளை, பாடசாலை சென்று இரண்டு நாள்கள் கடந்தும் வீடு சேராத நிலையில், தனது பிள்ளையின் அங்க அடையாளங்களைக் கூறிப் புலம்பியழும் தாயொருத்தியின் ஏக்கத்தைப் பதிவாக்கி தனது நினைவுகளின் மீள்படுத்தல்களை நிறைவு செய்து, தொடர்ச்சியை வாசகர்களிடம் பொறுப்பளித்து விடுகிறார் நூலாசிரியர். வலிகளை வாழ்வாக்கியவனுள் ஒருவனாய் தன்னையும் மாற்றிய சூழல்களை மீளநினைவுறுத்தி அதனைப் பொருத்தமான சொல்லாட்சிகளின் புனைவுடன் புடம்போட்டுக் கவிதையாகத் தந்திருக்கும் காவலூர் அகிலனின் கவிதைகள் அத்தனையும் அருமை. புதுக்கவிதைகள் சந்தங்கள், ஓசை நயங்கள் இன்றி அமைதியாய், வசன நடையில் பயணிக்கும் என்ற நிலையை மாற்றி, அத்தகைய விடயங்களை மரபுக் கவிதைகளிலிருந்து நுகர்ந்து பிடித்துத் தனது கவிதைகளிலும் களமிறக்கியுள்ளார். மிகமிக எளிய சொற்பதங்களின் கையாட்சியுடன் கவிதைகள் நகர்கின்றன. எதுகை, மோனை அணிகளின் நிறைவாயிருக்கிறது. அளவான அடிவரையறையோடு கவிதைகள் நகர்கின்றன. குறியீட்டு வடிவிலான சில கவிதைகளைச் சேர்த்திருப்பின் நூல் மேலும் மெருகூட்டப்பட்டிருக்கும். அத்துடன் சொல்நடைகளிலும் சில மாற்றங்களைச் செய்திருக்கலாம். சில வரிகளின் அமைப்பிலும் மாற்றங்கள் தேவை. இது பதிப்பில் ஏற்பட்ட குறையோ அல்லது மூலப்பிரதிகளில் ஏற்பட்ட தவறோ தெரியவில்லை. சில வரிகள் பிரித்து கீழிறக்கப்படாமல் மேல்வரியோடு ஒட்டிக்கிடக்கின்றன. இதனால் கவிதை நடையிலும், சுவையிலும் தாக்கம் ஏற்படுகின்றது. வறுமையின் வலிகளுடன், ஈழத்துக் காவலர்கள், பசி முதலான கவிதைகளைக் குறிப்பிடலாம். உரைகளிலும், கவிதைகளிலும் ஆங்காங்கே எழுத்துத் தவறுகளும் இருக்கச் செய்கின்றன. ஈழத்துக் காவலர்கள் என்ற கவிதையில் சற்று அதிகமாக எழுத்துத் தவறுகள் இருக்கின்றன. கவிதைகளுக்குத் தொடரிலக்கம் வழங்கப்படவில்லை. அதுபோல் உள்ளே உள்ள அந்தக் கவிதைகளுக்கும் இலக்கங்கள் குறிப்பிடப்படவில்லை. இத்தகைய ஒரு சில குறைகளையே சுட்டிக் காட்ட முடிந்தாலும் ஒட்டுமொத்த நோக்கில் நேர்த்தியாக அமைந்திருக்கிறது. மேலும், பல படைப்புக்களை இலக்கிய உலகுக்கு "காவலூர் அகிலன்" வழங்க வேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org